Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16+24 | விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 280 ஆவணி 20 ஆம் நாள் சனிக்கிழமை 05 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



**முச்சந்தி முரளி**

"எத்தினை முனையில அடிச்சாலும் மொட்டுக்காரர் மல்ரிபரல் அடிச்சு வெல்லக்கூடிய ஆக்கள் கண்டியளோ"

### பொலிஸாரின் தாக்குதலில்

## காயமடைந்த இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணப் பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்த இளைஞர்கள் மூன்று பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று அதிகாலை சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் தலைப் பகுதியிலும் உடம்பிலும் பல்வேறு காயங்கள் காணப்படுவதுடன் ஓர் இளைஞ 15 ➤

## ராஜபக்சக்களின் சர்வாதிகார ஆட்சியின் ஆரம்பமே '20'ஆம் திருத்த சட்டவரைவு

### ஐக்கிய மக்கள் சக்தி ஆவேசம்

கொழும்பு, செப். 5

சர்வாதிகார ஆட்சியை நோக்கிப் பயணிப்பதற்கான ஆரம்பமே அரசமைப்பின் 20ஆவது திருத்தம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திவிமர்சித்துள்ளது. அரசமைப்பு பேரவை இல்லாமல் செய்யப்பட்டதன் ஊடாக உயரிய சுயாதீன நிறுவனங்களுக்கு தமது விசுவாசிகளை நியமிக்கக் கூடிய வாய்ப்பு ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. இது பயங்கரநிலைமையாகும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடை 15 ➤

### '13' திருத்தத்தின் எதிர்காலம்:

# சிறப்புத் தூதுவர் மூலம் கையாள டில்லி முயற்சி

கொழும்பு, செப்ரெம்பர் 5

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு புதிய அரசமைப்பை உருவாக்கவுள்ள நிலையில், அதில் மாகாண சபைகளின் நிலை குறித்து ஆராய்வதற்காக இந்தியாவுடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்களை நடத்த ஆளும் தரப்பு தயாராகி வருகின்றது. இந்தியாவின் சிறப்புத் தூதுவர் ஒருவர் இந்த விடயங்களைக் கையாளவும் நியமிக்கப்படவுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. 15 ➤

## 20ஆம் திருத்தத்துக்கு எதிராக இரு முனைத் தாக்குதல்!

*கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளுடன் பேச்சு நடத்தவும் சஜித் தரப்பு முடிவு*

கொழும்பு, செப். 5

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு திருத்தங்களை முன்வைப்பதற்கு தீர்மானித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, இது தொடர்பில் சட்ட நிபுணர்களுடனும் ஆலோசனை நடத்திவருகின்றது.

20 தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் வெளியான பின்னர், நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத் தின்போது திருத்தங்களை முன்வைக்கமுடியும். அவ்வாறு முன்வைக்கப்படும் திருத்தங் களை ஆளுங்கட்சி ஏற்கமறுக்கும் பட்சத்தில் '20' இற்கு எதிராக வாக்களிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது என்று அறியமுடிகின்றது.

'20' இல் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பிலும், கூட்டாக எதிர்ப்பை வெளியிடுவது சம்பந்தமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணி 15 ➤

## மொட்டு – கை கூட்டில் ஆட்டம்

கொழும்பு, செப். 5

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீள்பரிசீலனை செய்யும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரும் முன்னாள் பொதுச்செயலருமான பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசு தனது பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் பல தன்னிச்சையான தீர்மானங்கள் எடுத்துள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்த 15 ➤

## கொடுங்கோல் ஆட்சிக்கே 20ஆவது திருத்தம்

### அடித்துக் கூறுகின்றார் ஹர்ச டி சில்வா



கொழும்பு, செப். 5

ஜனாதிபதி - பிரதமர் தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசு தனது கொடுங்கோல் ஆட்சிக்கே அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 15 ➤

## '20' விவகாரத்தால் சு.கவுக்குள் பிளவு

### ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தலைவர்; கடுமையாக எதிர்க்கின்றார் ஆலோசகர்



கொழும்பு, செப். 5

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத் 15 ➤

உள்ளே சஞ்சீவி

## வாள்வெட்டுச் சந்தேகம்: மூவர் நேற்றுக் கைது!



யாழ்ப்பாணம், செப். 5

சமூகவிரோத செயற்பாடுகளான வாள்வெட்டு, கொள்ளை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவர் அச்சுவேலி பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டி பகுதியிலிருந்து புத்தூர் கலைமதி வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் இருவரை புத்தூர் கலைமதி பகுதி இளைஞர்கள் மடக்கி பிடித்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இருவர் பொதுமக்களினால் பிடிக்கப்பட்ட நிலையில் மேலும் ஒருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டு பேர் கொண்ட குழுவில் மூவர் பொலிஸ் பிடியில் உள்ள நிலையில் தப்பிச் சென்ற ஐவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 15 ➤

# 20ஆவது திருத்தத்தை ஆதரிப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பானது

## எதிர்க்கிறோம் என்கிறது ஜே.வி.பி

**கொழும்பு, செப்.5**

**ஜனநாயகத்துக்கு எதிரான அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவளிப்பதானது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும். எனவே, குறித்த சட்டமூலத்தை எதிர்க்கின்றோம் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களில் ஏதேனும் சிக்கல் இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்து, ஆணைக்குழுக்களை மேலும் பலப்படுத்தும் வகையிலான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். அதனைவிடுத்து 20இன் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையை ஜனாதிபதி முழுமையாக ஆக்கிரமிக்கும் விதத்தில் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. உயர்பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி வசம் இருப்பதால் சுயாதீனத்தன்மை தொடர்பான சந்தேகமும் எழுகின்றது. எனவே இதற்கு நாம் எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

நீதிமன்றத்தை நாடுவது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை -என்றார். (ஐ-44)

# ரயில் கடவையை கடந்தவருக்கு ரூ.25,000 தண்டம்

சாவகச்சேரி.செப். 5

ரயில் வருவதற்கான அபாய சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டு மூடப்பட்ட கடவையை கடந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் கச்சாய் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து உயர் ஆபத்து ஏற்படக்கூடாது என்பதற்காகவே அபாய ஒலி எழுப்பப்படுகிறது. அத்துடன் கடவையைக் மூடிய பின்னர் கடவையைக் கடப்பது தற்கொலை முயற்சியாகவும் கருதப்படுகிறது. அவ்வாறு கடப்பது தண்டக்குரியகுற்றம் என நீதிபதியால் எச்சரிக்கை செய்யப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வாரமும் இவ்வாறானதொரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# ஸஹ்ரான் என்ற தீவிரவாதிக்கும் எனக்கும் தொடர்பு இல்லை!

## ஹக்கீம் விளக்கம்

கொழும்பு, செப். 5

உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்திய ஸஹ்ரான் குழுவுக்கும் எனக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகி சாட்சியமளித்த பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து எமக்கு தெரிந்த விடயங்களை வாக்குமூலமாக தெரிவிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனக்கெதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் இருந்த நிலையில் அது குறித்தும் தெளிவுபடுத்தலை செய்தேன். விசேடமாக ஸஹ்ரானின் சகோதரன் மருத்துவமனையில் இருந்தபோது நான் சென்று பார்த்ததாக குற்றச்சாட்டு உள்ளது.

எனினும் அன்றைய காலத்தில் மட்டக்களப்புக்கு மரண விசாரணையைப் பார்க்கச் சென்றபோது பொலிஸ் உயரதிகாரிகளுடன் நானும் அங்கு சென்றதாகவும், காத்தான்குடி பிரதேசத்துக்கும் சென்றதாகவும் ஒளிப்பட ஆதாரங்களுடன் நான் இன்று சமர்ப்பித்தேன்.

என்மீது பிழையான தோற்றத்தை ஏற்படுத்தவே எதிரணியினர் கூறிய கட்டுக்கதைகள் இவை ஆகும். காத்தான்குடிக்கு சென்று மக்களைச் சந்தித்தபோது மக்களோடு மக்களாக இந்த தீவிரவாதியும் இருந்தார் என்பதை என்னால் தனிநபராக அடையாளம் காணமுடியவில்லை. என்னுடன் உயர் பொலிஸ் அதிகாரிகளும் இருந்தார்கள். எந்தவொரு இரகசிய சந்திப்புகளும் அந்த தரப்புடன் நான் செய்யவில்லை. ஸஹ்ரான் அதன் பின் தீவிரவாதியாக உருவெடுப்பார் என்பது அன்று எமக்குத் தெரியாது.



விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தப் பேச்சு காலத்தில் நானும் கலந்து கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட ஒளிப் படங்களை சிலர் வைத்துக் கொண்டு இயக்கத்துடனும் எனக்கு தொடர்பிருப்பதாக கட்டுக்கதைகளைத்திரிபுபடுத்தியுள்ளனர். இதுபோன்ற செயற்பாடுகளே இந்த விவகாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

இஸ்லாமிய ஷரியா சட்டம் என்பது இலங்கையில் நடைமுறையில் இல்லை. சிறு குற்றங்களை வைத்துக் கொண்டு முஸ்லிம் எதிர் அமைப்புக்களே போலியான சில கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இந்த ஸஹ்ரான் விவகாரத்திலும் வெளிக்கள சக்திகளும் உதவிபுரிந்துள்ளன. அவர்கள் யார் என்பதே இன்று அறிந்துகொள்ள வேண்டும், என்றார். (ஒ,5,44)

# கல்வியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

2018ஆம் ஆண்டு வெளியான க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைவாக தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு 2020ஃ2021 கல்வியாண்டில் மாணவர்களை உள்வாங்கும் செயற்பாடுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் முழுமை செய்து கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப் பங்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பபட வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலதிக தகவல்களை 011 27 87 303, 011 27 87 385 மற்றும் 011 27 87 397 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-5)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அச்சுறுத்தும் வெடிபொருள்கள்

மயிலிட்டியில் காணி ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது என காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். மயிலிட்டி துறை முகத்தை அண்மித்த கடற்கரை பகுதியில் உள்ள தனியாரின் காணியிலிருந்து இந்த கைக்குண்டு மீட்கப் பட்டுள்ளது.

காணி உரிமையாளர் பெக்கோ வாகனத்தின் உதவியுடன் துப்பரவு பணியை மேற்கொண்டிருந்தார். இதன் போது போர்க் காலத்தில் பயண்படுத்தப்பட்ட வெடிக்கும் நிலையில் இருந்த கைக்குண்டு ஒன்று மண்ணுக்குள் இருந்து மேல் வந்துள்ளது.

இது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு சென்ற பொலிஸார், கைக்குண்டை நிபுணர்களின் உதவியுடன்மீட்டெடுத்து சென்றுள்ளனர்.

மக்களின் மீள்குடியேற்றதுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் காணிகளைத் துப்பரவு செய்யும் போது கைக்குண்டுகள், வெடிபொருள்கள் மீட்கப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. (ஒ,5,25)

# சாரதிகள் இருவருக்கு தலா ரூ. 2 லட்சம் தண்டம்

**ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த இரு வாகனச் சாரதிகளுக்கு தலா 2 லட்சம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.**

கொரோனா பரவுவதால் மக்கள் நடமாட்டத்தைத் தவிர்க்குமாறு அறிவித்துள்ள நிலையில் சட்ட விரோதமாக அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த போது பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்குகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# காணி கையகப்படுத்திய இராணுவத்திடம் 50 கோடி ரூபா இழப்பீடு கோரி வழக்கு!

## தாக்கல்செய்தார் தனியார் காணி உரிமையாளர்

**கொழும்பு, செப். 5**

**ஹற்றன் – கொட்டகல, கொமர்ஷல் பகுதியில் தனியார் காணியை இராணுவத்தினர் அத்துமீறி கையகப்படுத்தியுள்ளமையால், இராணுவத்தினரிடம் 50 கோடி ரூபா இழப்பீடு கோரி காணி உரிமையாளர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.**

**மனுதாரர் சார்பில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.**

இந்த வழக்கு ஹற்றன் நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்கர பெர்னாண்டோ, 02 கேணல்கள், மேஜர் ஒருவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பிரதிவாதிகள் மன்றில் முற்படவேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த காணி அபகரிப்பு தொடர்பான வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இராணுவத்தினருக்கு எதிராக பிறிதொரு வழக்கும் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில்தாக்கல்செய்யப்பட்டது. இந்தமனுதொடர்பானவிசாரணையும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் காணப்பட்ட சில கட்டடங்களையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர் என்று பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொரோனாவைரஸ்தொற்றுஅதிகரித்தகாலப்பகுதியில்தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் அந்தப் பகுதியை இராணுவ முகாமாக மாற்றியுள்ளனர் என்றும் இதற்கு எந்தவித அனுமதியையும் காணி உரிமையாளரிடம் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின் அனுமதியின் பிரகாரம் 50 வருடங்கள் குத்தகைக்கு பெற்ற குறித்த காணியை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் மீளக் கையளிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

ஹற்றன் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பைகொண்டஇந்தகாணியில் தொழிற்சாலை இயந்திரங்களைத் திருத்தும் பணிகளுக்கான நிலையம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

---

## வடக்கு விவசாயிகளின்

# உ. கிழங்கு செய்கைக்கு அரசு ஒத்துழைக்கும்

வடக்கு விவசாயிகள் சுமார் 200 ஹெக்ரேயரில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், அவர்களுக்கு தேவையான உருளைக் கிழங்கு விதைகளை இலகுவாக பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த புதன் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயத்தை அமைச்சரவையின் கவனத்துக்கு அமைச்சர் கொண்டுவந்தார்.

எதிர்காலத்தில் உருளைக் கிழங்கின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தின்பண்டங்களை உற்பத்தி செய்யும் சர்வதேச தரத்திலான தொழிற்சாலைகளைநிறுவி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அவரின் கருத்துக்களை வரவேற்ற ஜனாதிபதி, விவசாய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தற்போதைய அரசின் நோக்கங்களில்ஒன்று. வடக்குவிவசாயிகளின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் தேவையான உருளைக் கிழங்கு விதைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று என்று உறுதியளித்துள்ளார். (த)

---

# மயங்கிய முதியவர் சாவு

சாவகச்சேரி, செப். 5

வீட்டில் மயங்கி வீழ்ந்த முதியவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நுணாவில் மேற்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதே பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் நடராசா (வயது 73) என்பவரே உயிரிழந்தார்.

அவர் மதிய உணவு அருந்தி பின்னர் சிறிது நேரத்தில் நெஞ்சு வலிப்பதாகக்கூறி மயங்கி வீழ்ந்துள்ளார். சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுசென்ற போது அவர் உயிரிழந்துவிட்டார் என்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. (த-9)

---

# இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் திட்டமிட்ட சீன இராணுவத் தலையீடு

## குற்றஞ்சாட்டுகின்றது ‘பென்டகன்’

இலங்கை உள்ளடங்கலாக குறிப்பிட்ட சில நாடுகளில் இராணுவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு சீனா திட்டமிட்டு வருவதாகவும், அதனூடாக தனது மக்கள் விடுதலை இராணுவத்தை அந்த நாடுகளுக்கு அனுப்பிவைத்து மிகவும் விரிவான - நிலைபேறான இராணுவ ஆதிக்கத்தை அடைந்துகொள்வதற்கு சீனா முயற்சிக்கின்றது என்று பென்டகன் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் தமக்குரிய கட்டமைப்பு ரீதியான வசதிகளை நிறுவுவதற்கு சீனா முற்பட்டுவரும் அதே வேளை, மக்கள் விடுதலை இராணுவத்தை அனுமதிப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளையும் உருவாக்குவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ஜிபூரியில் தற்போது இராணுவத்தளமொன்றைக் கொண்டிருக்கும் சீனா கடல்மார்க்க, ஆகாய மார்க்க மற்றும் காலாட்படை ஆகியனவற்றுக்கு உதவியளிக்கக்கூடிய வகையில் மேலும் பல்வேறு கடல் கடந்த நாடுகளில் இராணுவத்துக்கு வசதியளிக்கும் கட்டமைப்புக்களை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகின்றது.

‘2020 இல் மக்கள் சீனக்குடியரசு தொடர்புபடும் இராணுவ மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள்’ என்ற தலைப்பிலான தமது வருடாந்த அறிக்கையை பென்டகன் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பித்திருக்கிறது. சீனா தனது இராணுவத்திற்கு வசதியளிக்கும் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு மியன்மார், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, பாகிஸ்தான், இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா, சீஷெல்ஸ், தன்சானியா, அங்கோலா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் மீது கவனம் செலுத்திவருகின்றது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இவற்றின் மூலமாக அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்கப்படலாம் என்றும் பென்டகன் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (த)

---

# இரு நூல்களின் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், செப். 5

இராஜினிதேவி சிவலிங்கத்தின் இரண்டு நூல்கள் வெளியீடு யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

‘உதாரணம் எனது பெண்மை (சிறுகதைத் தொகுப்பு), இராஜினிதேவி சிவலிங்கத்தின் பல்துறைசார் தொகுப்பு’ ஆகிய நூல்களே வெளியிடப்படவுள்ளன.

பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வெளியீட்டுரையை ஜீவநதி பிரதம ஆசிரியர் க. பரணீதரன் நிகழ்த்துவார். கருத்துரைகளை பேராசிரியர் சி. சிவலிங்கராஜா மற்றும் கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் அ. பௌநந்தி ஆகியோர் நிகழ்த்துவர். (த)

---

# 21 இல் ஆரம்பிக்கும் தமிழ்த்தேசிய எழுச்சி நடைப்பயணம்

தாயக விடியலுக்காக தன்னுயிர் தந்து தரணிவாழ் தமிழரின் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் தியாக தீபம் திலீபன் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்த் தேசிய எழுச்சி நடைப்பயணத்தை தாயக இளையோர் சமூகத்தினர் முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த நடைப்பயணம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியிலிருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்ப மாகி எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் அண்ணாவின்நினைவாலயத்தில்நினைவஞ்சலியுடன் நிறைவடையவுள்ளது.

குறித்த நடைப்பயணத்துக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசிய கட்சிகளின் இளையோர் அணியினர் ஒத்துழைப்பு வழங்குகின்றோம் என்று தெரிவித்துள்ளனர். (த)

# போதைப்பாவனையை தடுக்க விமானப்படை களமிறக்கம்!

கொழும்பு, செப். 5
தெற்காசியப் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை என்பவற்றைத் தடுக்க இலங்கை விமானப் படை களமிறக்கப்பட்டுள்ளது.
இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் போதைப்பொருள் கடத்தல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விமானப் படை தளபதி ஏர் மார்ஷல் சுமங்கலா டயஸின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதன்படி, பகல்நேர மற்றும் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படும் கண் காணிப்பு நடவடிக்கைகளை விமானப்படை அதிகரித்துள்ளது. (ம)

# மின் தாக்கி ஐவர் காயம்

திருகோணமலை, செப். 5
திருகோணமலை சீனக்குடா விமானப் படை முகாமில் மின்சாரம் தாக்கிய நிலையில் ஐவர் திருகோணமலை பொதுமருத்துவமனையில் நேற்று காலை சேர்க்கப்பட்டுள்ளனர். திருகோணமலை சீனக்குடா விமான படை முகாமில் நிகழ்வொன்று இடம்பெற உள்ளதாகவும் இந்த நிகழ்விற்கு அழகுபடுத்துவதற்காக ஏணியை எடுத்துச் சென்றபோது மின்சாரம் தாக்கியதாகவும், இதனையடுத்து ஐந்து விமான படைச் சிப்பாய்களையும் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. சீனக்குடா விமானப் படை முகாமில் கடமையாற்றி வரும் தர்மேந்திரா (24 வயது), விக்ரமசிங்க (26 வயது), ரத்னசிறி (31 வயது), பிரதீப் குமார (31 வயது), திலகசிறி (39 வயது) ஆகியோரே அவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களாவர். (ம-இ)



# பிரேமலாலுக்காக மேன்முறையீடு!

கொழும்பு, செப். 5
மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவிற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு அனுமதிகோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நபரொருவரை சுட்டுக்கொன்றமைக்காக அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரேமலால் வெற்றிபெற்றிருந்தார். எனினும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி என்பதால் அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.
இந்த நிலையிலேயே பிரேமலால் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ம)

# பலமான ஆட்சிக்காகவே ஜனாதிபதிக்கு அதிகாரம்

*வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு*

**கொழும்பு, செப். 5**
**பலமான அரச நிர்வாகத்தை முன்னெடுக்கவே ஜனாதிபதிக்கு முழுமையான நிறைவேற்று அதிகாரம் 20ஆவது திருத்தம் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அனைத்து இன மக்களின் அரசியல் அபிலாசைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனநாயக இடதுசாரிமுன்னணி சார்பில் அரசமைப்பு வரைபு தொடர்பான விசேட குழுவினரிடம் முன்வைத்துள்ளோம்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தம் முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. 19ஆவது திருத்தம் பலவீனமான அரச நிர்வாகத்துக்கு பிரதான காரணியாக அமைந்தது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்களுக்கு யார் பொறுப்பு கூற வேண்டும் என்ற முரண்பாடுகள் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் 20ஆவது திருத்தத்தில் ஒருபோதும் ஏற்படாது.
முத்துறை அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளதால் அரச நிர்வாகம் பலமாக செயற்படும் என எதிர்பார்க்கிறோம். அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை கடந்த அரசாங்கம் முறையற்ற விதமாகவே இரத்துச் செய்தது. திருத்தம் இரத்து செய்யப்பட்டு புதிய திருத்தம் கொண்டு வருவதற்கான காரணிகள் குறிப்பிடப்படவில்லை. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஒரு வாரத்தில் நிறைவேற்றப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் வழங்கிய வாக்குறுதியின் காரணமாகவே 19ஆவது திருத்தம் நிறைவேற ஆதரவு வழங்கினோம். ஒரு வாரம் என்று காலக்கெடு விதித்தவர். 4 ஆண்டு காலம் கடந்தும் 20ஆவது திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. நாட்டுக்கு பொருந்தும் விதத்திலான அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவருவோம் என இரண்டு பிரதான தேர்தல்கள் ஊடாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி 20ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது - என்றார். (ம

# மோட்டார் சைக்கிள் திருடியவர் கைது!

கிளிநொச்சி, செப்.5
இசை நிகழ்ச்சி ஒன்றில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஒலி பெருக்கிச் சாதனம் என்பன பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் உள்ள அம்மன் ஆலயத் திருவிழாவின் இறுதி நாளன்று இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்ட ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றும் திருடப்பட்டிருந்தன. மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் வயர்கள் கழற்றப்பட்டு மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்து.
இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் பளை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினர் திருடப்பட்ட பொருள்களை முல்லையடியில் மீட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-6)

# வெளிவிவகார அமைச்சருடன் தூதுவர்கள் கலந்துரையாடல்

கொழும்பு, செப். 5
கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய குழுவின் தூதுவர் டெனிஸ் செய்பி மற்றும் இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்களும் ருமேனியா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் துணைத் தூதுவர்களும் மரியாதை நிமித்தமாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசியுள்ளனர்.
வெளிநாட்டமைச்சின் மீள்நிய மனத்தையொட்டி தூதுவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். இலங்கையுடன் நெருங்கிய கூட்டுறவைத் தொடர்ந்து பேணுவதிலான தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தினர். இலங்கை ஏற்றுமதிகளின் முதன்மை சேரிடமாகவும் வெளிநாட்டு நேரடி மூலதனம் மற்றும் சுற்றுலாத்துறைக்கான ஒரு பிரதான மூலமாகவும் ஐரோப்பா இருப்பது இந்தச் சந்திப்பில் குறிப்பிடப்பட்டது. இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய அபிவிருத்தி உதவியின் நிலைப்பாடு தொடர்பிலும் கலந்துரையாடி, அரசின் பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு உதவும் தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தினர். அவர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் நடைபெற்று வரும் விவசாய, தொழிற்பயிற்சி, உணவுப் பாதுகாப்பு மற்றும் பிற செயற்றிட்டங்கள் தொடர்பாக சுருக்கமாக எடுத்துக்கூறினர். (கு)



50 மில்லியன் பெறுமதியான

# கொரோனா பரிசோதனை கருவிகள் அன்பளிப்பு

கொழும்பு, செப்.5
கொகோகோலா நிறுவனமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து 16,800 பி.சி.ஆர். பரிசோதனை கருவிகள் மற்றும் 17 ஆயிரம் வி.ரி.எம் கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளன. இவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்து கையளிக்கப்பட்டன. 50 மில்லியன் ரூபா பெறுமதியான இக் கருவிகள் கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் 6 வைத்தியசாலைகளுக்கு வழங்கிவைக்கப்படவுள்ளன. (வ)

# முன்பள்ளிச் சிறாருக்கு கற்றல் உபகரணங்கள்



வவுனியா, செப்.5
வவுனியா, செட்டிக்குளத்தில் அமைந்துள்ள கலைவாணி முன்பள்ளிச் சிறார்களுக்குத் தமிழ் நிலம் அமைப்பின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் அனுசிகன் என்பரின் 17ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோகரன் தலைமையில் இவை வழங்கப்பட்டன.
அதேவேளை, செட்டிக்குளம், சண்முகபுரம் கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு பால்மா பெட்டிகளும் வழங்கப்பட்டன. இத்தாலியில் வசிக்கும் சுகாகரன் யசிந்தா என்பவரின் பிறந்தநாளை முன்னிட்டு இத்தாலி மனிதநேய சங்கத்தின் பொறுப்பாளர் ம.கிருபாகரனின் ஒழுங்கமைப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (எ-110)

# போதைக்குள் மூழ்கும் தேசம்

"கிளிநொச்சியில் மட்டும் சுமார் 40 க்கும் மேற்பட்ட ஹெரோய்ன் வியாபாரிகள் இருக்கிறார்கள்" என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கின்றனர் பொலிஸார். முன்னரெல்லாம் கொழும்பு போன்ற நகரங்களிலேயே ஏதேனும் பாதாள உலகக் குழுக்களிடம் மட்டுமே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த அதிபயங்கர போதைப்பொருளான ஹெரோய்னை கிளிநொச்சியில் இப்போதுசாதாரண பெட்டிக்கடையில் தீப்பெட்டி வாங்குவதைப் போல சுலபமாகப் பெறக் கூடியதாக உள்ளதென அந்தப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர். கிடைப்பதற்கு எளிதென்பதாலேயே அங்கு ஹெரோய்ன் பாவனையும் அதிகரித்திருக்கிறது. இப்படி கிளிநொச்சி போன்ற நகரப்பண்புக்கும், கிராமப் பண்புக்கும் இடையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் இடங்களில் போதைப்பொருள் வியாபாரிகள் வகை தொகையின்றிப்புழுத்துப் போனமைக்கு அடிப்படைக் காரணம் வறுமை. போதைப்பொருள் சூத்திரதாரிகள் வறுமையின் பிடியில் உழல்வோரை இனம்கண்டு அவர்களுக்கு ஆசை வார்த்தை காட்டுகின்றனர். போதைப்பொருள்களை விற்றால் மிகக்குறுகிய காலத்துக்குள் அவர்களின் வறுமை நீங்கிவிடும் என்ற ஒரு காரணத்துக்காக பின்விளைவுகளைப் பற்றியோ, சமூகப் பாதிப்பு பற்றியோ எந்தவிதமான பிரக்ஞையும் இல்லாமல் அவர்களும் போதைப்பொருள்களை விற்கச்சம்மதித்து விடுகின்றனர். இதனால் பொலிஸார் போதைப்பொருள்களுடன் விற்பனை செய்பவர்களைக் கைது செய்தாலும்,சூத்திரதாரிகள் தப்பித்து விடுகின்றனர். பின்னர் வேறு நபர்களை தங்கள் விற்பனையாளர்களாக்குகின்றனர். இப்படி ஒரு தடையறா வலையமைப்போடு போதைப்பொருள் வியாபாரம் கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பகுதியில் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளது. மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கும் இவ்வாறு போதை வியாபாரிகள் பெருகியமையே காரணம் எனச் சொல்லப்படுகின்றது. எந்தவொரு பண்டத்துக்கும் கேள்வி குறையும்போது விலையும் குறையும். முன்னர் ஒரு சில போதைவியாபாரிகளே இருந்தார்கள். அதனால் மிக அருந்தலாகவே அதைப் பெறவேண்டியிருந்ததால் அவற்றின் விலையும் உச்சமாக இருந்தது. இப்போதோ பொலிஸ் சொல்வதைப் போல ஒரே இடத்தில் 40 போதைப்பொருள் வியாபாரிகள் இருப்பதால் அவற்றை வாங்க வருவோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததால், ஹெரோய்ன் விலையும் குறைந்துவிட்டதாம். விலை மலிவு, கிடைப்பது சுலபம் இந்த இரண்டு காரணங்களும் போதுமே, ஹெரோய்ன் பல்கிப் பெருகுவதற்கு.

"எங்கள் இளைய தலைமுறை இப்படிச் சீரழிகிறதே" எனப் புலம்புவதால் ஆகப்போவதொன்றுமில்லை. அத்தோடு போதைப்பொருள் நுகர்வோரைப் பிடிப்பதாலும் அதன் பாவனையைக் கட்டுப்படுத்தமுடியாது. ஒருமரத்தை இல்லாமல் வேண்டுமானால் அதன் ஆணிவேரைக் கண்டறிந்து அழிக்க வேண்டும். ஆனால் இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அதெல்லாம் சாத்தியப்படக்கூடிய விடயமல்ல. எனவே குறைந்தபட்சம் பக்க வேர்களாக வியாபாரிகளை அந்தத் தொழிலில் இருந்து மீட்க வேண்டும். வறுமைதானே அவர்களை இப்படிப் பாதகமான தொழிலில் ஈடுபட வைத்தது. எனவே முதலில் அவர்களின் வறுமையைப் போக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, எதிர்காலத்திலும் போதைப்பொருள் வியாபாரிகள் உருவாகாமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். அத்தோடு ஹெரோய்ன் பாவனையாலும், விற்பனையாலும் ஏற்படும் சமூக, பொருளாதார பாதிப்புக்களை மக்களிடம் கொண்டு செல்வதோடு, இளைய தலைமுறை மீதான பெற்றோரின் கண்காணிப்பும் சரியாக அமைந்தால் போதையில் இருந்து அவர்களை மீட்பது சுலபம். அவ்வாறில்லாமல் தொடர்ந்தும் போதைப்பொருள் நுகர்வோரையும், வறுமையைப் போக்க போதைப்பொருள் வியாபாரிகளாக மாறியோரையும் கைது செய்தாலே எல்லாம் சரியாகிவிடும் என எண்ணிக் கொண்டிருந்தால், மிக விரைவிலேயே தமிழர்களின் கலாசாரப் பூமி, களிசறைப் பூமியாகி போதைக்குள் மூழ்கி விடக்கூடும். வருமுன் காப்போம்.

# 13ஆவது திருத்தச் சட்டத்தால் ஆளுங்கட்சிக்குள் கடும் சமர்

கொழும்பு, செப். 5

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமை நீக்கப்பட வேண்டும் என மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர முன்வைத்துள்ள கருத்துக்கு ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவின் மாகாணசபை உறுப்பினர்கள் ஒன்றியம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

அத்துடன், பழைய முறைப்படி மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என கடந்த புதன்கிழமை நிறைவேற்றிய தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர், மாகாண சபைகள் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்கும் மேற்படி ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் மாகாணசபைகள் ஒன்றியம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்துக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஆதரவு வழங்கியுள்ளது. வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரி தலைவர்களும் 13 இற்காகவும், மாகாணசபை முறைமைக்காகவும் குரல் எழுப்பி வருகின்றனர். இதனால் ஆளுங்கட்சிக்குள் இவ்விவகாரம் தொடர்பில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என சரத் வீரசேகர அறிவித்துள்ளார். '13ஆவது திருத்தச்சட்டமானது இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்று, ஊரடங்குசட்டம்பிறப்பிக்கப்பட்டு கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அது நிறைவேற்றப்பட்டு மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இதனால் நாடு சமஷ்டி முறைக்குத் தள்ளப்பட்டது.

மாகாணசபை முறைமை தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது. அதனால் ஏற்படும் செலவுகள் உட்பட அனைத்து விடயங்களும் கருத்திற்கொண்டு கடந்தகால செயற்பாடுகளும் ஆராயப்பட்டு அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.' என்றார். அதேபோல் சரத் வீரசேகரவுக்கு ஆதரவாக கடும் போக்குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளும், பௌத்த தேரர்களும் குரல் கொடுத்து வருகின்றனர்.

(ம-44)

# 4 நீதிமன்றங்களுக்கு சிரேஷ்ட சட்டத்தரணிகள்!

கொழும்பு, செப். 5

நான்கு மேல் நீதிமன்றங்களுக்கு அரச சிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஏராளமான வழக்குகளை கருத்தில்கொண்டு ஹோமாகம, களுத்துறை, மாத்தறை மற்றும் நீர்கொழும்பு மேல் நீதிமன்றங்களுக்கு அரச சிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

மேல் குறிப்பிட்ட ஒவ்வொரு மேல் நீதிமன்றங்களிலும் சுமார் 600க்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளன என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ம)

# இரட்டைக் குடியுரிமையாளரிடம் அரச பதவி இருக்கக்கூடாது

*அது பெரும் ஆபத்து என்கிறார் இராஜாங்க அமைச்சர் விதுர*

கொழும்பு, செப். 5

இரட்டை குடியுரிமை கொண்ட நபர் அரச உயர் பதவிகளை வகிப்பதால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தின் ஊடாக தெரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கிராமிய கலை மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


இரட்டைக் குடியுரிமை உடையோர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற தடை நீக்கப்பட்டுள்ளமை அரசில் தற்போது மாறுபட்ட நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர் நாடாளுமன்ற உறுப்பினராகுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. இரட்டை குடியுரிமை கொண்டவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட தடை அரசமைப்பின் 20ஆவது திருத்த வரைவில் நீக்கப்பட்டமை எதிர்ப்புக்குரியது. 20ஆவது திருத்தத்தில் பல விடயங்கள் சாதகமாகக் காணப்பட்டாலும். இரட்டை குடியுரிமை உள்ளவருக்கு சாதகமாக ஏற்பாடுகள் ஏற்படுத்தியுள்ளமை தவறான தீர்மானமாகும் - என்றார். (ம-இ)

# தங்கூசி வலைகள் கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் இரண்டு தொகுதி தங்கூசி வலைகளைக் கடத்திச் சென்ற நபர் மண்டைதீவில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.



மண்டைதீவு பொலிஸ் காவலரணில் கடமையாற்றும் விவேகானந்தன் தலைமையிலான குழுவினரே இந்த நபரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் புங்குடுதீவு 9ஆம் வட்டார பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-25)

# முதலீட்டு ஊக்குவிப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாண மாவட்ட முதலீட்டு ஊக்குவிப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.


யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், மேலதிக செயலர் ம.பிரதீபன், மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன், தொழில் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், யாழ். மாவட்ட வணிகர் கழகத்தினர், தொழில்முயற்சியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ப-20)

# காலத்தை விணடிக்காமல் தீர்வை பெறுவதே எனது அரசியல் பயணம்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன், செப்.5

**பிரச்சினைகளைப் பேசிக் காலத்தை ஓட்டுவதைவிடவும், தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டதே எனது அரசியல் பயணம். அதன்படியே தற்போது செயற்பட்டும் வருகின்றேன் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**



ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன் புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில், 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ் இரண்டு மாடிக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கை மூலம் எனது அமைச்சுக்கு ஆயிரத்து 56 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கடந்த நான்கரை வருடங்களில் கடன் அடிப்படையிலேயே மலையகத்தில் வேலைகள் நடந்துள்ளன. அவற்றை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. முதலில் அடிக்கல் நடவேண்டும், கட்டடத்தை நாமே திறந்து வைக்க வேண்டும் என்ற குறுகிய அரசியல் நோக்கில் திட்டங்களை உரிய வகையில் செய்யவில்லை. எங்களுக்கு அடிக்கல் நடுவது பிரச்சினை அல்ல. செய்யும் திட்டம் முறையாகவும், பயனாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். பிரச்சினைகளைப் பேசிப் பேசி, காலத்தை ஓட்டமுடியாது. கல்வி என்பது புத்தகப் படிப்பு மட்டும் அல்ல, அதனையும் தாண்டிப் பல விடயங்கள் உள்ளன. விளையாட்டு உட்பட பல் துறைகளில் மாணவர்களால் சாதிக்க முடியும். அதேபோல் அமைதி, அமைதி எனக்கூறி மாணவர்களை முடக்காமல், அவர்களுக்கு கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் வழங்கவேண்டும். அப்போதுதான் சிறந்த தலைவர்களை உருவாக்கமுடியும் - என்றார். (ப)

# கடலில் மிதக்கும் கனதியான பாசி

## மீனவர்கள் முறைப்பாடு

பச்சை நிறமுடைய கனதியான ஒரு வகைக் கடற்பாசி கடலில் மிதக்கின்றது என்று மீனவர்களால் கடற்றொழில் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. அங்குலானைப் பகுதியை அண்மித்த கடற்பிராந்தியத்தில் அண்மையில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்களே இது குறித்து அறிவித்துள்ளனர்.

அந்தக் கடற்பிராந்தியத்தில் பிடிக்கப்பட்ட மீன்களும் பச்சை மற்றும் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நாரா நிறுவனம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. நெஃப்சியூலா என அழைக்கப்படும் டயட்டம் எனும் ஒருவகைக் கடற்பாசியே இவ்வாறு கடல் மேற்பரப்பில் படர்ந்துள்ளதாக நாரா நிறுவனத்தின் சூழல் பிரிவின் பொறுப்பாளரும் நிபுணருமான ஷாமலி வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த கடற்பாசியின் மூலம் நச்சுப் பொருள் வெளியேற்றப்படுகின்றதா என்பது தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் தெரியவரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப)

# நாடாளுமன்ற அமர்வுகள் 8 முதல் 11 வரை

கொழும்பு, செப். 5

எதிர்வரும் 08 முதல் 11 ஆம் திகதி வரை நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

8 ஆம் திகதி மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, நிதி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் 2020ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அரசாங்கத்தின் நிதி நிலைமை குறித்த அறிக்கை என்பன பற்றி சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது. அன்றையதினம் பிற்பகல் 1 மணி முதல் மாலை 6.30 மணி வரை சபை அமர்வுகள் இடம் பெறும்.

9 ஆம் திகதி உற்பத்தி வரிச் சட்டத்தின் கீழான 9 ஒழுங்கு விதிகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 10 கட்டளைகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

10ஆம் திகதி துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளைகள், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 3 ஒழுங்கு விதிகள் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 6 தீர்மானங்கள் என்பன விவாதிக்கப்படவுள்ளன. அதேநேரம் 11 ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் தொடர்பான அனுதாபப் பிரேரணை விவாதம் நடைபெறவுள்ளது. (ப)

# மலையகக் கல்வி வளர்ச்சிக்கு இ.தொ.கா. எப்போதும் உதவும்

## அதன் நிதிச் செயலர் கூறுகிறார்

ஹற்றன், செப்.5

கல்வி வளர்ச்சி மூலமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதி அதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்று வரை முக்கியத்துவம் வழங்கிவருகின்றது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களின் கல்வி வளர்ச்சியே எமது இலக்கு. அதற்கான வழியை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வரை காங்கிரஸின் தலைமையின் கீழ் மலையகக் கல்வி வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை, சேவைகளை முன்னெடுத்துள்ளோம். கல்வி வளர்ச்சி மூலமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதி அதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்றுவரை முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. எமது தலைவர்களும் நிதிகளை ஒதுக்கினர். ஜீவன் தொண்டமானும் தற்போது கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றார். இது தொடர்பில் அவர் உரிய தரப்புகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்-என்றார். (ப)

# 10 பல்கலைக் கழகங்களை புதிதாக அமைக்கத் திட்டம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப்.5

நாட்டில் புதிதாக 10 பல்கலைக்கழகங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான சூழல் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் கிடைக்க வேண்டும். எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமான வகையில் பாடவிதானங்களில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும், இது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்து இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# சட்டவிரோத மீன்பிடி; 29 மீனவர்கள் கைது

கொழும்பு, செப். 5

சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 29 பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 11 படகுகளும் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் கடந்த சில தினங்களாக கிழக்கு கடற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகள் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

# ஒரே குடும்பத்தில் மூவர் ஹெரோய்னுடன் கைது

மாத்தளை பகுதியில் ஹெரோய்ன் ரக போதைபொருளுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாய், தந்தை மற்றும் மகள் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மாத்தளை களுதேவல பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 4 கிராம் ஹெரோய்ன் மற்றும் 70ஆயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மங்கல நிகழ்வுகளுக்காகவும் வேறு சில தேவைகளுக்காகவும் கொழும்பு வரும்பொழுது ஹெரோய்ன் பெற்றுக்கொண்டு மாத்தளைக்குக் கொண்டு வருகின்றனர் என்றும், அதன் பின்னர் அங்கு அந்த ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சர்ச்சைக்குரிய பேஸ்புக் பக்கம் : பொலிஸ்காரர் கைது

கொழும்பு, செப்.5

தாய்மார்களை இழிவுபடுத்தும் வகையில் சர்ச்சைக்குரிய பேஸ்புக் பக்கத்தை முன்னெடுத்த குற்றச்சாட்டுக்காக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பேஸ்புக் பக்கம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட விசனங்களைத் தொடர்ந்து அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 27 வயதுடைய கம்பஹா பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றி வந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பயிற்சி பொலிஸ் உத்தியோகத்தராக ஒரு வருடத்துக்கு முன்னர் இவரை ஆட்சேர்ப்புச் செய்த தாகப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப)

# விக்னேஸ்வரனை கைது செய்ய கோருவது வேடிக்கையானது

## மேத்தானந்த தேரர் மீது சி.வி.கே காட்டம்



**யாழ்ப்பாணம், செப்.5**

**தமிழர்களுடைய வரலாற்று உண்மையைக் கூறிய விக்னேஸ்வரனைக் கைது செய்வோம் எனக் கூறுவது வேடிக்கையான விடயம் என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானம் தெரிவித்தார்.**

எல்லாவல மேத்தானந்த தேரர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

1987ஆம்ஆண்டுஇந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜே.ஆர் ஜெயவர்த்தன ராஜீவ்காந்தி ஒப்பந்தத்திலே வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களுடைய வரலாற்று ரீதியான வாழ்விடம் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது இரண்டு அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த எல்லாவல மேத்தானந்த தேரரை விட ஆயிரம் மடங்கு வரலாறு தெரிந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார். வரலாற்று ரீதியாக ஆவண ரீதியாக இந்த மண்ணிலேயே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. அதனைவிட வேறு எந்தஆவணம் வேண்டும் இந்த எல்லானந்த தேரருக்கு. இது ஏற்கனவே எப்போதுமே நான் பேசிக் கொண்டு இருக்கின்ற ஒரு விடயம். அதைத்தான்விக்னேஸ்வரனும் தனது கருத்தாகத் தெரிவித்திருக்கின்றார். அவர் புதிதாக எதையும் இறக்குமதி செய்துகூறவில்லை. வரலாற்றைத்தான் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்பொழுது நாங்கள் கெட்டிக்காரர்கள் ,சிங்கள ஏகாதிபத்தியம், சிங்கள மேலாதிக்கம் ஒரு மொழி, ஓர் இனம் வாடகை வீட்டில் குடியிருப்போர் என்று பல்வேறுபட்ட கருத்துகளை தென்னிலங்கையில் தெரிவித்து வருகின்றார்கள் எனவே வரலாற்று ரீதியாக நாங்கள் தான் பூர்வீகக் குடிகள். கடந்த 2000 ஆண்டுகளாக சிங்களவர்களும் தமிழர்களும் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நான் பெரிது நீ பெரிதென்று இல்லாமல் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வரலாற்று ரீதியாக அவர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். அதை வைத்துக்கொண்டு விக்னேஸ்வரனைக் கைது செய்ய வேண்டும், அவரது கடவுச்சீட்டைப் பறிக்கவேண்டும் என்று அச்சுறுத்தல் விடுதல் என்பது ஒரு வேடிக்கையான விடயம் - என்றார். (ப-111)

# திருமலையில் கடலுடன் கலக்கிறது எரிபொருள்

## பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டு

**திருகோணமலை, செப்.5**

**திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் தரையிறக்கப்படும் எரிபொருள் கடல் நீருடன் அதிகளவில் கலக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதிகள் பாதுகாப்பு அமைப்பு இதனைக் குறிப்பிட்டுள்ளது. இதனால் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துமாறு திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருள் தரையிறக்கும் இந்திய நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை துறைமுகம் உலகில் இருக்கும் மிகப் பெரிய இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாகும். இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகளில் திருகோணமலை துறைமுகத்தை மையமாகக் கொண்டு பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அதன் பிரகாரம், மாதாந்தம் நான்கைந்து பெரிய கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு வருகின்றமையுடன் அவற்றில் ஒரு தடவைக்கு 20,000 தொன் எரிபொருள் கொண்டுவரப்படுகின்றது. (ப)

# 20இல் சிலவற்றை ஏற்கவே முடியாது

## சுதந்திரக்கட்சி கூறுகிறது

கொழும்பு, செப்.5

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தடையை, 20 ஆவது திருத்தத்தின் ஊடாக நீக்குவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளதாவது:

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் வாய்ப்பை உலகின் பல நாடுகள் தடுத்துள்ளன. புதிய அரசமைப்புத் திருத்தம் ஊடாக இலங்கையில் இந்த வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் - என்றார். (எ-இ)

# மதுபோதை குற்றச்சாட்டு இரண்டு பொலிஸார் கைது

மதுபோதையில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மத்தேகொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் அவர்கள் தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் கடல் தீர்த்தத் திருவிழா, வீரகத்தியர் தொடுவாய் தீர்த்தக் கரையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. (க-70)

# வருமானங்களுக்கு ஏற்ற வகையில் வீட்டுத் திட்டம்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, செப்.5

அரச மற்றும் தனியார் பிரிவுகளில் சேவையாற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு அவர்களின் வருமானத்துக்கு ஏற்ற வீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்காக வீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆரம்ப மூலதனத்தை ஏற்பாடு செய்துகொள்ள 5 வருடங்களுக்குச் செல்லுப்படியாகும் 25 பில்லியன் ரூபா கடன் பத்திரம் ஒன்றை வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்படும் வீடுகளை விற்பனை செய்வதில் பெறும் வருமானத்தைக் கொண்டு மீண்டும் அந்தக் கடன் தொகையை நிவர்த்தி செய்துகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளைப் பெறவுள்ளவர்களுக்கு நிவாரணக் கடன் வட்டியைப் பெற்றுக்கொடுக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய பெறுநர்கள் 25 முதல் 30 வருடங்கள் தவணைக்கட்டணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

# கொலைக் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிப்பு

கொழும்பு, செப்.5

1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொஸ்லந்த மீரியபெத்த பகுதியில் 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டிருந்தார். அந்தக் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பல வருடங்களாக சிறையில் இருந்த நிலையில் அவரது வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பதுளை மேல் நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. மீரியபெத்த பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபருக்கே இவ்வாறு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தொல்பொருள் செயலணிக்கு தமிழ் பிரதிநிதிகள் தெரிவு சவாலானது

## குமுறுகிறார் அமைச்சர் டக்ளஸ்

கிழக்கு தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணிக்குப் பொருத்தமான தமிழ்,முஸ்லிம் மக்களின் பிரதிநிதிளைத் தெரிவுசெய்வது சவாலான விடயமாக இருக்கின்றது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு காலத்தில் புத்திஜீவிகளினால் நிரம்பியவர்களாக நம்மவர்கள் இருந்தனர். கடந்த காலத்தில் தமிழர்களின் தலைமைகள் என்று கூறிக்கொண்டவர்களின் விவேகமற்ற வீரத்தின் வெளிப்பாடுகள் ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்றாக புத்திஜீவிகளுக்கும் தற்போது நம் மத்தியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. கடந்த கால ஆயுதச் செயற்பாடுகளால் பல புத்திஜீவிகள் விவேகமற்ற முறையில் கொல்லப்பட்டுள்ளனர். அதன் காரணமாக பெருமளவானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். எஞ்சியிருப்பவர்களும் சமூகம் சார் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி இருப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறான காரணங்களினால் குறித்த செயலணிக்குப் பொருத்தமான தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிக்க முடியாமல் இருக்கின்றது - என்றார். (ப)

# பூர்த்தியாகாத மஹிந்தோதய கட்டடங்களை அறிவியுங்கள்

## திலீபன் எம்.பி. வேண்டுகோள்


மன்னார், செப்.5

மஹிந்தோதயக் கட்டடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால் அவற்றை தெரியப்படுத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த அரசில் பாடசாலை மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த மஹிந்தோதயக் கட்டடங்கள் எதுவும் பூர்த்தி செய்யாமல் இருந்தால் உடனடியாக ஆவணங்களைச் சமர்ப்பித்தால் அவற்றைக் கட்டி முடித்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு வழங்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த வேண்டுகோளை நேற்றுமுன்தினம் மன்னார் நானாட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் முன்வைத்தார். (ப-213)


# மீண்டும் டெங்கு அபாயம்

## டெங்கு ஒழிப்புப் பிரிவு எச்சரிக்கை



**கொழும்பு, செப்.5**
**அண்மைய நாள்களாக நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோய் பரவுவதற்கான அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 25 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர். இக் காலப்பகுதியினுள் 26 ஆயிரத்து 238 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (வ-இ)



## வரணியில் வீதி சீரமைப்பு

கொடிகாமம், செப்.5
சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் வரணியில் வீதி ஒன்று தார் ஊற்றப்பட்டுச் செப்பனிடப்பட்டுள்ளது. வரணி, இயற்றாலையில் உள்ள வீரபத்திரர் வீதியே செப்பனிடப்பட்டுள்ளது.
பிரதேச சபையின் உறுப்பினர் சி.பிரபாகரனுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முதற்கட்டமாக 5 லட்சம் ரூபா நிதிச் செலவில் இந்த வீதி செப்பனிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த வீதி முன்னர் மக்கி வீதியாகக் காணப்பட்டதால், மழைகாலங்களில் பயன்படுத்த முடியாத நிலைமை இருந்தது. அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த வீதி தற்போது செப்பனிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-159)

## கசிப்பு விற்பனை; இருவர் கைது

கிளிநொச்சி, செப்.5
கிளிநொச்சி, தருமபுரம், புளியம்பொக்கணைப் பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 10 லீற்றர் கசிப்பு, 520லீற்றர் கோடா ஒரு மோட்டர் என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (ப-113)





வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வானது மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. மன்னார் நகர, பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 103 பட்டதாரிகள் தமக்கான நியமனங்களைப் பெற்றனர். அவர்களுக்கான நியமனப் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தெளிவுபடுத்தலும் வழங்கப்பட்டது. (ப-56)

## அனுமதியின்றி மணல் ஏற்றியோர் சிக்கினர்!

கிளிநொச்சி, செப்.5
அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனங்கள் இரண்டும், உழவு இயந்திரங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
விசாரணைகளின் பின்னர் சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
கிளாலி மற்றும் புலோப்பளையில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 3 உழவுயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். சாரதிகள் 5 பேரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

## கடந்த 15 மாதங்களில் 2,480 போதை வழக்குகள்

கடந்த 15 மாதங்களில் 2 ஆயிரத்து 480 போதைப்பொருள் தொடர்பான வழக்குகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார்.
அத்துடன், இந்தக் காலப்பகுதியில் பாரதூரமான போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 2 ஆயிரம் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற.இ)



## ஓட்டோ விபத்தில் சாரதிகள் காயம்!

வவுனியா, செப்.5
வவுனியா, ஹாறவப்பொத்தானை வீதியில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் இருவர் காயமடைந்தனர். இரு முச்சக்கரவண்டிகள் சேதமடைந்தன.
வவுனியா நகரில் இருந்து கோயில் குளம் நோக்கிப் பயணித்த இரு முச்சக்கர வண்டிகள் ஹாறவப்பொத்தானைப் பகுதியில் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முயன்றபோது விபத்துக்குள்ளாகின.
விபத்துத் தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-110)

## வீதியோர கழிவுகளை அகற்ற அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 5
தெல்லிப்பழை சந்தியிலிருந்து தெல்லிப்பழை மருத்துவமனை வரையான வீதியோரம் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் வேலை இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு சமூக ஆர்வலர்களையும் தன்னார்வ அமைப்புகளையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.
'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பின் ஏற்பாட்டில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. (சு)

## கிராமியக் கைத்தொழில்களை மேம்படுத்த புதிய செயற்றிட்டம்

கொழும்பு. செப்.5
நாடளாவிய ரீதியில் கிராமியக் கைத்தொழில்களை மேம்படுத்த புதியதொரு அபிவிருத்தி செயற்திட்டத்தினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.
இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி. இரத்மலானை, களுத்துறை, மில்லாவ, நாலந்த, மாகந்துர, ஊவா பரணகம மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கைத்தொழில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அந்தந்தப் பிரதேசங்களின் கைத்தொழில் சேவை ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இந்த செயற்றிட்டத்திற்காக 9 முதலீட்டாளர்களிடம் இருந்து 35 வருடகாலத்திற்கு குத்தகை அடிப்படையில் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித் துள்ளது. (வ



# இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பூர்வ சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனநிலை மாறும்.

**இடபம்:** உத்தியோகத்தில் சவாலான வேலைகளை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சியை மேற்கொண்டால் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:** உறவினர் மூலமாக சிறு செலவுகள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பது நல்லது. வியாபாரிகளுக்குத் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும்.

**கடகம்:** கவலையற்ற போக்குடன் இருப்பீர்கள். தொல்லைகள் சில வந்தாலும் அதை லாவகமாக அணுகி வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் மூலம் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** கடந்த நாள்களில் இருந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்களுக்குக் கீழ் வேலைபார்ப்பவர்களை மிக மரியாதையுடன் நடத்துவீர்கள்.

**கன்னி:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கியை போராடி வசூலிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** உத்தியோகத்தில் சூட்சுமங்களைக் கற்க பொறுமை தேவைப்படும். எதிர்பாலினத்தினரிடம் பழகும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கலைத் துறையினருக்கு நிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினருக்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வர்.

**தனுசு:** நண்பர்களிடையே சுமுக உறவு ஏற்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வாழ்வில் முன்னேற அதிக அக்கறை காட்டுவீர்கள். கலைத்துறையினருக்கு மன வருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** செலவுகளில் கட்டுப்பாடு தேவை. வாழ்வில் முன்னேற அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். உறவினர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**கும்பம்:** வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட பணப்புழக்கம் சுமாராகவே இருக்கும். பயணங்களின் போது பொருள்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்:** மனத்தைரியம் கூடும். பணவரவு எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் உள்ள போட்டிகள் குறையும். அலுவலகத்தில் பணிகளை நிதானமாகச் செய்வீர்கள்.

# மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் ஓய்வுபெறமாட்டேன்


## மஹிந்த தேசப்பிரிய பிடிவாதம்



கொழும்பு, செப்.5
மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஓய்வுபெற்றுச் சென்றால் நல்லது என்று விமல் வீரவன்ச அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கு மஹிந்த தேசப்பிரிய தற்போதைய சூழ்நிலையில் தான் ஓய்வுபெறமாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு மாதத்திற்கு முன்பே ஓய்வு பெறத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் காரணமாக மாகாணசபைத் தேர்தல் முடியும் வரை ஒருபோதும் ஓய்வு பெறமாட்டேன் -என்றார். (ற.இ)



சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆண்டுவிழாவுக்கான சிறப்பு பூசைகள் கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி, விசுவமடு, முல்லைத்தீவு ஆகிய இடங்களின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் இணைந்து இந்த பூசை வழிபாடுகளை முன்னெடுத்தனர். ஆலயத்தில் அன்னதானமும் சுகாதார முறைக்கிணங்க பொதிசெய்து வழங்கப்பட்டது. (ஐ-21)

# ஆணைக்குழுக்களில் இருவர் முன்னிலை

கொழும்பு,செப்.5
அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் சுமார் நான்கரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவில் அவர் நேற்றுக் முன்னிலையாகியிருந்தார்.

அதேவேளை முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று வாக்குமூலம் அளித்தார். சுமார் 6 மணித்தியாலங்கள் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# பூனையைத் திருடியவருக்கு கடூழியச்சிறைத் தண்டனை

கொழும்பு,செப்.5
பூனையைக் கொள்ளையிட்ட ஒருவருக்கு ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து காலி நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பர்சியன் வர்க்கத்தைச் சேர்ந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பூனையே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. குற்றவாளிக்கு ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# 2230 கிலோகிராம் மஞ்சள் மீட்பு

கொழும்பு, செப்.5
இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 230 கிலோகிராம் மஞ்சள் தொகை கடற்படையினரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டுள்ளது. பேருவளை கடற்கரையோர பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆறு கோடி பெறுமதியான இந்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் வழங்கிய தகவல்களின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இது கைப்பற்றப்பட்டுள்ளது என பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதன்போது பேருவளை கடற்கரையோர பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றிலிருந்து 90 மஞ்சள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 1070 கிலோ கிராம் மஞ்சள் கட்டிகளும் , 1160 கிலோ கிராம் மஞ்சள் தூளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ-இ)

### கொரோனா சந்தேகம்

# மன்னாரில் ஏழு பேர் தனிமைப்படுத்தலில்

மன்னார்,செப். 5
இந்தியாவிலிருந்து மஞ்சள் கடத்தலில் ஈடுபட்டவருடன் தொடர்புகளைப் பேணிய ஏழு பேர் சுகாதாரத் துறையினரின் பணிப்பில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த வாரம் இந்தியாவிலிலிருந்து கடல் வழியாக மன்னாருக்கு மஞ்சள் கடத்தி வந்த நபர் ஒருவரை மன்னார் பொலிஸார் பேசாலையில் வைத்து கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளப் படுத்தப்பட்ட நிலையில், அவருடன் தொடர்புகளைப் பேணிய அவரது குடும்ப உறுப்பினர்கள் ஏழு பேரே சுய தனி[illegible] படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். [illegible]

# கனடா விபத்தில் இலங்கையர் சா[illegible]

கொழும்பு,செப்.5
கனடாவில் இடம்பெற்ற படகு விபத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் மேலும் 6 பேர் காயமடைந்[illegible]னர். வல்வெட்டித்துறை தீருவிலையைச் சே[illegible] 46 வயதான நபர் ஒருவர் விபத்தில் உயிரிழ[illegible]ளார்.

# 20ஐ நிறைவேற்ற முன்னதாக கட்சிகளுடன் பேச வேண்டும்

## கரு ஜயசூரியவின் எதிர்பார்ப்பு



**கொழும்பு, செப்.5**
**அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மூலம், அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்ட சிறந்த விடயங்களை நீக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.**

அதனால் இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற முன்னர் அரச இன, மத மற்றும் அரசியல் தலைவர்களுடன் பரந்தளவில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.
இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.
தனது டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.
அதேவேளை பிரதமர், நாடாளுமன்றம் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான பிற நிறுவனங்களுக்கு அதிகளவான சுயாட்சி வழங்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் அரசு இன, மத மற்றும் அரசியல் தலை வர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடத்தும் என்று நம்புகின்றேன். என்றார். (எ-இ)

# கோத்தாபய என்பதால் அனைத்தும் சரியாகா!

## தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.5
**தனது நியமனங்கள் தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கூறியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.**
மிலிந்த மொரகொடவை இந்தியத் தூதுவராக நியமித்தமைக்கு நாட்டில் எதிர்ப்பு உள்ளது. இரட்டைக் குடியுரிமை கொண்ட எவரையும் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் நியமிக்க வேண்டாம்.
இவ்வாறு தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களை மாற்ற வேண்டும் என்று ஜனாதிபதிக்கோ அல்லது அரசுக்கோ அழுத்தம் கொடுக்கக் கூடாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே வசந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் நாங்கள் அவரை ஜனாதிபதியாக்கப் பெரும் சேவையை மேற்கொண்ட ஒரு பிரிவினர். ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் வியத்மக அமைப்பைச் சேர்ந்தவர்கள் சிறிய விடுதிகளில் கூட்டங்களை நடத்தினார்களே தவிர மக்களிடம் செல்லவில்லை. நாங்கள் கிராமம் கிராமமாக, விகாரைகள் தோறும் சென்று, கையேடுகளைப் பகிர்ந்தளித்தோம். ஏழு வகையான கையேடுகளை அச்சிட்டோம் அதில் ஒன்று தமிழிலும் அச்சிட்டு பகிர்ந்தோம். அதேபோன்று ஜனாதிபதி தேர்தலில் 50 இலட்சம் வாக்குகளையே தங்களால் பெற்றுக்கொள்ள முடியும் என்று மொட்டு கட்சித் தலைவர்கள் தெரிவித்திருந்தனர். எஞ்சிய 1 9இலட்சம் வாக்குகளையும் சிங்கள பௌத்த மக்களை விழிப்பூட்டி கொண்டு வந்தது தேசிய சக்தியாகும். அந்த மக்கள் தற்போது எங்களை கேள்வி கேட்கின்றனர். வீதியில் எங்களுக்குச் செல்ல முடியாதுள்ளது. ஜனாதிபதியின் நியமனங்கள் அனைத்தும் சரியென தெரிவித்து வாய்மூடி இருக்க எங்களால் முடியாது. 19 இலட்சம் மக்களுக்கு நாங்கள் பொறுப்பு கூறவேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது. என்றார். (எ-இ)




# மனுஷவுக்கு பிடியாணை

கொழும்பு,செப்.5
நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை கைது செய்யுமாறு காலி பிரதான நீதிவான் ஹர்சன கெக்குணுவெல பிடியாணை பிறப்பித்துள்ளார். வழக்கொன்றில் சாட்சியமளிப்பதற்காக அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்ற காரணத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் தொழில் வாய்ப்புப் பெற்று தருவதாகக் கூறி இளைஞர்களிடம் பண மோசடி செய்ய முயற்சித்தமை தொடர்பாக, சந்தேகநபர் ஒருவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில், மனுஷ நாணயக்காரவே முதலாவது சாட்சியாளராக, முறைப்பாட்டாளர் தரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் சாட்சியமளிப்பதற்காக அவர் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகவில்லை.
வழக்கு விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மஹிந்த அன்று எதிர்த்ததையே கோத்தா கொண்டு வருகிறார்!

## மங்கள சமரவீர விசனம்



கொழும்பு, செப்.5
மஹிந்த ராஜபக்ச 1978ஆம் ஆண்டு எதிர்த்த, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் விரும்பத்தகாத கூறுகளைக் கொண்ட நிறைவேற்றதிகாரப் பதவி, இப்போது கோத்தாபய ராஜபக்சவால் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் என்ற பெயரில் மீள அறிமுகம் செய்யப்படுகின்றது.
இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர விசனம் தெரிவித்துள்ளார்.
19ஆவது திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்கப்படுவதற்கான வாய்ப்பு அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஊடாக ஏற்பட்டிருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# கட்டுப்படுத்தப்பட்டது கப்பலில் பரவிய தீ!

## ஓர் ஊழியர் இறந்தார்



கொழும்பு, செப்.5
அம்பாறை சங்கமன்கந்தை கடற்பரப்பிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த கப்பலில் காணாமற்போயிருந்த ஓர் ஊழியர் சடலமாக மீட்கப்பட்டார் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்தது. அத்துடன் கப்பலில் பற்றிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் கடற்படை தெரிவித்தது.
'எம்டி நியூ டயமண்ட்' என்ற எண்ணெய்க் கப்பலில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ காரணமாக கப்பலில் வெடிப்பு ஏற்பட்டது. அதன்போது ஓர் ஊழியர் காணாமற்போயிருந்தார். ஏனைய 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் கல்முனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
இந்தநிலையில், காணாமல் போயிருந்த பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஊழியர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
கப்பலில் பரவி எரிந்துகொண்டிருந்த தீ நேற்றுமாலை கட்டுப்படுத்தப்பட்டது.
தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் இலங்கை, இந்திய கடற்படைகள், இலங்கை விமானப்படை மற்றும் பிற அமைப்புக்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தன.
இந்தக் கப்பலில் 2 லட்சத்து 70 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எரிபொருள் மற்றும் 1,700 டொன் டீசல் சரக்குகளுடன் குவைத்தில் இருந்து பயணித்துக் கொண்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, கப்பலில் பரவிய தீ கட்டுப்படுத்தப்படுவதற்கு முன்னர், கப்பல் வெடித்து சிதறக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்று அம்பாறை மாவட்டச்செயலகம் நேற்று முற்பகல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. (து)

# 142 பேருக்கு தனிமை நிறைவு

கொழும்பு, செப்.5
நாட்டில் கொரோனா அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 142 பேர் நேற்று தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். (ப)

# போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் உற்பத்தி வரி அதிகரிப்பை நீக்குக!

## பனை அபிவிருத்தி சங்க கொத்தணி கோரிக்கை

**வலி.தென் மேற்கு, செப்.5**

**பனங்கள் போத்தலில் அடைப்பதற்கான உற்பத்தி வரியை அரசாங்கம் பல மடங்காக அதிகரித்துள்ளதால் துறைசார்ந்த சங்கங்களுக்கு வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, சங்கங்களின் வளர்ச்சி கருதி உற்பத்தி வரியை (மது வரி) நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலிகாமம் பனை, தென்னை, வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி கோரியுள்ளது.**

உற்பத்தி வரி சம்பந்தமாக கொத்தணித் தலைவர் எஸ். செல்வராசா கடற்றொழில் நீர்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பனம்தொழில் வல்லுநர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பனங்கள் போத்தலில் அடைப்பதற்கான உற்பத்தி வரியாக தாங்கள் ஆட்சியிலிருந்த 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு லீற்றருக்கு ரூபா 10 வீதமாக இருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் அதனை ஒரு லீற்றருக்கு ரூபா 50வீதமாக அதிகரித்துள்ளது. இதனால் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பின் காரணமாக போத்தலில் அடைத்த கள்ளை விற்பனை செய்வதில் பெரும் நெருக்கடிக்களை எதிர்கொள்கின்றோம். எனவே பனங்கள் போத்தலிலடைப்பதற்கான உற்பத்திவரி (மதுவரி) நீக்கம் செய்து தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு போத்தலிலடைத்த கள் 'பருவமற்ற காலத்தில்' விற்பனை செய்யப்படும் போது கலால் வரி செலுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து தந்துதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் -என்றுள்ளது. (ஐ-115)

# தோல் பயிற்சி ஆரம்பம்

நல்லூர், செப்.5

வறுமை ஒழிப்பு செயல்திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபை தோல் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவியுடன் தோல் உற்பத்தி பயிற்சிக்கு 20 வரையிலான பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சபையால் ஒதுக்கப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பிரதேச சபை தெரிவித்துள்ளது.

தொடர்ந்து 20 நாள்கள் நடைபெறும் பயிற்சியின் முடிவில் பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

அத்துடன் அவர்களுக்கான தோல் சம்பந்தமான வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொடுக்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# கோண்டாவில் பிரதேசத்தில் விரைவில் சேமக்காலை

கோண்டாவில், செப்.5

கோண்டாவில் பிரதேசத்தில் சேமக்காலை ஒன்றை அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டையால் இந்த மயானத்துக்கு அருகில் உள்ள சபை காணியில் இந்த சேமக்காலை அமைக்கப்படவுள்ளது. பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவர்களின் வேண்டுகோளையடுத்து சேமக்காலையை சபை அமைப்பதற்கும் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து சபைக்குச் சொந்தமான காணி விரைவில் துப்புரவு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)



அருள் மிகு இயக்கச்சி முகாவில் கிருஷ்ணர் ஆலய வீதி உலா நிகழ்வும், கடல்த் தீர்த்தமும் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சிக் கிழக்கின் கொடுக்குளாய் தீர்த்தக் கரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-70)

# தொடர் மழை காரணமாக வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், செப்.5

கடந்த இரு நாள்களாக பெய்த மழை காரணமாக வலி.கிழக்கு பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காய செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை இரவு வேளையில் இப் பிரதேசத்தில் கனத்த மழை பெய்தது. தோட்டங்களில் பயிரிடப்பட்ட சின்ன வெங்காயம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில விவசாய நிலங்களில் அறுவடை செய்யப்பட்டு காய வைக்கப்பட்ட வெங்காயங்களும் மழையில் நனைந்துள்ளன. நீர்வேலி, கோப்பாய் சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக் கட்டுவான் போன்ற இடங்களிலேயே வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்தால் சின்ன வெங்காய செய்கை முழுமையாக பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஐ-17)

# சாதனையாளர் கௌரவிப்பு

சுன்னாகம், செப்.5

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தால் கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் (மயிலணி) நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் அ.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் எ.சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக வயாவிளான் மகா வித்தியாலய ஆசிரியர் ரா.மைதிலியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் ஆசி உரையை அண்ண மகேஸ்வரர் ஆலய குரு ஸ்ரீகாந்த குருக்கள் வழங்குவார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# சிற்பத்தேர்கள் வெள்ளோட்டம்

கொடிகாமம், செப்.5

கொடிகாமம் வடக்கு கேசரப்பிட்டி பெரிய தம்பிரான் பிள்ளையார் உடனுறை காளியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.

ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரு சிற்பத்தேர் வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தொடர்ந்து இன்று சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிசேகமும், தீர்த்த திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், செப்.5

தீவக வலயத்துக்கு உட்பட்ட வகை 111 பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யா/அனலைதீவு அ.மி.த.க பாடசாலை, யா/நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க வித்தியாலயம், யா/நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், யா/பாலாவோடை இ.த.க வித்தியாலயம், யா/ மண்கும்பான் அ.த. க. பாடசாலை ஆகியவற்றிலேயே அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தீவக வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பப்படிவங்களை தீவக கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காலபோகக் கூட்டம்

சாவகச்சேரி, செப்.5

நுணாவில் மேற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட 2020 - 2021 ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை விவசாயத்துக்கான காலபோகக் கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை நுணாவில் பொது நோக்கு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

பெண்களுக்கு கனடாவில்
கற்கை மற்றும் தொழில்வாய்ப்புக்கள்

இலங்கையில் நம்பிக்கை மிகுந்த நிறுவனத்தினால் கனடாவில் (பெண்களுக்கு) கற்கையுடன் தொழில் வாயப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

IELTS தேவையில்லை

நேர்முகத்தேர்வு நாளை
9.00 மணி முதல் 4.00 மணிவரை

Tilko Jaffna City Hotel
70/6, K.K.S. Road, Jaffna
(யாழ் தபால் நிலையத்திற்கு அருகில்)

வயதெல்லை : 20-35
தகைமை : க.பொ.த சாதாரண தரம்

முன் பதிவுகளுக்கு
Supreme Education
Raj 076 392 8881,0762358881



## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக
ஆரம்பிக்கப்பட்டுள்ள
**UK based fast food outlet** இக்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

1. கணக்காளர் :
Accountant (catering/ restaurant மேற்குறித்த துறையில் அனுபவமுள்ளவர் தேவை)
2. துப்புரவுப் பணியாளர்:
Cleaning staff
தேவை (அனுபவமும். வயதிற்கும் ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்)

தொடர்புகொள்ளவும்:
0761498966, 0761354473
*Email* : Thekabris@gmail.com
*Address* : Kabris Kingdom (pvt) ltd, Main street / 3rd cross street, Jaffna.



## தேவை

யப்பான் லான்சர், எயார் கொம்பிறசர், டிஸ் கலப்பை தேவை.
077 736 1215

## வேலையாள் தேவை

பிரபல தனியார் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றில் கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலையாட்கள் உடன் தேவை
தொடர்பு : 077 386 6250

## வேலையாள்கள் தேவை

திருமுருகண்டியிலுள்ள
உணவகத்திற்கு
பின்வரும் வேலையாள்கள் தேவை
1. உணவு பரிமாறுபவர்
2. சமையலாளர்
3. றொட்டி தயாரிப்பாளர்
4. கொத்து, றைஸ் போடுபவர்
5. சுத்திகரிப்பாளர்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 077 993 0280



## பணியாளர்கள் தேவை

பல்கலைக்கழக சூழலில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்கு சமையல் உதவியாளர்கள், சிற்றுண்டிச்சாலை உதவியாளர்கள் தேவை (பெண்)
077 071 4327

## நாகபூசணி திருமண சேவை

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன்தரப்படும்.
இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0771387596, 0719999306

## வேலையாள்கள் தேவை

கோண்டாவில் பகுதியில் இயங்கும்
**தையல் நிலையத்துக்கு**
நன்கு தைக்கத்தெரிந்த அல்லது ஓரளவு தைக்கத்தெரிந்த பெண்கள்
வேலைக்குத் தேவை.
(தையல் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு)
077 756 4850


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
## கந்தையா இராமலிங்கம்
(றூபா பன்முக வர்த்தக ஊழியர்)



தோற்றம்
01 . 03 . 1948

மறைவு
08 . 08 . 2020

கடந்த 08.08.2020 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா இராமலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.09.2020) சனிக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், அதனைத்தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண நிகழ்வும் நடைபெறும். 07.09. 2020 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08.09.1954



இறப்பு
01.09.2007

## அமரர் சின்னத்துரை சிவபாதம்
(இலங்கை வங்கி வாடிக்கை சேவை முகாமையாளர்)

திதி: சங்கடசதுர்த்தி

ஆண்டு பதின்மூன்று கடந்து ஓடினாலும்
அகத்தினில் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோமப்பா!
நீண்ட காலங்கள் விரிகிற பொழுதெல்லாம்
நிதர்சனமான உங்கள் தரிசனம் தெரிகிறதப்பா!

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

நினைவுகளுடன்
மனைவி, மக்கள்.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2020
## சாளம்பைக்குளம் கோழியிறைச்சிக்கடை- 01, சாளம்பைக்குளம் கடை-02

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த சாளம்பைக்குளம் கோழியிறைச்சிக்கடை கடை-01, சாளம்பைக் குளம் கடை- 02 என்பனவற்றை 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2020.09.21ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம். கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலு வலகத்தில் 2020.09.21ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கும். ஒரு பிரதி " பி /உள்ளூராட்சி உதவி ஆணையாளர், " பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2020.09.21ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வப்போது அறவிடப்படும் வரி என்பவற்றை செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விபரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| சாளம்பைக்குளம் கோழியிறைச்சிக்கடை 01 | 3000.00 | 36000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் கடை 02 | 3000.00 | 36000.00 | 1,000.00 |

நேரியகுள வீதி, நெளுக்குளம்,
02.09.2020

தலைவர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.


செவிப்புலனுக்கான முழுமையான தீர்வு
ஜேர்மன் தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்ட
பல வகையான
# காது கேள் கருவிகள்



முற்றிலும் காது துவாரத்துக்குள் பொருத்தப்படும்
CIC
காது துவாரத்துக்குள் பொருத்தப்படும்
ITC
காதில் பொருத்தப்படும்
ITE
றிசீவர் காது துவாரத்தில் பொருத்தப்படும்
RIC



காதுப்பின் புறத்தில் வெளியாக பொருத்தப்படும்
BTE
காதுப்பின் புறத்தில் பொருத்தப்படும் இணைப்புக்கருவி
BTE
காதுப்பின் புறத்தில் பொருத்தப்படும் கேட்டல் சக்திக்கருவி
BTE
காதுப்பின் புறத்தில் பொருத்தப்படும் கேட்டல் அதிசக்திக் கருவி
BTE

இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்கவைக்கும் கருவிகளை பொருத்தி பரீட்சித்தல்




இலவச கண்பரிசோதனை மற்றும் மூக்குக் கண்ணாடி, காதுகேள் கருவிகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.



VICKRAMARACHCHI

## மரண அறிவித்தல்



### பொன்னையா யோகரத்தினம்

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் - இலங்கை)**

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், நல்லூர், ஜேர்மனி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா யோகரத்தினம் கடந்த (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், சாந்தினி (ஜேர்மனி), ஜியேந்திரா (பிரித்தானியா), பிறமேந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாராஜன் (ஜேர்மனி), தர்ஷிகா (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதிதா, சாருஜன், கிருஷ்ஸா, வர்ஷா ஆகியோரின் அன்புப் பாட்டனும், மகேஸ்வரி (U.K), காலஞ்சென்ற சபாரத்தினம், தர்மராஜசிங்கம், காலஞ்சென்ற மனோரஞ்சிதம், இராசரத்தினம், காலஞ்சென்ற தளையசிங்கம், சிவராசரத்தினம், பராசக்தி (கனடா), ஈஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, பத்மாவதி, சிவசோதி, காலஞ்சென்ற குணரட்ணம், புஸ்பமலர், சோமாவதி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன், ரவீந்திரராசா, சண்முகராஜா, நகுலேஸ்வரி, யோகேஸ்வரி, தனலட்சுமி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.09.2020) திங்கட்கிழமை ஜேர்மன் நேரப்படி 2.00 மணிக்கு நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**டொக்ரர் பொ.தர்மராஜசிங்கம்**
**தெல்லிப்பளை கிழக்கு.**
**0776257969**
**பொ.இராசரத்தினம் - கோப்பாய்**
**பொ.சிவராசரத்தினம் - பெரியவிளான்**

தொடர்பு :
ஜியேந்திரா **+447738633147**
கலாராஜன் **+491702888834**

## 45ஆம் நாள் நினைவலையும், அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 23.07.2020 அன்று அகால மரணமெய்திய
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுகுமாரன் சுகேந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.09.2020) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் புண்ணிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கோட்டைக்காடு,**
**மல்லாகம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### பொன்னையா இராசநாயகம்

**(முன்னாள் மக்கள் வங்கி சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்)**

நாவற்குழி கிழக்கு தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும், 15/11C முதலாம் ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசநாயகம் (03.09.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரிபூரணம்-தங்கமலர் தம்பதியரின் மருமகனும், பாபறா லீலாவதியின் (லலிதா) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற றெமிசியஸ் தம்பி நாயகத்தின் அன்புச் சகோதரனும் யசோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயல கம், வேலணை), ரமணன் (UK முன்னாள் பொது சுகாதார பரிசோதகர்), குமணன் (முகாமையாளர், சம்பத்வங்கி, யாழ்ப்பாணம்), யாழினி (பிரான்ஸ்), சுமணன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கோபினி (UK), துளசினி (ஆசிரியை, ஈச்சில வங்கை அ.த.க.பாடசாலை, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணன் (ஆசிரியர், சென் பற்றிக் கல்லூரி), சியாமளா (UK), தமயந்தி (செலான் வங்கி-சுன்னாகம்), துஷாந்தன் (பிரான்ஸ்),மதுமிதா, இலங்கன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), அமிர்தகிரணன் (UK) விருஷன் (HNB) ஆகியோரின் மாமனாரும், நகுல், கனிஷியா, பிரஜித், கேஷானி, நவீன், கிளேயர், ரஸ்மிதா, தனுஸ்கா, ஹனிஸ்கா, ஆஷிகன், ஆகர்ஷன், சர்ஜின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்பு:
**077 3144 578, 077 248 7201, 077 474 5241**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை தங்கராஜா

**தோற்றம் 25.02.1944** **மறைவு 04.09.2020**

யாழ் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சிட்னி அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கராஜா அவர்கள் 2020 செப்டெம்பர் 4-ந் திகதி காலமானார். இவர் முன்னாள் பரந்தன் கூட்டுத்தாபன தொழிற்சாலை முகாமையாளராவார் (Works Manager).

இவர் காலஞ் சென்றவர்களான ஆறுப்பிள்ளை சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) கனகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும். அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரோப்பர் (கணக்கர்). மேரி மெக்டலின் தம்பதியினரின் மருமகனும்.

மேரி றீற்றா (ஜோய்ஸ்) அவர்களின் கணவரும்.

யோகசௌந்தரி. காலஞ்சென்ற கனகசௌந்தரி. தவராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். முன்னாள் வட மாகாண எதிர்கட்சித் தலைவர்) ஆகியோரின் சகோதரனும்.

தர்ஷினி சுரேஷின் மாமனாரும்

பிராமி சரவணன் (பரந்தன் இரசாயன கம்பனி). பிரமேஷ் ஆகியோரின் பெரியப்பாவும்.
பிரணவன். ஹரினி. ஆதர்ஷன் ஆகியோரின் பேரனும்.

காலஞ்சென்ற மகேந்திரன். ஜீவரஞ்சிதம் தவராசா. கிறேஸ் மனுவல்பிள்ளை (Australia). அல்பேட் கிறிஸ்ரோபர் (America). வுளோறன்ஸ் சிறீஸ்கந்தராஜா. காலஞ்சென்ற றோஸ் கிறிஸ்ரோப்பர். ஆனந்தராஜா கிறிஸ்ரோப்பர் (Norway). ஞானேஸ் கிறிஸ்ரோப்பர் (ஆசிரியை சென் ஜோண்பொஸ்கோ பாடசாலை). தர்மேஸ் கிறிஸ்ரோபர். ராஜன் கிறிஸ்ரோபர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரிகைகள்:

Monday 7 Sept 2020 11.00 am to 12.00 noon
Mary Mother of Mercy Chapel and Crematorium
Rookwood Lidcombe, Sydney

Informant: Mrs. Thangarajah 612 9631 2621
S. Thavarajah 94 774 863 893

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. R.ரமணன் அவர்களின் அன்பு மாமனார்
**பொன்னையா இராசநாயகம்** அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## மணமகள் தேவை

21.05.1990 இல் பிறந்த (மு.ப 10.04) கிரகபாவம் 52 (8 செவ்வாய்) 5.9 உயரம் கொண்ட ரேவதி நட்சத்திரம் உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆணிற்கு மணப்பெண் தேவை

**T.P 077 555 9028**

## வேலையாள் தேவை

யாழ் கொழும்பு பஸ் சேவையில் ஈடுபடும் A/C பஸ்ஸில் உதவியாட்களாக வேலை செய்ய ஆண்கள் உடன் தேவை

தொடர்பிற்கு
**077 766 7715**

E/S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி பாலதேவன் பரமேஸ்வரி

(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)



தட்டாதெரு சந்தி, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலதேவன் பரமேஸ்வரி நேற்று (04.09.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலதேவனின் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) அன்பு மனைவியும், சபேஷன் (சிரேஷ்ட மென் பொறியியலாளர், Pearson Lanka, Colombo), ஜெகாம்பிகா (ஆசிரியர், St. Anne's Balika M.V, Wattala) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆதித்தியா (பொறியியலாளர், Sri Lanka Telecom, Colombo), கோபிராஜ் (சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, Printcare PLC, Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி), தியாகராஜா (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) மற்றும் பத்மநாதன் (ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியர்), கதிர்காமத்தம்பி (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), மகேஸ்வரி (ஓய்வு பெற்ற மருந்தாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி, காலஞ்சென்ற கமலாதேவி, வசந்தி, கமலாதேவி, பேரின்பநாயகம், காலஞ்சென்ற மகாதேவன், சகாதேவன், வாமதேவன், காலஞ்சென்ற ஞானேஸ்வரி, ஞானதேவன், ஞானதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11:00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 516, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்
**021 222 8036**

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி மாணிக்கராஜா

பழைய வீதி, கோப்பாய் தெற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி மாணிக்கராஜா நேற்று (04.09.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னட்டி பொன்னி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா மகிழம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், மாணிக்கராஜாவின் அன்பு மனைவி யும், முருகன், காலஞ்சென்ற இராசன், காலஞ் சென்ற கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோ தரியும், சிறீதரன் (கனடா), தயாளினி (கனடா), தர்மினி (ஜேர்மனி) தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயவாணி (கனடா), சிவகுமார், விக்னராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனிஸ் (கனடா), ரனீசியா (கனடா), ஆன்சிவானி (கனடா), அஸ்வின் (கனடா), மயூரிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
**077 053 6887**

## 31ம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
02 . 06 . 1940

இறப்பு
06 . 08 . 2020

கடந்த 06.08.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் (மணியம்)


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.09.2020) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

மகன்- 077 280 0230
மருமகன் - 077 9741 393

## மரண அறிவித்தல்



### சிவசம்பு கணபதிப்பிள்ளை

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு கணபதிப்பிள்ளை நேற்று (04.09.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சோதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கெயாவல்லியின் பாசமிகு கணவரும், அன்னம்மா காலஞ்சென்ற நமசிவாயம், சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கீர்த்தனா (ஆசிரியை, கிளி/ புனித அந்தோனியார் றோ.க.வி), லோஜனா (ஆசிரியை, யா/விக்னேஸ்வரக் கல்லூரி), சோபனா (விவசாய போதனாசிரியர், விவசாயத் திணைக்களம்) மற்றும் லம்போதரன் (பயிற்சியாளர், யா/ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரேஷ்இன் மாமனாரும், ஹர்னியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சுந்தரவல்லி, பத்மாசனிதேவி, காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி, சரவணபவன், அமிர்தாம்பிகை, குகதாசன், குகநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
**077 525 1628**

தகவல்:
குடும்பத்தினர்.

## ராஜபக்சக்களின்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு '20'ஆவது திருத்தச்சட்ட வரைவு ஊடாக அரசமைப்புப் பேரவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமேல் மாகாண தேர்தலின்போது பொலிஸ் மற்றும் சில அரச சேவையாளர்கள் அரசுக்குச் சார்பாக செயற்பட்டதால் அத்தேர்தல் முடிவடைந்தகையோடு நாட்டிலுள்ள உயர் நிறுவனங்களான நீதிமன்றம், பொலிஸ், அரசசேவை ஆகியன சுயாதீனமாக்கப்படவேண்டும் என்ற கருத்து உருவானது. இதனை அடிப்படையாகக்கொண்டே 2001ஆம் ஆண்டு 17ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

சந்திரிக்கா அம்மையாரால் கொண்டுவரப்பட்ட 17ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கின. உயர் நிறுவனங்கள் சுயாதீனமாக்கப்பட வேண்டும் என்பதே சட்டவரைவின் பிரதான நோக்கமாக இருந்தது. இதன்படி அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது.

குறிப்பாக உயர் நிறுவனங்களின் பதவிகளுக்கு நிறைவேற்று ஜனாதிபதியால் அனுப்படும் நபர்களின் பெயர்களைக் கூட நிராகரிக்கும் அதிகாரம் அந்தப் பேரவைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 18ஆவது திருத்தச்சட்டம் மூலம் 17 இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டன. உயர் பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்கினார்.

இந்நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் அல்லது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தாடல் உருவானது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என உறுதியளித்தே நாம் தேர்தலை எதிர்கொண்டோம். 2015ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்ற பின்னர், நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு இணங்கினார். 99 சதவீத அதிகார குறைப்புடன் 19ஆவது திருத்தச்சட்ட வரைவு உயர்நீதிமன்றத்துக்கு சென்றது. சில விடயங்களை மாற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என நீதிமன்றம் சட்டவியாக்கியானம் வழங்கியது. எனவே, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத விதத்தில் '19' மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதன்மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது. சுயாதீன நிறுவனங்களுக்கு உறுப்பினர்களை ஜனாதிபதி தெரிவுசெய்தால் அதனை நிராகரிக்கும் அதிகாரம் பேரவைக்கு காணப்பட்டது. இதன் மூலம் நீதிமன்றம் உள்ளிட்ட நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்கின.

20ஆவது திருத்தச்சட்ட வரைவு ஊடாக நாடாளுமன்ற பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய அதிகாரங்கள் இல்லை. ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க மட்டுமே முடியும். அதனை ஜனாதிபதி ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். எனவே, முப்படை தளபதிகள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் உட்பட சுயாதீன நிறுவனங்களுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்குவார். இதனால் உயர் பதவிகளை வகிப்பவர்களுக்குச் சுயாதீனமாக செயற்படமுடியாத நிலை ஏற்படும். எவ்வாறு அரசுக்கு எதிராக தீர்மானங்களை வழங்குவது என்ற அச்சநிலையும் உருவாகும். உயர் நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படாவிட்டால் நாட்டை முன்நோக்கி அழைத்துச்செல்ல முடியாது.

ஆக சர்வாதிகாரத்தை நோக்கிய பயணத்தின் ஆரம்பமே 20ஆவது திருத்தச்சட்ட மூலமாகும். நாடாளுமன்றத்தை ஒரு வருடத்துக்கு பிறகு ஜனாதிபதியால் கலைக்கமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் எவ்வாறு நிலையானதொரு ஆட்சியை எதிர்ப்பார்க்கமுடியும் என்று கேள்வி எழுப்பினார்.

(ஓ,ம,44)

## மொட்டு...

லில் சுதந்திரக் கட்சியின் பல உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். அவர்கள் பொதுஜன பெரமுனவின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் பங்களிப்பு செய்தனர். எனினும், சுதந்திரக் கட்சிக்குப் போதுமான தேசியப் பட்டியல் ஆசனங்கள் வழங்கப்படவில்லை.

பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசனை செய்யாமல் அரசால் தேசியப் பட்டியல் ஆசனங்கள் தீர்மானிக்கப்பட்டன. பொதுத்தேர்தலின் பின்னர் நியமனங்கள் வழங்கப்பட்ட வேளை பல பங்காளிக் கட்சிகள் புறக்கணிக்கப்பட்டன.

சுதந்திரக் கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைப் பொதுஜன பெரமுன தொடர்ந்தும் புறக்கணித்தால் கூட்டணியைத் தொடர்வதா எனச் சிந்திக்க வேண்டியிருக்கும், என்றார்.

(ஓ,5,22)

## சிறப்புத்...

தற்போது நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டு அரசமைப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ள நிலையில், 20ஆவது திருத்தம் ஒரு சில வாரங்களில் கொண்டுவரப்படவுள்ளது. இதற்காக குறுகிய கால மாற்றங்கள் மற்றும் நீண்டகால மாற்றங்கள் என்ற அடிப்படையில் அரசமைப்பு வரைவுகளைக் கொண்டுவருவதற்காக உரிய நிபுணர் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் மாகாண சபைகளுக்கு ஆதாரமாகவுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அரசின் நிலைப்பாடுகள் இன்னும் தெளிவாகவில்லை. அரசிலுள்ள தமிழர் தரப்பினர் 13 ஆவது திருத்தச் சட்டம் அவசியம் எனக் கூறிக்கொண்டுள்ள போதிலும் அமைச்சரவையில் அங்கம் வகுக்கும் பெரும்பாலான சிங்கள அமைச்சர்கள் மாகாண சபை முறைமை அவசியமில்லை என்பதையே கூறி வருகின்றனர்.

இந்தநிலையில், 13ஆவது திருத்தம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடன் ஆளும் தரப்பினர் நடத்திய பேச்சின்போது இது குறித்து சில இராஜதந்திர ரீதியிலான தீர்மானங்களை எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இந்திய இல்லத்தில் இராப்போசன விருந்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள், இந்த விடயம் குறித்தும் இந்தியத் தூதுவருடன் பேசியுள்ளனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் அரசு கைவைக்க நினைக்கவில்லை எனவும், இது குறித்து தெளிவான நடைமுறைகளை அறியத்தருவதாகவும் இலங்கை தரப்பு வாக்குறுதியளித்துள்ளது என்று ஆளும் தரப்பின் அமைச்சர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இதனிடையே 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து இராஜதந்திர ரீதியில் பேச்சுகளை முன்னெடுக்க டில்லித் தலைமை இராஜதந்திரி ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளார் எனவும், அவர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் சிறப்பு நிபுணராக இருக்கக்கூடும் எனவும் தெரியவருகின்றது.

இவ்வாறான இராஜதந்திர ரீதியிலான பேச்சுகளில் இலங்கை ஈடுபட அதிகளவில் வாய்ப்புகள் உள்ளன என்று ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஓ,5,22)

## காயமடைந்த...

னின் செவிப்பறை கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தைப் பொலிஸார் மறித்த போது நிற்காமல் சென்றதாகத் தெரிவித்து, உழவியந்திரத்தில் சென்ற 3 இளைஞர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்தனர். பொலிஸாரின் தாக்குதல் தொடர்பில் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரியிடம் 3 இளைஞர்களையும் பொலிஸார் முற்படுத்தினர். நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் அவர்களைப் பொலிஸ் பிணையில் விடுதலை செய்தனர்.

பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்திருந்த இளைஞர்கள் 3 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று அதிகாலை சேர்க்கப்பட்டனர். அவர்களிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் நேற்று வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளார். (ஓ,5)

## '20' விவகாரத்தால்...

திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்த நிலையில், 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எடுத்த எடுப்பிலேயே ஆதரவு வழங்கக்கூடாது எனவும், அதை மதிப்பிடுவதற்கு இடைக்காலக் குழுவொன்றை நியமிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது எனவும் அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலரும் தற்போதைய ஆலோசகருமான பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு தனக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறிக்க முயலக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் நாட்டுக்குச் சாதகமான விடயங்கள் பல அந்தத் திருத்தத்தில் உள்ளன. எனவே, 20ஆவது திருத்தம் எதற்கு எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டுக்குப் புதிய அரசமைப்பே தற்போது தேவை எனவும் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நல்லாட்சியில் இரு தரப்பு ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் முற்போக்கான பல விடயங்கள் நடைமுறைக்கு வந்தன.

19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையால் நாடு பெரும் நன்மைகளைப் பெற்றது. ஆனால், 20ஆவது திருத்தச் சட்ட வரைவு ஊடாக முற்போக்கு சக்திகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. ஆகையால், இந்தச் திருத்தச்சட்ட வரைவை மதிப்பிடுவதற்கு இடைக்காலக் குழுவொன்றை எமது கட்சி நியமிக்க வுள்ளது, என்றார். (ஓ,5,22)

## கொடுங்கோல்...

20ஆவது திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றத் துடிக் கின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது என்பதற்காக மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசு மீற முடியாது. அதற்கான அதிகாரம் அரசுக்கு இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின் கொடுங்கோன்மையில்லை. அரசுக்குப் பெரும்பான்மை கிடைத்துள்ளதால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீற முடியாது.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக மனுதாக்கல் செய்வதற்கான அடிப்படை உரிமை, அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டமை போன்றன 19ஆவது திருத்தத்தில் காணப்பட்ட சிறந்த விடயங்களாகும்.

மக்களின் உரிமைகளை மீறும் விதத்தில் நாட்டின் தலைவர் செயற்பட்டால் அதற்கு எதிராக சட்டமா அதிபர் மனுத்தாக்கல் செய்யக் கூடிய நிலை 19ஆவது திருத்தத்தின் மூலம் காணப்பட்டது.

20ஆவதுதிருத்தம்நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி விரும்பினால் அவரால் 150 அமைச்சர்களையும் நியமிக்க முடியும், என்றார். (ஓ,5,22)

## 20 ஆம் திருத்தத்து...

களுடன் ஐக்கிய மக்கள் சக்தி பேச்சு நடத்தும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அத்துடன், '20' இல் உள்ள பாதக விளைவுகளை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும், எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. (ஓ,5,44)

## சந்தேகத்தில்...

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஓ,5,25)

# 2025ஆம் ஆண்டு நிறைவுக்குள் அனைவருக்கும் குடிதண்ணீர்

## ஜனாதிபதி கோத்தாபய கூடிய கவனம்



**கொழும்பு, செப்.5**
**2025 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் 24 மணி நேரமும் அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் வேலைத்திட்டத்தின் எதிர்கால முன்னெடுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்றது.**

கிராமிய மற்றும் பிரதேச குடிதண்ணீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதாவது;

'அனைவருக்கும் குடிதண்ணீர்' சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் மக்களுக்கு முன்வைக்கப்பட்ட மிக முக்கிய வாக்குறுதியாகும்.

எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் 47 இலட்சம் குடும்பங்களுக்கு தண்ணீரைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதோடு, அதற்காக 40,000 கிலோமீற்றர்கள் நீர்க் குழாய்கள் புதிதாகப் பதிக்கப்படவுள்ளன. இதுவரை நீர்வழங்கலுக்குச் செலவிடப்பட்ட செலவினங்களில் அரைவாசி நிதியைப் பயன்படுத்தி இத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. நீரோடைகள், நீரூற்றுக்களை இனங்காணல் அவற்றை அபிவிருத்தி செய்தல் இவ்வேலைத்திட்டத்தின் படிமுறைகளாகும். நீரூற்றுக்களைப் பாதுகாப்பதற்காக மரங்களை நடுவதற்குமதிட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில்மாத்திரம்முழுநீர்வழங்கலில்45வீதம் நீர்க் கசிவின் மூலம்வீணாக்கப்படுகின்றது. கடந்த ஒரு சில மாதங்களில் புதிதாக நீர்க்குழாய்களைப் பொருத்துவதன் மூலம் அதனை 15வீதம் வரை குறைக்க முடிந்துள்ளது. தண்ணீரைப் பாதுகாப்பதற்காக நீர்க் கசிவுள்ள இடங்களை இனங்கண்டுபுதிதாகநீர்க்குழாய்களைப்பொருத்தும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

## உடைமையில் கசிப்பு; 25 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, செப். 5

உடைமையில் கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைஅடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

சிங்களம்
G.C.E O/L (இரண்டாம் மொழி)
Past paper class
சனி மற்றும் ஞாயிறு } பி.ப 2.00-பி.ப 3.00 வரை
ஆரம்பம் 05.09.2020 சனியன்று
சிங்களம் எழுத, பேச, வாசிக்க புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
ஸ்ரீ மாஸ்டர்
164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 703 3729

வேலையாள்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள்கள் தேவை.
01. காசாளர் (பெண், வயதெல்லை 20 - 35)
02. விற்பனையாளர் (பெண், ஆண் - வயதெல்லை 20-35
03. களஞ்சிய காப்பாளர் (ஆண், வயதெல்லை 25 - 35)
நேரில் சமுகம் தரவும் (ஞாயிற்றுக்கிழமை)
NORTHWAY FAMILY MART
இல.184, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.: 021 222 6002

## சஞ்சிகை வெளியீடும், ஒன்றுகூடலும்

கொடிகாமம்,செப்.5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட வவுனியா வளாக கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறி (அணி 5) மாணவர்களின் "முது சித்தம்" சஞ்சிகை வெளியீடும், ஒன்றுகூடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

வவுனியா வளாக பிரதான மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு தலைவர் க.ஆறுமுகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் தேர்ச்சி மிகு அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

## போதையில் சாரத்தியம்; 10 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி,செப். 5

மதுபோதையில் வாகனம் செலுத்திய 10 சாரதிகளுக்கு 2 லட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மதுபோதையில், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மது போதையில் வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 8 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

காலை 8 - மதியம் 2.30
07.09.2020 முதல்
ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

2019
மதுசாளினி (KIli) 01(BT)
யோகதீபன் (JAF) 01(BT)
யசிதா (MULLAI) 01(BT)
அருள்ராஜ் (MAN) 01(ET)
தனுஜன் (MULLAI) 02(BT)
தரசன் (KILI) 02(BT)
ஜீவரதன் (MULLAI) 02(ET)
பிரியங்கன் (KILI) 02(ET)
தக்சயன் (MULLAI) 03(ET)
நிலவன் (KILI) 03(BT)
ஐந்துசன் (JAF) 03(ET)
லாவண்ஜா (JAF) 04(BT)

2018
கலக்சிகா (JAF) 01(BT)
ரஜிதா (MULLAI) 01(BT)
விதுர்சன் (KILI) 01(BT)

2017
கேசனா 01(BT)
தமிழின்யன் 01(ET)
மேரிகனிஸ்ரா 02(BT)
சரண்சனா 03(BT)
கோகுலன் 03(ET)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## மரண அறிவித்தல்



மண்ணில் 06 . 01 . 1960

விண்ணில் 04 . 09 . 2020

### திருமதி சரோஜினி இராஜகுலேந்திரன்

நல்லூர் செல்லர் வீதியைச் சேர்ந்த திருமதி சரோஜினி இராஜகுலேந்திரன் நேற்று (04.09.2020) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராஜகுலேந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், சஜீசன் (கனடா), துஷாயினி (ஆஸ்திரேலியா), யாதவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், மோகனதாஸ் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சண்முகதாஸ் (கனடா), யோகதாஸ், ( e lab -ஊரெழு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நரேந்திரன் (ஆஸ்திரேலியா), வே(ா)ஜினி (கனடா), காயத்திரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், டிலன், மாயா, யாறா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவானி (ஆஸ்திரேலியா), சுமதி (கனடா), உதயச் செல்வி (இலங்கை), சௌந்திரவல்லி (கனடா), மங்களேஸ்வரி (கனடா), நளாஜினி (கனடா), சுலோஜனாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.09.2020 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு
**இராஜகுலேந்திரன்** - 0061 4684 06519
**சஜீசன்** -+ 0014 1670 80545
**யாதவன்** -+ 0061 4135 67030

தகவல்:
**செ.யோகதாஸ் (சகோதரன்)**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை : 3: வள்ளுவர் ஆண்டு : 2051 ஆவணி 20 சனிக்கிழமை (05.09.2020) சிகரம் : 12

பத்தொன்பதுக்கு கொள்ளிபோட்டு அதிகாரமெல்லாம்
கொத்தாகக் கோத்தாவுக்கே அள்ளிக் கொடுத்து = சித்தமறியாச்
சிலோனுக்கு சத்தமில்லாமல் சர்வாதிகாரி ஆக்கிடவே
ஹலோ சொல்லி வரும் இருபதை தடுப்பவர் ஆருண்டு உலகில்?

ஒட்டுக்குழுச் சுவாமிகள்




# அன்னையரின் கண்ணீரை பிரிக்காதீர்கள்

நிலாந்தன்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்பு, நடந்து முடிந்த தேர்தலில் அந்த மாவட்டத்தில் போட்டியிட்ட கருணாவை ஆதரிப்பதில்லை என்று பகிரங்கமாக அறிவித்தது. அவ்வறிவித்தலின் பின்னணியில், தேர்தலுக்குப் பின் அண்மையில் அந்தச் சங்கத்தின் அலுவலகம் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன் கிளிநொச்சியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் வாக்களிக்கக் கூடாது என்று ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிப்பது என்று பகிரங்கமாக முடிவெடுத்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த போராட்டத்தில் அந்த அமைப்பு பங்குபற்றவில்லை. பதிலாக சனிக்கிழமை வவுனியாவில் அது ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை ஒழுங்குபடுத்தியது.

அதேசமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருந்த பேரணிக்கு முன்னதாக சனிக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் அரசியல் கைதிகளுக்காக நீதி கோரி ஒரு கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தியது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை யாழ் நகரப் பகுதியிலிருந்து நடந்த பேரணியில் அந்தக் கட்சி பங்குபற்றவில்லை.




ஞாயிற்றுக்கிழமை நடந்த போராட்டத்தில் ஒப்பீட்டளவில் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் போராடும் அமைப்புக்கள் ஒற்றுமையாகத் திரண்டு தமது எதிர்ப்பைக் காட்டின. பொலிஸார் தடைகளை ஏற்படுத்திய போதிலும் அங்கு உள்ள அமைப்புகள் துணிச்சலாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. திருகோணமலையில் கடற்கரையில் ஒரு கவன ஈர்ப்பு. ஆளுனர் அலுவலகத்துக்கு முன் ஒரு கவன ஈர்ப்பு. ஒற்றுமையில்லை.

வடக்கில் கிளிநொச்சியில் ஒரு சிறு ஊர்வலம் நடந்தது.முல்லைத்தீவில் ஒரு சிறு ஊர்வலம் நடந்தது. அவை யாழ்பாணத்தில் நடந்த ஊர்வலத்தோடு இணையவில்லை.

யாழ்ப்பாணத்தில் இரண்டு ஊர்வலங்கள் நடந்தன. ஒன்று பெரியது. அது நகரத்திலிருந்து தொடங்கி கச்சேரியைச் சென்றடைந்தது. மற்றது ஒப்பீட்டளவில் சிறியது. அது கிட்டு பூங்காவில் இருந்து தொடங்கி ஐ.நா அலுவலகத்தை சென்றடைந்தது. பெரிய ஊர்வலத்தில் பெரும்பாலான தமிழ் கட்சிகள் பங்குபற்றின. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் அதில் பங்கு பற்றவில்லை.

அதேசமயம் அக்கட்சியோடு தற்பொழுது முரண்பட்டு நிற்கும் மணிவண்ணன் அணியினர் யாழ். நகரில் நடைபெற்ற ஊர்வலத்தில் காணப்பட்டார்கள். அதேசமயம் கிட்டு பூங்காவில் இருந்து தொடங்கிய ஊர்வலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் காணப்பட்டார்கள். இவ்வாறு ஒரே மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்புக்கள் இரண்டாகப் பிரிந்து ஊர்வலம் நடத்த வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டேன். யாழ்.காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தைச் சேர்ந்த ஒரு முதிய அம்மா சொன்னார் "ஊர்வலத்துக்கு சிலநாட்கள் முன்னதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டாம் நிலை முக்கியஸ்தர் ஒருவரோடு நான் கதைத்தேன். அந்தக்கட்சி ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருந்த ஊர்வலத்தில் பங்கேற்கப் போவதில்லை என்ற தொனிப்பட அவர் பதில் கூறினார்" என்று. கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த அமைப்பின் முக்கியஸ்தரான ஒரு தாய் பல மாதங்களுக்கு முன்பு தமது கட்சிக்கு எதிராக தெரிவித்திருந்த கடுமையான விமர்ச னங்களின் பின்னணியிலேயே தாங்கள் இவ்வாறு முடிவு எடுத்ததாகவும் அவர் கூறியிருக்கிறார். நடந்து முடிந்த தேர்தலுக்கு முன் சுமந்திரன் சிறீதரனுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்ததும் கிளிநொச்சியைச் சேர்ந்த இதே அம்மா தான் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அந்த ஒரு அம்மா தெரிவித்த கருத்துக்காக நீங்கள் 'முழுப் போராட்டத்தையும் புறக்கணிக்க வேண்டாம் என்ற தொனிப்பட யாழ்ப்பாணச் சங்கத்தைச் சேர்ந்த அந்த அம்மா மேற்படி கட்சி முக்கியஸ்தரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். எனினும் அந்தக் கோரிக்கை ஏற்கப்படாமல், அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஊர்வலங்கள் இடம்பெற்றுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஊர்வலத்துக்காக பாதிக்கப்பட்ட மக்களை ஏற்றிக்கொண்டு யாழ்.நகரத்தை நோக்கி வந்த ஒரு பேருந்து திசை திருப்பப்பட்டு வேறு ஒரு ஊர்வலத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பூநகரியில் ஒரு பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருந்த பேரணியில் பங்குபற்றுவதற்காக காத்திருந்த மக்களை ஏற்றிக் கொண்டு வந்த ஒரு பேருந்து வேறு ஒருஊர்வலத்தில் அவர்களை இறக்கி விட்டிருக்கிறது.

(05ஆம் பக்கம் பார்க்க)



# காசேதான் கடவுளடா!

ஆர்.பிரகாஷ்



பலஸ்தீனத்திடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை அந்த நாட்டிடம் ஒப்படைத்து பலஸ்தீனத்தின் இறைமையை அங்கீகரிக்கும் வரையில் இஸ்ரேலுடன் உறவில்லை என்று தெரிவித்திருந்த ஐக்கிய அரபு இராச்சியம் தன் நிலைப்பாட்டில் இருந்து வழிதவறியுள்ளது. பணத்தையும் அதிகாரத்தையும் மையமாகக் கொண்டு சுழலும் இந்தப் பூகோள அரசியலில், தனது சுய கௌரவத்தை இழந்து ஓர் அதிர்ச்சிகர முடிவை எடுத்துள்ளது ஐக்கிய அரபு இராச்சியம். இஸ்ரேலுடன் நேரடி வர்த்தகம் என்பதே அந்த முடிவு. சுருங்கச் சொல்லின், இஸ்ரேலை ஒரு நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் அங்கீகரித்துள்ளது.

### நீண்டகாலப் பகைமை

19ஆம் நூற்றாண்டு வரையில் யூதர்களுக்கு என்று தனியான நாடு இல்லை. உலகம் முழுக்கச் சுற்றிய யூதர்கள் தமக்கென தனிநாட்டை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு பலஸ்தீனத்தை இலக்கு வைத்தனர். அதாவது பலஸ்தீனர்களிடம் இருக்கும் நிலத்தை அவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிக விலைகொடுத்து வாங்கி 'நில வங்கியொன்றை' உருவாக்கி, அதைத் தனிநாடாக அறிவித்து பலஸ்தீனர்களை ஒடுக்குவதே யூதர்களின் திட்டம். பணத்தால் யூதர்கள் பலஸ்தீனர்களின் நிலத்தை கொள்வனவு செய்து அவர்களை நிரந்தர அடிமைகளாக மாற்றினார்கள். அதன் பின்னர் படிப்படியான சுரண்டல்கள் மூலம் இஸ்ரேல் மென்மேலும் விரிவடைய விரிவடைய பலஸ்தீனம் சிறுத்துக் கொண்டே வந்தது. இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்பையடுத்து மத்திய கிழக்கில் இருந்து அந்த நாட்டைத் தனிமைப்படுத்த வேண்டும் என்று ஏனைய நாடுகள் உறுதிபூண்டன. இஸ்ரேலின் பணப் பெறுமதியை நிராகரித்தல், அந்த நாட்டுடன் வர்த்தகம் செய்வதைத் தவிர்த்தல், இஸ்ரேலுடனான வெளியுறவுக் கொள்கையைக் கைவிடுதல் என்ற முடிவுகளை அரபு நாடுகள் மேற்கொண்டு அதன்படி செயற்பட்டன.

### பணமா , பாசமா?

பணமா, பாசமா என்ற போராட்டம் மிகக் கனதியானது. இடங்களைப் பொறுத்து இந்த இரண்டில் ஒன்று வெற்றிபெறும். அரபு நாடுகளின் பலஸ்தீனத்துக்கான பாசப்போராட்டம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பணத்துக்கு முன்னால் வலுவற்றதாகவே ஆகிப் போயுள்ளது. பலஸ்தீனர்களைக் கைவிட்டு இஸ்ரேலுடன் நேரடி வர்த்தகம் செய்வதற்கு முன்வந்துள்ளது ஐக்கிய அரபு இராச்சியம். இதற்காக நேரடி விமான சேவைகளும் இயக்கப்படவுள்ளன. ஐக்கிய அரபு இராச்சியம் இஸ்ரேலுடன் வர்த்தகம் செய்வதற்கு ஏற்பட்டுள்ள இணக்கம் இஸ்ரேலுக்குக் கிடைத்த மூன்றாவது வெற்றி என்றே கருதப்படுகின்றது. 1979 ஆம் ஆண்டில் எகிப்து, இஸ்ரேலுடன் நேரடி வர்த்தகத்தில் ஈடுபட முன்வந்தது. இது இஸ்ரேலின் முதல் வெற்றி. அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் ஜோர்தான், இஸ்ரேலுடன் நேரடி வர்த்தகம் செய்வதற்கு முன்வந்தது. இது இஸ்ரேலுக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி. தற்போது இஸ்ரேலுக்குக் கிடைத்திருப்பது மூன்றாவது வெற்றி மட்டுமல்ல இமாலய வெற்றியும்கூட.

### பரிதாபப் பலஸ்தீனர்கள்

பலஸ்தீனத்தில் பலஸ்தீனர்களுக்கு எதிராக யூதர்கள் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் கொஞ்சநஞ்சமல்ல. ஒவ்வொரு நாளும் அங்கு ஏதோவொரு தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளது. பலஸ்தீனத்தின் மேற்குக் கரை, காஸாமுனை போன்ற பகுதிகள்தான் இன்று உலகிலேயே அதிக அமைதியற்ற பகுதிகளாக உள்ளன. பலஸ்தீனர்களை இஸ்ரேலிடம் இருந்து மீட்கும் மீட்பர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்ட அரபு நாடுகள் இன்று தம் வர்த்தகத்துக்காகவும், அதிகாரப் போட்டிக்காகவும் அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும் மண்டியிட்டு வருவது உண்மையில் வெட்கக்கேடானது. பலஸ்தீனர்களுக்காக அன்றும் இன்றும் போராடிக் கொண்டிருப்பது, ஹமாஸ் ஆயுதக் குழுவே. ஓர் இனத்தை அதன் அழிவில் இருந்து எந்த நாடும் காத்து இரட்சிக்காது என்பதற்கு ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல பலஸ்தீனர்களும் சிறந்த உதாரணம்.

ஆர்.லயனல்



## களிமண் ராஜாவுக்கு காட்சியகம்

ரென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனாக வலம் வரும் ஸ்பெய்னின் ரபேல் நடால், தனது கிண்ணங்கள் மற்றும் விருதுகளைக் காட்சிப்படுத்துவதற்காக தனியானதொரு காட்சியகத்தையே திறந்துள்ளார்.

ரபேல் நடால் பல்வேறு உலக சாதனைகளைத் தன்வசம் வைத்துள்ளார். களிமண் தரையான பிரெஞ்சுத் தொடரில் இதுவரை 10 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளார். களிமண் தரையில் ஒரு கிண்ணத்தைக் கைப்பற்றுவதே பல வீரர்களுக்குக் கனவாயுள்ள நிலையில் 10 கிண்ணங்களைக் கைப்பற்றி பெரும் சாதனையையே நிகழ்த்தியிருந்தார் நடால். இதனால்தான் இவர் 'களிமண் தரை ராஜா' என்று செல்லமாக அழைக்கப்படுகின்றார். இவ்வாறு பல்வேறு சாதனைகளை அடுக்கியிருக்கும் நடால் தனது கிண்ணங்கள் மற்றும் விருதுகளை வைத்து தனியான காட்சியகம் ஒன்றை அமைந்துள்ளார். ஸ்பெய்னின் கால்பந்தாட்ட அணியின் தலைவரான ராமோஸ் அண்மையில் நடாலின் காட்சியகத்துக்கு சென்று அவரின் சாதனை கள் மற்றும் விருதுகளைப் பாராட்டியுள்ளாராம்.



## டோனியின் கையில் ரெய்னா

ஐ.பி.எல் தொடர் ஆரம்பமாகும் முன்னரேயே சென்னை அணிமீது பெரும் கவனக்குவிவு ஏற்பட்டுள்ளது. சென்னை அணியின் தலைவராக உள்ள டோனியும், உப தலைவரான ரெய்னாவும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தமை, சென்னை அணியில் உள்ள வீரர்கள் இருவர் உள்ளிட்ட 13 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை, ரெய்னா திடீரென்று ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகி இந்தியா திரும்பியமை என்பன இந்தக் கவனக் குவிவுக்கான காரணங்கள். இதில் ஆகப்பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது ரெய்னா தொடரில் இருந்து விலகிய விவகாரம். ரெய்னா தொடரில் இருந்து விலகியபோதிலும் அவருக்குப் பதிலாக பிறிதொரு வீரரை சென்னை அணி இன்னமும் அறிவிக்கவில்லை. இது ரெய்னா தொடர்பில் இன்னும் உறுதியான நிலைப்பாடு எட்டப்படவில்லை என்ற தகவலையே வெளிப்படுத்துகின்றது. ரெய்னாவும் மீண்டும் அணிக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளாராம். எனினும் தனது கையில் ஒன்றும் இல்லை டோனி விரும்பினால் ரெய்னா தாராளமாக வரலாம் என்று கைவிரித்துள்ளாராம் சென்னை அணியின் உரிமையாளரான சீனிவாசன். ஆக, டோனியின் கைகளில்தான் தற்போது ரெய்னாவின் இந்த வருட ஐ.பி.எல் தொடர் பங்குபற்றல் உள்ளது. பார்க்கலாம் என்ன நடக்கின்றது என்று.

## ஐ.பி.எல்லுக்கு அந்த சிக்கல்!

கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் ஐ.பி.எல் தொடர் எப்போது ஆரம்பமாகும் என்று ஆவலுடன் காத்திருக்கையில் அந்தத் தொடர் திட்டமிட்டபடி நடைபெறுமா என்ற பெரும் சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது. முன்னதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் வீரர்கள் இருவர் உள்ளிட்ட 13 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பி.சி.சி.ஐயின் மருத்துவக் குழுவுக்குள்ளும் கொரோனா ஊடுருவியுள்ளதாம். அந்த மருத்துவக் குழுவின் உறுப்பினர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் திட்டமிட்டபடி தொடர் நடைபெறும் என்று பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

DREAM11 IPL

# விக்னேஸ்வரனின் தேரும், பேரினவாதிகளின் உலாவும்



ராஜ்குமார்

ஏண்டா இப்படி பேசினோம்" என்று வெறுத்துப் போகுமளவுக்கு முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வி.விக்னேஸ்வரனை "சும்மா வைச்சு செய்து வருகிறார்கள்" தென்பகுதியின் அரசியல்வாதிகளும் இனவாதிகளும். புதிதாக நாடாளுமன்றத்துக்கு தெரிவான விக்னேஸ்வரன் தனது முதல்நாள் உரையில் " உலகின் மூத்த மொழி தமிழ்மொழி" என்றும்" இலங்கையின் மூத்த குடி மக்கள் தமிழர்கள்" என்றும் கெத்துக்காட்டப்போய், கடைசியில் சிக்கலிலே சிக்கி சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கிறார். கன்னி உரையையே கண்டனம் வரக்கூடிய உரையாக நிகழ்த்திய விக்கினேஸ்வரனை கண்டம் பண்ண தயாராகி நிற்கிறார்கள் தெற்கு இனவாதிகள்.

விக்கினேஸ்வரன் வாசித்தது என்னவோ வாஸ்த்தவமாகத்தான் இருந்தது. உலகின் மூத்தமொழிகளில் தமிழ் , எட்டுக் கோடிப்பேர் பேசும் மொழியாக இருக்கிறது. எனவே தற்போது பேச்சு வழக்கில் உள்ளமொழிகளில் தமிழே தொன்மையானது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இதற்கு அடுத்து லத்தீன் ,ஹீப்ர ஆகிய மொழிகள் 3 ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் எகிப்திய மொழி 2ஆயிரம் வருடங்களுக்கு முன்னும், கிறீக் 1450 வருடங்களுக்கு முன்னும் சீனமொழி 1200 வருடங்களுக்கு முன்னும் அரபு மொழி ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு கிட்டத்தட்ட 6ஆயிரத்து 500 மொழிகள் உலகிலே புழக்கத்தில் உள்ளன. இந்த வரிசையில் பார்க்கும் போது சிங்கள மொழி கி.பி 6 ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றுள்ளதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. உலகுக்கு இறுதியாக அறிமுகமான மொழிகளில் சிங்களமும் ஒன்றாக கருதப்படுகிறது. ஏன் இவ்வளவு தூரம் ஆராய்ச்சிகள் அகழ்வுகள் என்று நோண்டி நொங்கெடுக்காமல் சாதாரணமாக இணையத்திலே கூகிளில் உலகின் முதல்மொழி என்று அடித்தாலே தமிழ் என்று காட்டுகிறது. இவ்வளவுக்கு உலகமே ஏற்றுக்கொண்ட விடயத்தை விக்கினேஸ்வரன் கூறிய போது தெற்கு கெம்பிக் கிளர்ந்தது ஆச்சரியமானது மட்டுமல்ல சிறுபிள்ளைத் தனமாகவும் பார்க்கப்படுகிறது. அதிலும் அவர்கள் ஏகத்துக்கு கடுப்பாக்கிய விடயம் இலங்கையின் முதல்குடி மக்கள் தமிழர் என்ற விடயம்தான்.

### பாம்புக்கு தலை, மீனுக்கு வால்

மகாவம்சம் போன்ற ஏகப்பட்ட வம்சங்களை வரலாற்று நூல்களாக தங்களுக்குச் சாதகமாக தாங்களே எழுதி "இதுவே கட்டளை இதுவே சாசனம்" என்று பாகுபலி வசனம் பேசிக்கொண்டிருந்தவர்கள் சிங்களப் பேரினவாதிகள். ஆதாமையும் ஏவாளையும் ஆண்டவன் படைத்ததுபோல, இலங்கையில் சிங்களவர்களையும் பௌத்தர்களையும் புத்தனே படைத்தான் என்பது போலவும் - சிங்களவர்களும் பௌத்தர்களும் வானத்திலிருந்து இலங்கையில் குதித்தவர்கள் போலவும் 'கப்சா' கதைவிட்டுக்கொண்டி ருந்தவர்களுக்கு திடுதிப்பென விக்னேஸ்வரன் வந்து நாடாளுமன்றத்திலே உண்மையைப் போட்டுடைத்தது தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. அதனால் அவரை கிண்டிக் கிழங்கெடுக்க ஆரம்பித்தார்கள். இந்தச் சர்ச்சைக்கு முதலில் பிள்ளையார் சூழிபோட்டது தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகளால் ஏதோ தப்பி பிழைத்திருக்கும் சஜித் கட்சியினர்தான். அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மனுஷ நாணயக்கார தான் முதலிலே பிரச்சினையை கிளப்பிவிட்டார். விக்கினேஸ்வரன் உரையைக் கடுமையாகக் கண்டித்து அது ஹன்சார்ட்டில் இடம்பெறக்கூடாது என்று முதல் பொறியைப் பற்றவைத்தார். ஆனால் சபாநாயகரோ அதனை காதிலே வாங்காமல் விக்னேஸ்வரனின் உரையை ஹன்சார்ட்டில் இடம்பெறச்செய்துவிட்டார். இதேவேளை தமிழ் - முஸ்லிம்களை பகைத்துக் கொள்ள விரும்பாத சஜித் கட்சி இந்த விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. அதாவது குறிப்பிட்ட விக்னேஸ்வரன் மீதான கண்டனம் மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட கருத்தே தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் கருத்தல்ல என்றிருக்கிறார் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க. பாவம் சஜித் கட்சிக்கு பாம்புக்கு தலை யையும் மீனுக்கு வாலையும் காட்ட வேண்டியநிலை. கடந்த தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைக்காமல் போயிருந்தால் அந்தக் கட்சி எதிர்க்கட்சி என்ற தகுதியைக் கூட இழந்திருக்கும். இதனால் தமிழர் தரப்பைப் பகைத்து கொள்ளவும் விரும்ப வில்லை. அதேவேளை நாங்களும் இனவாதிகள்தான் என்று சிங்களவர்களுக்கும் காட்ட வேண்டிய நிலை. இதனால் நரியை நனையாமல் குளிப்பாட்டி இருக்கிறார் திஸ்ஸ.

### நாங்களென்ன தக்காளித் தொக்கா?

ஆனாலும் அந்தக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகாவோ, தான் தற்போது ஓர் அரசியல்வாதி என்பதை மறந்து பழைய இராணுவ அதிகாரி என்ற நினைப்பில் விக்னேஸ்வரனுக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார். இதற்கு முன் சிங்களவர்களை குறைத்து மதிப்பிட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதை விக்கி மனதில்கொள்ள வேண்டும் என்று கூறி இனிமேலும் தொடர்ந்து இப்படி கதைத்தால் விக்கியும் சுட்டுக்கொல்லப்படுவார் என்று மறைமுகமாக அச்சுறுத்தியுள்ளார்.

அவர்களே இப்படி என்றால், நாங்கள் மட்டும் என்ன 'தக்காளித் தொக்கா' என்று தமது பங்குக்கு மண் அள்ளிப் போடாத குறையாக விக்கியைத் திட்டித் தீர்த்தும் வருகிறார்கள் ஆளும் கட்சியினர். அவர்களின் இனவாதப் பீரங்கிகளான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் ஒரு பக்கம் விக்னேஸ்வரனை அடித்து தோய்த்து பிழிந்து காயப்போட்டுக்கொண்டிருக்க இவர்களையெல்லாம் விழுங்கி ஏப்பமிடக் கூடிய ஒருவராக இனவாதத்தை வெடிக்க வைக்கும் அணுகுண்டாக இம்முறை நாடாளுமன்றத்துக்குள் புதிதாக நுழைந்து தடாலடியாக இராஜாங்க அமைச்சராகியிருக்கிறார் சரத் வீரசேகர. இவர் இது விடயத்தில் விக்னேஸ்வரனை காட்டு காட்டென்று காட்டித் தள்ளியிருக்கிறார். விக்னேஸ்வரன் இனிமேலும் இப்படிப் பேசினால் எழுந்து நின்று எதிர்ப்போம். நாடாளுமன்றிலிருந்து வெளியேற்றுவோம் இனிமேல் கவனித்து கொள்வோம் என்றெல்லாம் அவரும் முக்கித் தக்கியிருக்கிறார்.

### கைகொடுத்த சம்பந்தி

இதற்கிடையில் வின்னேஸ்வரனின் சம்பந்தியான வாசுதேவ நாணயக்கார விக்கிக்கு ஆதரவாக குரல்கொடுத்திருப்பது விக்னேஸ்வரனுக்குக் கொஞ்சம் தெம்பை ஊட்டியிருக்கும்.

" விக்னேஸ்வரன் கருத்தில் எனக்கும் உடன்பாடில்லைதான் .அது அவரது தனிப்பட்ட கருத்து. அதனை நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல வெறு எங்கேயென்றாலும் சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதனைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. அந்த உரையை ஹன்சார்ட்டில் பதியப்படக் கூடாதென்று சொல்வதற்கும் அவருக்கு எவருக்கும் அருகதை கிடையாது" என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்தக் கருத்தை அவர் நாடாளுமன்றில் சொல்லவில்லை. நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். இதனை நடாளுமன்றத்தில் சொன்னால் அவரை முதுகெலும்பு உள்ள அரசியல்வாதியாக ஏற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறாக பலரும் விக்னேஸ்வரனின் உரைக்கு ஏகப்பட்ட அர்த்தங்கள்கொடுத்து கண்டனங்கள் வெளியிட்டு வருவதை பார்க்கும்போது இனிமேல் இவ்வாறாக சிறுபான்மை மொழிகளையும் இனங்களையும் மேம்படுத்தி எவரும் நாடாளுமன்றில் கதைத்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே நினைக்கத் தோன்றுகிறது. விக்னேஸ்வரனுக்கு கொடுக்கும் அடியில் அவரும் அடங்க வேண்டும். அவருக்கு பின்வருபவர்களும் அடங்கிப் போக வேண்டும் என்ற நினைப்பே துருத்திக் கொண்டு தெரிகின்றது. முதல் நாளிலே இப்படித் துணிவாகப் பேசியவரை இப்படியேவிட்டால் இனிவரும் நாள்களில் இன்னும் அதிகமாக குதிப்பார் என்று அச்ச நிலைமையுமே தென்பகுதி இனவாதிகளை இவ்வளவு துள்ளாட்டம் போட வைத்திருக்கிறது.

### ஆராய்ச்சிக்குத் தயாரா?

ஆனால் இவ்வளவு நடந்த பின்பும் கடந்த 28 ஆம்திகதி மீண்டும் நாடாளுமன்றம் வந்த விக்னேஸ்வரன் ஏற்கனவே பேசியதை நியாயப்படுத்தி பேசினார். தன்னை தாக்கியவர்களுக்கு தரமான பதிலடி கொடுக்க மேலதிக நேரத்தை கேட்டு வாங்கி போட்டுத்தாக்கினார். உலகின் மூத்த மொழி தமிழ். இலங்கையில் மூத்த குடி தமிழர் என்ற கருத்தை விஞ்ஞானபூர்வமாக ஆராய, வரலாற்று அறிவு கொண்ட தமிழ்,முஸ்லிம்,சிங்கள அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவையோ அல்லது ஒரு சர்வதேச நிபுணர் குழுவையோ நியமிங்கள் - என்றார். ஆனால் அதுபற்றி இப்போது யாரும் கவனமெடுப்பதாக தெரியவில்லை. எங்கே அப்படி நிபுணர் குழுக்களை நியமித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டால் தங்கள் டப்பா டான்ஸாடிவிடும் என்ற கவலையிலோ என்னவோ 'கம்'என்று இருக்கின்றனர் அனைவரும்.

விக்னேஸ்வரன் தனது கருத்தை வலியுறுத்தி சில ஆதாரங்களை சபாநாயகரிடம் சமர்ப்பித்து அதனை ஹன்சார்ட்டில் பதிவேற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் பழைய எதிர்ப்புணர்வு இப்போ குறைந்திருப்பது போலவே தெரிகிறது. ஏனென்றால் இந்தப் பிரச்சினை பெரிதாகினால் உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ யாராவது ஒருவர் இது தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளப் போவதாகக் கிளம்பினால் கதை கந்தலாகிவிடும். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகிவிடும். இதுநாள் வரை ஊரையும் உலகையும் ஏமாற்றிய பல விடயங்கள் சந்திக்கு வந்துவிடும்.எனவே இது விடயத்தை கொஞ்சம் அமுக்கி வாசிக்கவே அரச தரப்பு விரும்புகிறது போலும்.

இந்த விடயம் தொடர்பான உண்மையான ஆராய்ச்சிகளை உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமானால் ஆட்சிதரப்பினரும் சரி,அதிகாரவர்க்கத்தினரும் சரி அதிக தூரம் அலையவேண்டியதில்லை. நாடாளுமன்றத்திலேயே மொட்டுக் கட்சிசார்பில் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்து வைத்திருக்கும் முன்னாள் வடமாகாண ஆளுநர் சுரேஸ் ராகவனிடமே ஏகப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஏனென்றால் அவர் தான் ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழ் பௌத்தர்களின் தற்போதைய பிரதிநிதி என்று அடிக்கடி சொல்லி பெருமைப்பட்டுக் கொள்பவர். இதுதவிர இலங்கையில் சிங்கள மொழி,பௌத்த வளர்ச்சி என்பன பற்றி ஏகப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். ஆனால் இதுவரை மௌனம் காக்கும் அவர் சிங்கள இனவாதிகளுக்கு எதிராக கருத்து சொல்வாரா என்பது சந்தேகமே. நவ சமாசமாச கட்சியின் செயலாளர் விக்ரபாகு கருணாரட்ன அண்மையில் வெளியிட்ட ஒரு கருத்தில் இலங்கையின் மூத்த குடிகள் தமிழர்களே என்றும் அதற்கான ஆதாரம் தன்னிடமுள்ளதாகவும் இதுபற்றி எவருடனும் விவாதிக்க தயார் என்றும் சவால் விட்டிருந்தார்.ஒரு சிங்களச் சட்டத்தரணி விக்னேஸ்வரன் மீது வழக்குப் போடப்போவதாகவும் குதித்துக் கொண்டிருக்கிறார்.

விக்னேஸ்வரன் தேரை இழுத்து தெருவிலே விட்டிருக்கிறார். அரசோ அதனை அமுக்கி மீண்டும் தேர்முட்டியிலேயே கொண்டுபோய் பூட்டிவிட பார்க்கிறது.

ஆனால் விக்னேஸ்வரனின் தேர் வீதி வலம் வந்தால் எல்லோருக்கும் நன்மை ,இல்லாவிட்டால் எல்லாம் வீண்.

# யார் காரணம்?



ந. பரமேஸ்வரன்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வில் முஸ்லிம் - தமிழர்களின் போராட்டமே இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சிய டையக் காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் உரையாற்றினார் என்று ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது. எதற்காக ரிஷாட் இப்படிக் கூறினார் என்பது புரியாத புதிராக இருக்கிறது. ஏனெனில், இலங்கையில் ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இலங்கையின் பொருளாதாரம் பெரிதாக வீழ்ச்சியடையவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரே டொலரின் பெறுமதி மோசமாக வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கையின் முக்கிய வருவாய்த் துறையான உல்லாசப்பயணத்துறையும் மரணித்து விட்டது. புலிகள் கட்டுநாயக்க விமானத்தளம் மீது தாக்குதல் மேற்கொண்டபோது கூட பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணமே தாக்குதலை நடத்தியிருந்தனர். சரி ரிஷாட் சொல்வது போல் தமிழர்களின் ஆயுதப்போராட்டம் காரணமாகவே இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என்று வைத்துக்கொண்டாலும் ஆயுதப்போராட்டத்தை நோக்கி தமிழர்கள் தள்ளப்பட்டமைக்கான காரணம் என்ன ?

இலங்கை சுதந்திரமடைந்தபின் நாட்டை ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளும் தமிழர்களை ஒடுக்கும் விதத்திலேயே செயற்பட்டு வந்தன. இதற்கு முஸ்லிம்களும் ஒத்துழைப்பு வழங்கினர் 1956ம் ஆண்டு தற்போது தேசபிதா என அழைக்கப்படும் கிறிஸ்தவரான சிங்களம் தெரியாத எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ( ஒக்ஸ்போர்டில் படித்து விட்டு நாடு திரும்பிய போது பண்டாரநாயக்காவுக்கு சிங்களம் தெரியாது ஆங்கிலத்திலேயே உரையற்றினார் ) தனிச்சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்த போது தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட பதியுதீன் முகம்மத் அதற்கு ஆதரவு வழங்கினார். (ஒருவேளை பதியுதீன் முகம்மதின் குடும்பத்தினர் அரபு அல்லது உருது மொழி பேசுகிறார்களோ தெரியவில்லை ) எனக்குத்தெரிந்த வரையில் இலங்கை, தமிழ்நாடு, மலேசிய முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்றே நான் நினைக்கிறேன். பின்னர் தரப்படுத்தலை கொண்டு வந்து இலங்கையில் ஆயுதப்போராட் டம் உருவாக காரணமாக இருந்தவரும் இதே பதியுதீன் முகம்மத் தான். கிழக்கில் குறிப்பாக அம்பாறையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அவ்வப்போது சிங்கள அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட போது தமிழர்களின் காணிகளை அடிமாட்டு விலைக்கு முஸ்லிம்கள் கொள்வனவு செய்தனர். இதன் காரணமாகவே அம்பாறையில் தமிழர்களின் சனத்தொகை வீழ்ச்சியடைந்தது. சுதந்திர மடைந்த காலப்பகுதியில் ஆசியாவில் முன்னேறிய நாடுகளுள் ஒன்றாகக் காணப்பட்ட இலங்கை (1950 காலப்பகுதியில் கூட இலங்கை ரூபாவும் இந்திய ரூபாவும் சம பெறுமதியுடையதாகவே காணப்பட்டன) இலங்கையின் பொருளாதார ரீதி யாக மிகவும் பின் தங்கியமைக்கான காரணம் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையே. லீ குவான் யூ எதற்காக சிங்கப்பூரை 'சிலோனாக 'மாற்றுவேன் என்று சொன்னார்? அந்தளவுக்கு அப்போது, இலங்கை சுதந்திர மடைந்த காலத்தில் ,சகல துறைகளிலும் தனித்துவம் மிக்க வர்களாகத் தமிழர்களே திகழ்ந்தார்கள். முப்படைத்தள பதிகளாக தமிழர்களே பதவி வகித்தனர். பதில் ஆளுநராக (Acting Governor General)ஒரு தமிழரே =நாகலிங்கம் என்பவரே = பதவி வகித்தார். வெள்ளைக்காரன் திறமைக்கு முதலிடம் கொடுத்தான். இதன் காரணமாகவே அன்று இலங்கை ஏனைய ஆசிய நாடுகளை விட முன்னணியில் திகழ்ந்தது. சோல்பரி பிரபு விடு முறையில் செல்லும் போது நாகலிங்கமே நாட்டை ஆட்சி செய்தார். சுதந்தி ரத்தின் பின்னர் புலிகளை ஒழிப்பதற்காக சர்வதேச ரீதியில் பிரசாரம் மேற்கொண்ட கதிர்காமருக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு சிங்களவர்கள் தயாராக இல்லை. புலிகளின் கடற்படையை நிர்மூல மாக்குவதில் முனைப்புடன் செயற்பட்ட சின்னையாவுக்கு கடற்படைத் தளபதி பதவியை வழங்குவதற்கு சிங்கள அரசால் முடியவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இராணுவச் சதிப்புரட்சி முன்னெடுக்கப்பட்ட வேளையில் அதனை முறிய டித்தவர்கள் தமிழ் படைத்தளபதிகள் தான்.

இன்றும் கூட நீங்கள் (முஸ்லிம்கள்) தமிழர்கள் முஸ்லிம்களுக்கு செய்த சேவைகள் எல்லாவற்றையும் மறந்து தமிழர்களை அடக்கி ஆள வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறீர்கள்; தமிழர்கள் போராடாமல் என்ன செய்வது? கல்முனை பிரதேச செயலர் பளீல், தான் வெளியிட்ட பொது அறிவு நூல் ஒன்றில் வடமராட்சியை சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தனது மனைவியின் தாலிக்கொடியை விற்று கிழக்கிலுள்ள பாடசாலை ஒன்றில் கிணறு வெட்டுவித்ததுடன் வீடு வீடாகச்சென்று முஸ்லிம் மாணவர்களை அழைத்து வந்து கல்வி புகட்டியதாக நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நீங்களோ (முஸ்லிம்கள்) கல்முனை தமிழ் பிரதேச செயலர் பிரிவை தரமுயர்த்தக்கூடாது என்று உண்ணாவிரதம் இருக்கிறீர்கள். இப்படியான நிலையில் தமிழர்கள் போராடாமல் என்ன செய்வது? கிழக்கில் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்தமைக்கும் பிள்ளையான் வெற்றி பெற்றமைக்கு முஸ்லிம்களின் ஆதிக்கமும் ஒரு காரணம் என்பதை மறந்து விடாதீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்முஸ்லிம் நல்லுறவு என்ற பெயரில் கல்முனையை முஸ்லிம்களுக்கு தாரை வார்க்கிறது என்பது கல்முனைத் தமிழர்களின் குற்றச்சாட்டு.

இலங்கை அரசாங்கத்தால் இன்று வரை ஒரு நீர்மூழ்கியைக் கொள்வனவு செய்யக்கூட முடியவில்லை ஆனால் புலிகள் தாங்களே சொந்தமாக இரு நீர்மூழ்கிகளைத் தயாரித்தனர்.



புலிகள் தயாரித்த நீர்மூழ்கி

புலிகளிடம் இருந்த தொழினுட்பத் திறன் சரியான வழியில் பயன்படுத்தப்பட்டிருந்தால் சிங்கப்பூருக்கு நிகராக மாத்திரமல்லாமல், அமெரிக்காவுக்கு இணையாக இலங்கை வளர்ச்சிஅடைந்திருக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். யுத்தம் முடிந்து விட்டது இனியாவது இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு உரிய இடத்தை வழங்கி நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றால் பொருளாதார ரீதியாக 1950 களில் இருந்த நிலைக்கு இலங்கையை கொண்டு செல்ல முடியும்.

# வீர மகள்

அடிமை மகள் அடுப்படிக்குள்
கனவோடு அணி வகுத்து
குந்தியிருந்து அழுத காலம் போய்
கொழுந்தணல் பற்றியெரிய
எழுச்சி கொண்ட அகிலத்து வீரம்
அண்டதுண்டமெல்லாம் அதிரும்படி
அணிவகுத்து நடந்தாள் வீரமகள்

நாளெதுவுமில்லை- அவளுக்கு
நட்சத்திரமும் இல்லை
கதி ஒன்றுதான்
அதுதான் பெண்வீரம்

வீரத்தின் புதிய செல்நெறி
வீரப்பூக்கள் மலர்ந்து
நறுமணம் எட்டுத்திக்குகளும்
வீரகீதம் பாடின

எம்மவள் வீர வரலாறு
எழுதப் புறப்பட்டு விட்டாள்
வீரமங்கை
அவள் எங்கள் நங்கை
வெற்றியும் கண்டாள்-ஆனால்
நீட்சிதான் எட்டவில்லையே!
நாதியர்களால் நசுக்கப்பட்டது.
எம்மவளின் வீரம்..

கொழுந்தொன்று வீழ்ந்ததென்று
கொண்டாடினர் கொடியவர்கள்
அசைந்தன காற்றில்
அலங்கரிக்கப்பட்ட துணிகள்
எம்மவளின் வீரக்காற்றில்தான்
அசைகின்றன என்பதை
நாதியர்கள் அறியவில்லைப்போலும்

த. ஐங்கரதீபன்
கிளி/ பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்






மாயன்

## புதிர் 9

பரிவழுதி பரிதாபமாக உணவுக்கடைப் பெண்ணைப் பார்த்தான். ஆனால் அவள் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. "பெண்ணே நான் சொன்ன பதில் தவறா?" என்று பரிவழுதி கேட்டேவிட்டான். அதற்கு அவள், " இளவரசரே, மூன்று கேள்விகளையும் கேட்டு அவற்றுக்கான பதில்களையும் நீங்கள் சொன்ன பின்னரே எவையெவை சரி, எவையெவை தவறு என்று சொல்ல முடியும். அதை மீறி முதலே உங்களுக்கு சரி எது, பிழை எது என்று சொன்னால் நான் கிளியாக மாறிப் பறக்க வேண்டியதுதான்" என்று சோகத்தோடு சொன்னாள்.

நால்வருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருபுறம் கடும் பசி. மறுபுறமோ புதிர்களுக்கான பதில்களைச் சரியாகச் சொல்கிறோமா என்ற சந்தேகம்.

திடீரென காக்கை குப்தன் " பெண்ணே, ஒருவேளை நாம் சொல்லும் பதில்களில் ஏதேனும் ஒன்று தவறாக இருந்துவிட்டால்..." என்று கேட்டான். சற்றும் தாமதிக்காமல் " அந்தப் பதிலைச் சொன்னாவர் கிளியாக மாற வேண்டியதுதான். அதோ பாருங்கள், இந்த நகரத்தில் பறந்து கொண்டிருக்கும் கிளிகள் எல்லாமே அப்படித் தவறான பதில் சொன்ன மனிதர்கள் தான்" என்று பதில்களைச் சொன்னாள் அவள். நால்வரும் வானத்தைப் பார்த்தனர். அங்கே நூற்றுக்கணக்கான கிளிகள் . பயம் பற்றிக் கொண்டது.

"ஆனால் கிளியாக மாறியவர் தவிர ஏனையவர்களுக்கு உணவு கொடுக்கப்படும்" என்றும் அவள் சொல்லிவிட்டுச் சிரித்தாள். பரிவழுதி யோசித்தான்.

> **சரி பெண்ணே, உன் எஞ்சிய இரு புதிர் களையும் சொல் லிவிடு,அவற்றுக்கான பதில்களையும் நான் மொத்தமாகவே சொல்கிறேன்**

" ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொருவராகப் பதில் சொல்ல முயன்று, மூன்றுக்குமே தவறான பதில் அளித்தால் மூவரும் கிளியாக மாற வேண்டியிருக்கும். அதனால் நானே எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்கிறேன். வருவது வரட்டும்" என்று உரத்துச் சொல்லிவிட்டு, கடைக்காரப் பெண்ணை நோக்கித் திரும்பினான்.

" சரி பெண்ணே, உன் எஞ்சிய இரு புதிர்களையும் சொல்லிவிடு,அவற்றுக்கான பதில்களையும் நான் மொத்தமாகவே சொல்கிறேன்" என்று கட்டளையிட்டான். அவனது தியாக உணர்வைக் கண்டு உணவுக்கடைப் பெண் ஆச்சரியப்பட்டாள். புதிர்களை அவள் சொல்லத் தொடங்கினாள்.

" இளவரசே, 60 விநாடிகள் சேர்ந்ததுதான் ஒரு நாழிகை நேரம். உங்களுக்குத் தெரிந்திருக்கும் தானே. இதோ இங்கிருக்கும் இந்தப் பழக் கூடையில் இருக்கும் பழங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு விநாடியும் இரு மடங்காக உயருகின்றது. கூடை முழுவதும் நிரம்ப ஒரு நாழிகை நேரம் பிடித்தது. அப்படியாயின் கூடையின் பாதிப் பாகம் எவ்வளவு நேரத்தில் நிரம்பியிருக்கும்? இதுதான் முதல் புதிர்" 'கொஞ்சம் இடைவெளிவிட்டு அடுத்த புதிரையும் சொன்னாள்.

" இந்தக் கடையின் ஓரமாக நடப் பட்டிருக்கும் இந்தக் கம்பத்தின் உயரம் ஐந்து முழம். ஆனால் இப்போது அதன் நிழல் 2 முழ உயரத்துக்கு விழுகின்றது. அதோ நகர மத்திரியில் உள்ள ஒரு கோபுரத்தின் நிழல் 40 முழம் உயரத்துக்கு விழுவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்தக் கோபுரத்தின் உயரம் என்ன?"

இரண்டாவது புதிரையும் சொல்லிவிட்டு நிமிர்ந்தாள் அந்தப் பெண். தங்களுக்காக கிளியாக மாறப்போகும் பரிவழுதியை மற்றவர்கள் அனுதாபத்தோடு பார்த்தார்கள்.

( புதிர்கள் தொடரும்)



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# அன்னையரின்...

கடந்த 30 ஆம் திகதியும், அதற்கு முன் பின்னாகவும் நடந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்களின் தொகுக்கப்பட்ட காட்சி இது.

இது எதைக் காட்டுகிறது? காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களுக்கு இடையே ஐக்கியம் இல்லை என்பதனையா? அல்லது அந்த சங்கங்கள் ஐக்கியப்பட முடியாதபடி அவை கட்சிகளால் பிரிக்கப்படுகின்றன என்பதையா?அல்லது அந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கட்சிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் எடுக்கும் நிலைப்பாடுகள் ஐக்கியப்படுவதற்குத் தடையாகக் காணப்படுவதையா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் மட்டுமல்ல காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம் உள்ளிட்ட எல்லா மக்கள் போராட்டங்களும் கட்சி அரசியலுக்கு வெளியே பொதுமக்கள் அமைப்புகளால்



முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான பொதுமக்கள் அமைப்புகளோ அல்லது செயற்பாட்டு அமைப்புகளோ தமிழ் மக்கள் மத்தியில் இல்லாத ஒரு வெற்றிடத்தில் அல்லது அப்படிப்பட்ட அமைப்புகளால் தலைமை தாங்குவதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கங்கள் தயாராக இல்லாத ஒரு பின்னணியில் கடந்த 11 ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் தேங்கி நிற்கின்றன. உரிய நீதியும் கிடைக்கவில்லை உரிய இழப்பீடும் கிடைக்கவில்லை. இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்கள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட முடியாமைக்கு இரண்டு தரப்புகளின் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது.

முதலாவது கட்சிகள். கட்சிகள் அந்தத் தாய்மாரை ஒன்றிணைக்கும் சக்தியற்று காணப்படுகின்றன. அல்லது கட்சிகளே அவர்களைப் பிரிக்கின்றன. அந்தத் தாய்மார் குறிப்பிட்ட கட்சிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் காணப்பட்டாலும் அவர்களைக் கட்சி கடந்து ஒன்றிணைக்க எந்தக் கட்சித் தலைமையாலும் இன்று வரை முடியவில்லை.

அந்தத் தாய்மார் அரசியல் விளக்கத்தோடு போராட முன்வரவில்லை. இழப்பின் வலியே அவர்களைப் போராடத் தூண்டுகிறது.புத்திரசோகம்தான் அவர்களுடைய போராட்டத்தின் உணர்ச்சிகரமான அடித்தளம். எனவே அவர்களுக்கு அரசியல் விளக்கத்தைக் கொடுக்க வேண்டியதும் அந்த விளக்கத்தின் அடிப்படையில் அவர்களை ஒன்றிணைக்க வேண்டியதும் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும்தான். அந்தத் தாய்மார் ஏதாவது பிழை செய்திருந்தால் அதைப் பிள்ளைகளின் இடத்திலிருந்து பொறுத்துக் கொள்ள வேண்டியது கட்சிகளின் கடமையாகும். அவர்கள் பிழை விடுகிறார்கள் என்று கூறி ஏற்கெனவே நொந்து போயிருக்கும் அந்தத் தாய்மாரைப் பிரித்துக் கையாளக் கூடாது. நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதியே அவர்களுடையது. நீதிக்கான போராட்டம் என்பது தமிழ் தேசியத் திரட்சியினால் மட்டுமே வெற்றி பெறும். தேசியம் எனப்படுவது ஆகப் பெரிய திரளாக்கம் என்று புறப்பட்ட கட்சிகள் பாதிக்கப்பட்ட தாய்மாரைக் கூறு போடலாமா? இது யாருக்குச் சேவகம் செய்வதில் போய் முடியும்?

.இரண்டாவது காரணம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புக்களைப் பின்னிருந்து ஊக்குவிக்கும் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் அல்லது தனிநபர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் இந்தச் சங்கங்களை ஐக்கியப்பட விடுவதில்லை என்பது.

இந்த இடத்தில் ஒரு உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியின்றி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இவ்வாறு ஆயிரம் நாட்களுக்கு மேலாக போராடியிருக்க முடியாது. எந்த உதவி அவர்களைத் தளராமல் போராட வைக்கிறதோ அதே உதவிதான் அவர்களைப் பிரித்தும் கையாள்கிறது. குறிப்பிட்ட அமைப்புகளுக்கு உதவிபுரியும் புலம்பெயர்ந்த தரப்புகள் அந்த அமைப்புகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகின்றன. எனவே இந்த அமைப்புகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்படுவதற்கு அவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்று அண்மை ஆண்டுகளில் இந்த அமைப்புகளை ஐக்கியப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களும் சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கட்சி அரசியலுக்குள்ளும் புலம்பெயர்ந்த தரப்புகளின் உபயகாரர் மனோநிலை காரணமாக ஏற்படும் முரண்பாடுகளுக் குள்ளும் சிக்கி காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடும் அமைப்புக்கள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட முடியாமல் இருக்கின்றன. இந்த ஐக்கியமின்மையின் விளைவை வடக்கிலும், கிழக்கில் திருகோணமலையிலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை காணக்கூடியதாக இருந்தது.

ஒருபுறம் சிங்கள மக்களை ஆகக்கூடிய பெருந்திரள் ஆக்கி ராஜபக்சக்கள் அசுர பலத்தோடு நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்னொருபுறம் தோற்கடிக்கப்பட்ட மக்களும் அரசற்ற தரப்பும் நீதி கோரிப் போராடும் தரப்புமாகிய தமிழ் மக்கள் கட்சிகளாலும் உதவி புரியும் நபர்கள் மற்றும் அமைப்புக்களாலும் பிரிக்கப்படுகிறார்களா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் மட்டுமல்ல, இது போன்ற நீதி கோரும் எல்லாப் போராட்டங்களும் கட்சி சம்பந்தப்படாத அல்லது கட்சி கடந்த தேசியப் பேரியக்கம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட வேண்டும். சாதாரண ஜனங்கள் ஏதோ ஒரு கட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் அப்படித்தான். ஆனால் அவர்களுடைய தனிப்பட்ட கட்சிச் சாய்வுகள் அந்த சங்கங்களின் பொதுத் தன்மையை கட்சி சாரா தன்மையைச் சிதைக்கக் கூடாது. ஒரு கட்சிக்கு ஆதரவாக பகிரங்கமாக நிலைப்பாடு எடுப்பதும் ஒரு கட்சியை எதிர்த்து பகிரங்கமாக கருத்து தெரிவிப்பதும் நீதி கோரிப் போராடும் அமைப்புகளை பலவீனப்படுத்தும். கட்சிகள் மக்களை வாக்காளர்களாகவே பார்க்கும். வாக்காளர்கள் கட்சி சார்ந்து பிரிந்து நிற்பார்கள். எனவே மக்களை வாக்காளர்களாக பிரித்துப் பார்க்கும் கட்சி அரசியலுக்கு வெளியே மக்களை ஆகப்பெரிய திரட்சி ஆக்கும் மக்கள் இயக்க அரசியலை நோக்கி காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அது கட்சிச் சாய்வுகளினாலோ அல்லது வெளியில் இருந்து உதவி செய்யும் நிதி உதவியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களினாலோ பிரிக்கப்பட முடியாத கட்டிறுக்கமான ஐக்கியப்பட்ட போராட்டமாக மாற வேண்டும். இல்லையென்றால் ஒவ்வொரு கட்சியும் அல்லது உதவி புரியும் அமைப்பும் பாதிக்கப்பட்ட

சிறுகதை



# குறுக்கு வழி

சிவபாலன் அஜெந்தன்

அவள் தூங்குவதற்காக செய்த முயற்சிகள் அத்தனையும் தோல்வியிலேயே முடிந்தன. புரண்டு புரண்டு படுத்துப்பார்த்தாள், படுக்கை அலங்கோலமானதே தவிர தூக்கம் கண்களை நெருங்க மறுத்துவிட்டது. மனசு முழுவதும் இனியா. இனியா மட்டுமே நிரம்பியிருந்தாள். அவளை நினைக்க நினைக்க பொங்கி வழிந்த ஆத்திரத்தையும் குரோதத்தையும் தலையணையிடம்தான் அவளால் காட்ட முடிந்தது. இனியாவை மட்டும் அவள் சந்திக்காமல் விட்டிருந்தால் தினந்தோறும் அனுபவிக்கும் இந்த நரகவேதனை இருந்திருக்காது. அவள் வாழ்க்கை எப்போதும் போல ஆனந்தத்தால் நிரம்பி வழிந்திருக்கும்.

இனியாவும் டக்சனாவும் ஒரே கல்லூரியில், தரம் மூன்றில் கல்வி கற்று வரும் மாணவிகள். ஒன்றாகப் படித்தபோதும் இருவரும் ஒற்றுமையாக இருந்ததேயில்லை. இவர்கள் சண்டை பிடிப்பதற்கு தினமும் ஏதாவது ஒரு காரணம் தானாகவே அமைந்துவிடும். கதிரையில் இருந்தது முதல் பென்சில் எடுத்தது வரை ஒருநாளைக்கு இரண்டு மூன்று காரணங்களாவது கண்டுபிடித்து விடுவார்கள். இவர்கள் சண்டை பிடிக்காமல் இருந்தார்கள் என்றால், அன்று விடு முறை நாளாகத்தான் இருக்கும். என்னதான் டக்சனா போட்டி போட்டாலும், அனேகமாக இந்தச் சண்டைகளில் இனியாவே வென்று விடுவாள். தரம் இரண்டில் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் வரை டக்சனாவே வகுப்பில் ராணியாகத் திகழ்ந்தாள். எதற்கெடுத்தாலும் டக்சனாவின் பெயரே உச்சரிக்கப்பட்டது. அதற்கேற்றால்போல் அவளும் படிப்பில் மட்டுமல்லாது சகல நிகழ்வுகளிலும் முன்னின்றாள். ஆசிரியர்கள் எல்லோருக்கும் செல் லப்பிள்ளையாக இருந்தாள். இனியாவின் தந்தைக்கு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் கிடைத்ததனால் அவள் குடும்பம் யாழ்பாணத்தில் குடியேறியது. அதனால் இனியா இரண்டாம் தவணை ஆரம்பத்தில் டக்சனாவின் வகுப்பில் புதிதாக இணைந்து கொண்டாள். இனியா கொழும்பில் கல்வி கற்றதனால் மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றவளாகவும், துடிதுடிப்பான சுபாவமும் நேர்த்தியான உடல்வாகும் கொண்டவளாகவும் விளங்கினாள். இனியாவின் வரவால் டக்சனாவின் முதன்மை கொஞ்சம் கொஞ்சமாக பின்னுக்குத்தள்ளப்பட்டது. இனியா டக்சனாவின் இடத்தைப் பிடிக்கத் தொடங்கினாள்.

இனியாவை முதன் முதலில் கண்டதுமே அவளின் தோற்றம் டக்சனாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவளுக்கு இனியா மீது ஏற்பட்ட பொறாமை நாளுக்கு நாள் பகையை வளர்த்தது. நிறைய வழிகளில் இனியாவை முந்தி விட , டக்சனா முயற்சி செய்தும் முடியாமல் போனது.இதனால் டக்சனா மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தாள். எப்பிடியாவது இனியாவை பழிவாங்கிவிடவேண்டும் என்ற எண்ணத்தை தன்னுள் வளர்த்துக்கொள்ளத் தொடங்கினாள். அப்பாவிடம் கூட தனக்கும் இனியாவுக்கும் உள்ள பிரச்சனைகளையும், இனியாவின் கெட்ட குணங்களைப் பற்றியும் சொல்லிப்பார்த்தாள் டக்சனா. அவருக்கும் அவள் பிரச்சனை விளங்கவில்லை. அவரும் இனியாவுக்குதான் சப்போர்ட் பண்ணினார். டக்சனா என்ன என்ன சென்னாலும் "சரியம்மா விடுங்கோ .இதெல்லாம் சின்னப் பிரச்சனை. நீங்கள் ரெண்டு பேரும் வளர்ந்ததும் இந்தப் பிரச்சனையெல்லாம் மறந்து போயிடும். இப்ப நீங்கள் சண்டை பிடிச்சதை பிறகு நினைச்சால் சிரிப்புத்தான் வரும். இனியாவும் உங்களைப் போல சின்னப் பிள்ளைதானே? அவாவ உங்க ப்ரெண்டா நினைச்சுப் பழகுங்கோ. அதுக்குப் பிறகு ஒரு பிரச்சனையும் வராது " இதைக் கேட்கும் போதெல்லாம் டக்சனாவின் கோபம் இரட்டிப்பாகும். 'ப்ரெண்டாம் ப்ரெண்ட். போயும் போயும் இவளோட நான் ப்ரெண்டா இருக்கிறதோ? அவளின்ட முழிக் கண்களையும் சப்பை மூக்கையும் பாத்தாலே பத்திக்கொண்டு வருகுது. அவளை எனக்கு ப்ரெண்ட் ஆக்கட்டாம். இனி இவருக்கு ஒரு கதையும் சொல்லுறதில்லை ' என மனதுக்குள் தீர்மானம் எடுத்துக்கொள்வாள்.

பாடசாலை விளையாட்டுப் போட்டி. டக்சனாவின் அப்பாவும் வந்திருந்தார். " அவள்தானப்பா இனியா" என்று தந்தைக்கு அவளைக் காட்டி கூறினாள் டக்சனா. இனியாவைக் கூப்பிட்டு நல்லா ரெண்டு பேச்சுக் குடுப்பார் எண்டு இவள் நினைக்க, அவரோ இனியாவுக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் குடுத்து " இன்னும் நல்லாப் படிக்கவேணும் "எண்டு தட்டிக் குடுக்கிறார். "என்ன அப்பா இவர் ? என்ர மனசைப் புரிஞ்சு கொள்ளுறாரே இல்லை,தன்னைப் பற்றி பெட்டிசம் எழுதிப் போட்டுட்டார் எண்டு பக்கத்து வீட்டு அங்கிளோட சண்டை பிடிச்சுக் கொண்டு, அவற்ற வீட்ட என்னை விளையாடப் போகக் கூடாதெண்டு சொல்லிட்டு , என்ர கோவக்காரியோட மட்டும் இவர் கதைக்கிறார். கொஞ்சம் கூட இவருக்கு மனச்சாட்சியே இல்லை. இவரை இனிப் பள்ளிக்கூடப் பக்கமே கூட்டிக்கொண்டு போறதில்லை" என டக்சனா நினைத்துக் கொண்டாள்.

இவற்றையெல்லாம் விட பாடசாலையில் நேற்று நடந்த பாராட்டு நிகழ்வு, இனியா மீதான பொறாமைத்தீயை அவளுக்கு இன்னும் அதிகமாக்கிவிட்டது. எல்லாரும் வந்து அவளுக்கு கைகுடுத்திட்டுப் போகினம். அதிபரும் 'அசம்பிளியிலை எ'ல்லாருக்கும் முன்னாலை கூப்பிட்டு வச்சு அவளைப் பாராட்டிப் பேசி எல்லாரையும் கைதட்டச் சொன்னார். இனியா மேடையிலை ஏறிநிண்டு கொண்டு டக்சனாவைப் ப்பாத்து ஏளனமாச் சிரிச்சா. அப்பிடியே உடம்பெல்லாம் கூசி , இவளுக்குச் சரியான அவமான மாப் போட்டுது. அவளுக்கு கன்னத்தில ரெண்டு குடுக்க வேணும் போல டக்சனாவின் கை பரபரத்தது.

" என்னத்தைப் பெருசா சாதிச்சிட்டா? கட்டுரைப் போட்டியிலை மாவட்ட மட்டத்திலை முதலாம் இடத்துக்கு வந்திட்டாவாம். அது பெரிய சாதனையெண்டு இவங்கள் எல்லாம் பெருசாய்த் துள்ளுறாங்கள். இதில என்ன இருக்கு? நான் கூட டான்ஸ் போட்டியில பரிசு வாங்கினனான்தானே? அவருக்கு டான்ஸே ஆடத்தெரியாது. டான்ஸ் எவ்வளவு கஷ்டம் .சும்மா கட்டுரை எண்டு பேப்பரிலை கிறுக்கிப் போட்டு பரிசு வாங்கிட்டு தன்னை விட்டா ஆளில்லை எண்ட நினைப்பிலை திரியிறா. நான் கூட ஒவ்வொரு 'ரேம் எக்சாமிலையு'ம் கட்டுரை எழுதிறனான்தானே. அது பெரிய வேலையோ? எல்லாரும் அவவோட அப்பா பணக்காரன் எண்டதால அவை தலையில தூக்கி வைச்சு கொண்டாடினம்" மனதில் உழன்ற எண்ணங்களின் தகிப்பிலும் அவை தந்த களைப்பிலும்உறங்கிப் போனாள் டக்சனா.

" டக்சா....! டக்சாம்மா.........!"

அம்மாவின் அழைப்பு எங்கோ தூரத்தில் தூக்க மயக்கத்தில் கிடந்த அவள் மனதை இழுத்து நிகழ் காலத்துக்கு கொண்டு வந்தது. மெதுவாகக் கண்திறந்தாள்.

"எழும்புங்கோம்மா, பள்ளிக்கூடத்துக்கு நேரம் போச்சுதெல்லோ .எழும்படா செல்லம்"

"என்னம்மா? டக்சனா சிணுங்கினாள்.

"லேற்றாப் போச்சு. அப்பா வெளிக்கிட்டிட்டார். கெதியாய்க் குளிச்சிட்டு வெளிக்கிட்டுக் கொண்டு வாங்கோ"என்று கூறியபடி அவள் அறையை விட்டு தாயார் நகர்ந்தார். கொஞ்சம் கூட விருப்ப மில்லாமல் எரிச்சலோடு குளிக்கச் சென்றாள் அவள். உடலை நீர் தழுவிய போதும் மன உளைச்சல் தீரவில்லை.

" இண்டைக்கு எப்பிடியாவது அவளைப் பழி வாங்கிவிட வேணும் "என்று அவள் மனம் கறுவிக் கொண்டது . எனினும் பழிவாங்கும் வழிதெரியாது தவித்தாள்.

ஒருவாறு குளித்து முடித்து வெளிக்கிட்டு சாப்பாட்டு அறைக்குள் வந்தாள். அங்கு அப்பா அம்மாவுக்கு ஏதோ ஒன்றைப் பற்றி தீவிரமான முகபாவனையோடு சொல்லியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். டக்சனாவைக் கண்டதும் தனக்குப் பக்கத்தில் கூப்பிட்டு இருத்தி,

" என்னம்மா முகமெல்லாம் வாடியிருக்கு? பிள்ளைக்கு காய்ச்சலா?" என்று டக்சனாவின் தலையைத் தடவியவாறு கேட்டார். டக்சனா இல்லையெனத் தலையாட்டிவிட்டு தாய் கோப்பை யில் போட்டுக் கொடுத்த தோசையை சாப்பிடத் தொடங்கினாள். அப்பாவும் அவளை விட்டு விட்டு தனது உரையாடலைத் தொடர்ந்தார். 'இந்த அப்பா எப்பவும் இப்பிடித்தான். என்னைக் கவனிக்கிறதும் இல்லை. அவருக்குத் தன்ரை வேலை மட்டும்தான் முக்கியம் . நான் எப்பிடிப் போனாலும் கவலையில்லை' என்று எண்ணியவளின் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. யாருக்கும் தெரியாமல் புறங்கையால் அதைத் துடைத்துவிட்டு தோசையைப் பிய்த்து வாய்க்குள் போட்டாள். அவள் நாக்கு சுவையை உணர மறுத்து மரத்துக் கிடந்தது. ஏதோ கடமைக்கு வாயசைத்தாள்.

**இனியாவும் டக்சனாவும் ஒரே கல்லூரியில், தரம் மூன்றில் கல்வி கற்று வரும் மாணவிகள். ஒன்றாகப் படித்தபோதும் இருவரும் ஒற்றுமையாக இருந்ததே யில்லை. இவர்கள் சண்டை பிடிப்ப தற்கு தினமும் ஏதாவது ஒரு காரணம் தானாகவே அமைந்துவிடும்.**

"எத்தனை நாளைக்குத்தானப்பா இப்பிடியே இழுபடப் போறியள்? ஆருக்காவது காசைக்கீசைக் குடுத்து உள்ளாலை அலுவலைப் பாத்து கெதியா எடுங்கோவன். நீங்களும் வேலையை விட்டுட்டு ஓடித்திரியேலாதுதானே. காலம் போயிட்டு இருக்கெல்லோ ?" என்று அம்மா அப்பாவுக்குச் சொன்ன ஆலோசனை டக்சனாவின் காதுக்குள் விழுந்ததும் எங்கோ வெறித்தபடி வெறுமையாக சோபையிழந்து கிடந்த உள்ளம் திடீரெனத் துள்ளிக் குதித்தது. ஒரு நொடியில் அவள் உடல் முழுதும் உற்சாகம் பரவியது. பரபரப்பாக சாப்பாட்டுக் கோப்பையை தள்ளி விட்டு இருந்த கதிரை அவள் எழும்பிய வேகத்தில் விழுவது கூடத்தெரியாமல், எழுந்தாள்.

" டக்சா, சாப்பிடேலையோ?"என்று அம்மா கத்துவதைக்கூட காதில் வாங்காமல் தனது அறையை நோக்கி ஓடினாள். அவசரமாக எதையோ தேடி எடுத்துக் கொம்பாஸ் பெட்டிக்குள் வைத்துக் கொண்டு ஓடிவந்தாள்.

" அப்பா கெதியா வெளிக்கிடுங்கோ. நேரம் போகுதெல்லோ ? வாங்கோப்பா வாங்கோ" என அவசரப்படுத்தினாள். அந்த அவசரம் வகுப்பறையில் வந்து உட்காரும் வரைக்கும் கொஞ்சம் கூடக் குறையவில்லை. அவளது மனது பரபரத்தது. அவள் கனவு நிறைவேறும் சந்தோசத்தில் அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

' இந்த அதிபருக்கு வேறை வேலையில்லை. 'அசம்பிளியை' கெதியா முடிச்சு வகுப்ப தொடங்கிறதை விட்டிட்டு ஆரோ சொன்னதையெல்லாம் நற்சிந்தனை எண்ட பேர்ல திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.அதைத்தான் அவங்கள் எப்பவோ சொல்லிட்டாங்களே பிறகென்ன. ஏன், இவருக்குச் சொந்தமாச் சிந்திக்கத் தெரியாதோ?'என்று அதிபரை மனதுக்குள் திட்டித் தீர்த்துக்கொண்டாள்.


ஒருவாறு வகுப்பறைக்கு ஆசிரியை வந்து மாணவர்களின் தினவரவைப் பதிந்தார். டக்சனாவால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. எப்ப ரீச்சரோட கதைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் அவள் மனசு குறுகுறுத்துக் கொண்டிருந்தது. ஆசிரியையும் வீட்டுப் பாடம் செய்தவர்களின் அப்பியாசக் கொப்பிகளை வாங்கி அடுக்கி ஒவ்வொன்றாக திருத்தத் தொடங்கினார். டக்சா தனது கொம்பாஸ் பெட்டியை திறந்து 'அதையெடுத்து' தனது கைக்குள் எவருக்கும் தெரியாமல் வைத்துக் கொண்டு மெதுவாக ஆசிரியரை நெருங்கினாள். ஆசிரியரும் தனக்கு அருகில் தயக்கத்தோடு வந்து நின்ற டக்சனாவை "என்ன?" என்ற கேள்வியை முகத்தில் தேக்கி நோக்கினார். அவள் ஆசிரியையின் காதுக்கு நெருக்கமாகி மெல்லிய குரலில் "ரீச்சர், நான் யாருக்கும் தெரியாமல் உங்களுக்கு காசு தாறன். இனியாவுக்கு நல்ல அடி குடுக்கிறீங்களா ரீச்சர்? என்றாள். டக்சனாவின் சின்னக் கைகளுக்குள் ஐந்து ரூபாக் குற்றி ஒன்று நிலத்தினுள் புதைந்த விதைபோல் அமைதியாக இருந்தது. ■

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

○ இராகன்

# ஆரியப்பூமாலை அரியசிங்கம்

ஒன்றுமுடிய இன்னொன்று தொடர்ந்து வந்து, ஐந்தாறு வருடங்கள் தொடர்ச்சியாக, இறப்பராக இழுபடும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் வரும் பாத்திரங்கள் கொடுக்கும் வாழ்க்கைத் தத்துவங்களை வடித்துக் குடித்தபடி காலங்கழிக்கும் மாந்தர்களிடையேதான் ஆரியப்பூமாலை அரியசிங்கமும் "மௌனத்துள்" உறைந்தபடி வாழ்ந்து வருகின்றார். வாழ்ந்து வருகின்றார் என்பதைவிட வாழாக்கிடக்கின்றார்! என்பதுதான் பொருத்தம். இப்போது உடலும் மனமும் நலிந்தபடி வாழும் அவரை ஒருகாலத்தில் "சைற்றடிக்க" மையல் கொண்டு திரண்ட ஆண்கள் மேக்கப் செய்யும் இடத்திலும் நாடக மேடைகளின் சைற் தட்டிகளிலும் வாய்பிளந்தபடி நிறைந்திருந்தனர். அவ்வளவு கவர்ச்சியான "ஆணழகி!" அவர். அரியசிங்கத்தை "ஆணழகி அரியம்" என்றும் ஊரார் அழைத்து வந்தனர். அரியம் என்ற பெயர் ஊரில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வழங்கிவந்த பொதுப்பால் பெயர்! அரியம் என்று யாராவது பெயர்சுட்டும்போது "ஆம்பிளை அரியமா?" பொம்பிளை அரியமா? என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வது ஒரு இயல்பான நடைமுறை. அரியசிங்கத்தைப் பொறுத்தவரை அந்தக் கேள்விக்கான பதில் "ஆணழகி" என்பதுள் அடக்கம். ஆண் எப்படி அழகியாக இருக்கமுடியும்? அந்த அளவுக்குப் பெண்மையில் தோய்த்தெடுத்த ஆணாக விளங்கினார் அரியசிங்கம்!



அரியம் நாடக மேடையில் அறிமுகமாகும்போது சிவப்பு, மஞ்சள், பச்சை என்று நிறம் நிறமாய் சுற்றும் 'போக்கஸ்' லைற்றில் அரியம் அழகியாய் ஜொலிப்பார். இளவட்டங்களின் சீக்காய் ஒலி (விசிலடி) வானைப் பிளக்கும்.

தாடி, மீசை மழித்து, "சைற்கட்" உயர்த்தி வழித்து அழுத்தமாக்கப்பட்ட முகம், பெண்வேடம் தரிப்பதற்கென்றே இயல்பாக "சிலுப்பா" வாக வளர்த்து வைத்திருந்த சடையில் முடிமயிர் வைத்து முடிந்து பின்னிப் பிருடம்வரை தளைய வைத்த கூந்தல், முகத்துக்கு "முத்துவெள்ளை" அடிக்காமலே ஒளிகாட்டும் நிலாமுகம், வெற்றிலைச் சாயத்தால் பூசப்பட்ட செவ்விதழ், கருகருவென மைபூசிய விற்புருவம், சுண்டியிழுக்கும் வரைந்துவைத்த கண், கூர்முனைக் கொவ்வை மூக்கு, சேலை உடுத்தி நாணி நடக்கும் ஒய்யாரம் எல்லாம் சேர்ந்து அரியத்தின் பெயரோடு ஒட்டியிருந்த "சிங்கத்தை" உதிர்த்துவிட்டது என்பது பற்றி எந்தக் கவலையும் அரியசிங்கத்தாருக்கு இல்லை.

நாடக மேடைக்குப் பின்னே கிடுகினால் மறைப்புக்கட்டிய கூட்டினுள் அரியத்தாருக்கு ஒப்பனை செய்யப்படும் தருணத்தில், இளவட்டங்களும் நடுத்தர வயதுக்காரரும் சூழ்ந்துகொள்வார்கள். சேலையோடு நகை நட்டுக்களும் அரியத்தாரின் உடலில் ஏறிவிட்டால் போதும், அரியத்தில் வெளிப்படும் ஆரியப்பூமாலையை அணைத்துக்கொண்டு புகைப்படம் எடுக்கத்துடிக்கும் இளசுகளால் "கமராக்காரனுக்கு" நல்ல கிராக்கி! அரியத்தாரின் புகைப்படம் அவர் வீட்டில் இருக்குமோ இல்லையோ, ஊரிலுள்ள இளைஞர்களின் வீடுகளிலெல்லாம் நிச்சயம் இருக்கும். இதுவரை எடுத்த புகைப்படங்களில் அரியத்தாரும், அவருக்கு ஒப்பனை செய்துவந்த "முத்துவெள்ளை வேலர்" என்று அழைக்கப்பட்ட வேலாயுதத்தாரும் சேர்ந்தெடுத்த புகைப்படத்தைப் பார்ப்பவர்கள் எல்லாம் ஜெமினி கணேசனும் சாவித்திரியும் போல என்று வியந்து பேசும்போது முத்துவெள்ளை வேலரின் மனைவிகூட பொறாமைப்படுவாராம்! அரியசிங்கத்தைச் செதுக்கிச் செதுக்கி ஆரியப்பூமாலையாக்கிய பங்கு முத்துவெள்ளை வேலருக்குரியதே.

வருடாவருடம் சித்திரைப் பௌர்ணமியன்று பிரண்டைக் குளத்து அம்மன் கோயில் வயலிலும் சிவராத்திரியன்று மாரியம்மன்கோயில் வாசலிலும் காத்தவராயன் கூத்து நடந்த நாட்களில் விடியவிடிய குரலெடுத்துப் பாடினாலும் அரியத்தார் களைத்துப்போகமாட்டார். "எனேர்ஜி லெவல்" அப்படி. மேடையில் நடித்துப் பாடும்போது குரல் தளதளத்துப்போனால் பாடியபடி "சைற்தட்டி" மறைவுக்கு வந்துவிட்டுப்போவார். சைற்தட்டி மறைப்பில் "ரொனிக்" தயாராக இருக்கும். இரண்டு மிடறு விட்டதும் கனைத்தபடி மேடைக்கு வருவார். பாட்டு சீர்காழிகோவிந்தராசனின் உச்ச ஸ்தாயியைக் கடந்து போகும். பூசிப்போட்டு" வரும் அரியத்தாரின் புதுப்பொலிவான பாடல் கேட்க இரசிகர்கள் தயாராவர். குரல் கணீரென்று தெறிக்கும்! அந்த வேளைகளில் சில சமயம் "அரியம்" மறைந்து "சிங்கம்" வெளிப்படுவதுண்டு! அது சேலைகட்டிய சிங்கமாய்க் கர்ச்சிக்கும்!

12 கிராமத்து மனிதர்கள்...

அரியசிங்கத்தாருக்கு சிந்துநடைக் கூத்து என்றால் உயிர். சத்தியவான் சாவித்திரி என்றால் சாவித்திரி அவர்தான். வள்ளிதிருமணம் என்றால் வள்ளி அவர்தான். அரிச்சந்திர மயானகாண்டம் என்றால் சந்திரமதி அவரேதான். ஒவ்வொரு பாத்திரத்திலும் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடும் "நடிகர்திலகி" அவர்! இருந்தாலும் காத்தான் கூத்தில் வரும் ஆரியப்பூமாலை"தான் அவரின் தனித்த அடையாளம். மெதுவான துள்ளலுடன் குரலில் நளினம் தொனிக்க ஆரியப்பூமாலையாக மேடையில் அவர் பாடும் பாடல்களைக் கேட்பவர்களின் மனமும் துள்ளும். அறிந்திடுவீர் தெரிந்துடுவீர் சபையோரே கேளும், நானும் ஆரியப்பூ மாலை வாறேன் சபையோரே பாரும்" என்று பாடியவாறு அரியம் நாடக மேடையில் அறிமுகமாகும்போது சிவப்பு, மஞ்சள், பச்சை என்று நிறம்நிறமாய் சுற்றும் போக்கஸ் லைற்றில்" அரியம் அழகியாய் ஜொலிப் பார். இளவட்டங்களின் சீக்காய் ஒலி (விசிலடி) வானைப் பிளக்கும்.


இடைப்பட்ட காலத்தில் ஊரில் சில நாடகக் குழுவினர் சமூக நாடகங்களை நடித்து வந்தனர். நாடகங்கள் சினிமாப் படங்களையே தியேட்டரில் பார்த்ததைப்போல இருக்கும். சினிமா போலவே நாடகத்திலும் "லவ் சீன்" ஒன்றேனும் நிச்சயம் இருக்கும். அரியத்தாரை மேடையேற்றி காதல் பாடல் காட்சியொன்றுக்கு நடிக்கவைக்கவென்றே திட்டமிட்டுக் காட்சிகள் அமைக்கப்படும். எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன் நடித்த சினிமாப்படங்களில் வந்த பாடல்களைப் போலவே காதல் காட்சிகள் சேர்க்கப்படும். சரோஜாதேவி போலவும், கே.ஆர் விஜயா போலவும் அவர் ஆடும் ஆட்டங்கள் அந்தக்காலத்து இளைஞர்களின் கனவுக்கன்னியாக அரியத்தை மாற்றியிருந்தது. ஈழத்து சுந்தர்ராஜன், ஈழத்து சௌந்தரராஜன் என்றெல்லாம் உள்ளூர் நடிகர்களும் பாடகர்களும் அழைக்கப்பட்டு வந்த காலத்தில் "ஈழத்துச் சரோஜாதேவி" என்றும், ஈழத்துக் கே.ஆர்.விஜயா" என்றும் வர்ணனையாளர்கள் ஒலிபெருக்கிகள் வாயிலாக அரியத்தை காற்றில் பறக்கவிட்டனர். எத்தனைதான் பெயர்சூட்டினாலும் அரியசிங்கத்தின் பெயரோடு ஆரியப்பூமாலைதான் அடையாளமாய் ஒட்டிக்கொண்டது. இது ஈழத்து சில்க்குகள்" மேடைகளில் கவர்ச்சி நடனம் ஆடிய காலத்துக்கு முந்திய கதை.

பிரண்டைக் குளத்து அம்மன் கோயிலைச் சூழ்ந்திருக்கும் வயல் எல்லாம் கோயில் வயல்தான். கோயில் மணியத்தாரின் பொறுப்பில்தான் அத்தனையும். மணியத்தாரின் தந்தைவழிச் சொத்து அது. தைப்பூசத்துக்குப் புதிர் எடுத்து சித்திரை வருடத்துக்குப் புதுநெல்லில் பொங்கல் வைக்க ஏற்றவாறு வயலில் அறுவடை முடிந்துவிடும். சித்திரைப் பௌர்ணமிக்கு முன் மணியத்தார் வயலைத் துப்புரவு செய்வித்துவிடுவார். அரியசிங்கத்தாரின் நாடகக்குழு ஒத்திகை பார்த்துக் கூத்துப் போடத் தயாராகிவிடும். வருடாவருடம் விளைச்சல் கண்ட நேர்த்திக்கடனுக்கு கூத்துப்போடும் பொறுப்பை மணியத்தார் அரியசிங்கத்திடம் விட்டுவிடுவார். அரியத்தாரின் நாடகக்குழுவை மறக்க முடியாதபடி "எல்லாவிதத்திலும்" கவனித்துவிடுவார் மணியத்தார். கூத்துப்போடப்பட்ட நாட்கடந்து முதலில் வரும் சனிக்கிழமை ஒன்றில் அரியம் குழுவைத் திருப்திப்படுத்த கிடாய் ஒன்றை அடிப்பிப்பார் மணியத்தார்.

கூத்துக்கான பக்கவாத்தியங்கள் இசைப்பதிலும் பக்கப்பாட்டுப் பாடுவதிலும் அரியத்துக்கு நிகர் அரியம்தான். உடுக்கை இசைத்தவாறும், ஆர்மோனியம் வாசித்தவாறும் அவர் பாடும் கூத்துப் பாடல்கள் காலவோட்டத்தில் அவரை ஓர் அண்ணாவியார்" ஆக்கிவிட்டது. அண்ணாவி அரியம்" என்றும் ஊரார் அவரை அழைப்பதுமுண்டு. வருடாவருடம் மாரியம்மன் கோயில் வாயிலில் கூத்துப்போடத் தேவையான "சீன்கள்"(பின்னணிக் காட்சித் திரைகள்), ஆடை அணிகலங்கள், வாத்தியங்கள் வாங்கி நாடகக் குழுவுக்குச் சொந்தமாக வைத்திருக்க விருப்பங்கொண்டு, மனைவி கையில் போட்டிருந்த இரண்டு சோடி தங்க வளையல்களை அடகுவைத்ததையும் அது பின்னர் அடகு பிடித்தவருக்கே அறுதியாகிப் போனதையும் இன்றுவரை அரியத்தாரின் கலைப் பெருமையாகப் பேசுபவர்கள், தேங்கிக் கிடக்கும் அரியசிங்கத்தாரின் மனக்கிடங்கைத் திறந்து பார்த்ததில்லை. அரியத்தார் "கல்வெட்டுக் கந்தப்புவுடன்" சேர்ந்து ஊரில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் தேகவியோகப் பாடல்களை, அரிச்சந்திர மயான காண்டப் பாடல்களைப் போல உச்ச ஸ்தாயியில் பாடுவதன்வாயிலாகத்திருப்திப்பட்டுக்கொண்டார்.

# மௌன மொழி

## 11 இற்கான கவிதைகள்



நீல விதானத்தில் பௌர்ணமி நிலவில்
நிம்மதி நாடி ஊஞ்சலில் ஆடினாலும்
நினைவிலுள்ள துயரங்கள் நீங்குமா
நீர் நிலையொன்றின் பூரணை நிலவின்
பிரதிவிம்பம் சலனமற்றிருப்பது போல
சஞ்சலமற்ற மனதில் துயரங்கள்
விலகி நிம்மதி பிறக்க இனிதான
ஏகாந்தம் உதவுமா

*ஜி.ராஜேந்திரன்,*
*இல 57, 2ஆம் குறுக்குத் தெரு,வவுனியா.*

ஊஞ்சலில் தனித்திருக்கும் பள்ளி
சிறுமியே! உன் மனதின் ஏக்கங்களையும்
துக்கங்களையும் தூர வீசியெறி
தெரிந்து கொள் நீ
இரவு வந்தால் உலகில்
பகலும் உண்டு என்பதை...

*சுப்பிரமணியம் ஜெயரூபன்,*
*பருத்தித்துறை.*

பகலவனும் பாதி தெரிய
பறவையினம் வானத்தில் பறக்க
பாவையவள் ஊஞ்சலில் அமர்ந்து
ஏதோ தன் கவலையை எடுத்துக் கூற
எவ்வளவு நேரமாக காத்திருக்கின்றாள்
அவளின் உள நிலையை யார்தான்
அறிவாரோ யாம் அறியோம்

*நா.சிவதாசன்,114 கிராம விஸ்தரிப்பு திட்டம்,*
*திருநெல்வேலிம கோப்பாய்.*

அவசரமான இயந்திர உலகில்
அந்திப் பொழுதை இரசிக்க நேரமில்லை
கொரோனா தந்த விடுமுறையில்
கொல்லைப்புற ஊஞ்சல் ஆடிக்
கழித்திருந்த காலம் மீண்டுமினி வருமா?

*கு.சசிகலா,மட்டுவில்*

**பரிசு பெறும் கவிதை**

ஆகாயத்தில் ஊஞ்சல் கட்டி
அழகாய் உன துள்ளம் ஆட
வானம் பாடி யாகி
வான் பரப்பில் பறந்தோட
இருள் சூழ்ந்த வாழ்வு
இங்கே கணப் பொழுதில் மறைந்திடாதோ..?
துளிர்க்காதோ பட்ட மரமும்
துவண்ட உன்மனதை – ஒளிரச்செய்...!

*வி.வசந்தா,மட்டுவில்.*

அப்பன் சுகிப்பான் சிறுவீட்டில்!
அம்மை இருப்பாள் அடுத்தவன் பூட்டில்!
தப்பிப் பிறந்தேன் தரணியிலே!
அப்பி அணைக்க யாருளரோ! –என்
கண்ணீர் கண்டா எழுகின்றாய்?
பன்னீர் தெளிக்கும் முழுநிலவே
நாளை நீயும் தேய்ந்திடவே
நாதி எனக்கு எவர் தானோ!

*சி.கனகசிங்கம்,*
*தொல்புரம்,சுழிபுரம்.*

துணிவுத் தாய் மடியில்
துளிர் விட்ட சிறு நெஞ்சம்
தூர்ந்து போன விடிவதனை
துயில் குலைத்து தேடுகிறாள்
தூய இத் தரணியிலே
துடைப்பேன் களையதனை என!

*கி.சுதர்மிகா*
*கல்வயல் சாவகச்சேரி*

வலியதுவாம் வாழ்வதனை -வென்று
ரணமாக்கி ரசித்திட
வலியதனை வென்று - வாழ்வதனை
ரசித்திடும் ரம்மியத்தை தேடி!

*கி. சாமிஜா, கல்வயல் சாவகச்சேரி*

தனிமை என்னும் கடல்
கண் மூடினால் - இருட்டு
கண் விழித்தால்- தனிமை
கண்கள் நிரம்பிய கண்ணீர்
இருட்டை மட்டும் விரும்பியது
நிம்மதியோடு கலந்த இருட்டை-தேடினேன்
கிடைத்ததே! கிடைத்ததே! கிடைத்ததே!
கல்லறையில் நிம்மதி!

*சஞ்சய், புதிய செம்மணி வீதி*
*ஆனந்தபுரம்*

அழகு அடி வானத்து
நிலவழகு
அழகு நிலவொளியில்
வான் பறக்கும் பட்சியினம்
அழகு திரள் முகில் கூட்டம்
திசை மாறி அசைந்தோடல்
அழகு எல்லை இல்லா
எண்ணங்களால் தொல்லை
இல்லாத் தனிமை

*பொ.யோகேஸ்வரன்*
*(காரையோகா)*
*ஆலடி காரைநகர்*

துணிவுத் தாய் மடியில் துளிர் விட்ட சிறு நெஞ்சம்
தூர்ந்து போன விடிவதனை துயில் குலைத்து தேடுகிறாள்
தூய இத் தரணியிலே துடைப்பேன் களையதனை என!

*கி.சுதர்மிகா, கல்வயல் சாவகச்சேரி*

ஓர் நிலவில் ஒளி தெறிக்க ஊசல்தனில் த(வி)னித்திருக்கும்
மறு நிலவை இருள் மறைக்க யாதென்பேன் இந்நாளை
பௌர்ணமியா? அமாவாசையா?
கவலைகள் எதுவாயினும்சிறு புன்னகைசெய் தாரகையே
இன்று பௌர்ணமி என நான் கூறிட.....

த.விதுர்ஷன், யாழ்/இந்துக்கல்லூரி

---

சுற்றம் வெறுத்து சூழ்ந்திருந்த தோழமை வெறுத்து
அடிசில் வெறுத்து அன்பும் வெறுத்து
உருவம் தந்த இறைவனையும் வெறுத்து
உலகையும் இறுதியில் நிந்தித்து நிற்கிறேன்....
மெ தூதனிடம் தூது அனுப்புகிறேன்
என்னை அழைத்துச் செல்லுமாறு....
மௌனம் நாடுகிறேன்... வாழ்வைத் தேடுகின்றேன்....

**மின்மினி பூக்கள்**

# மௌன மொழி 12



**கவிதைக்கு பரிசு 1000/=**

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 11.09.2020**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

0773165555

- இதுவரை பரிசுக்குரிய கவிதைகளை எழுதியோருக்கு பரிசில்கள் விரைவில்... உங்கள் பரிசை உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொள்ளவும்.




# ஹெரோயின் ஹீரோக்கள்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

ஒரு காலம் பெடியள் இயக்கத்துக்குப் போகிற செய்திகளே ஊருக்குள் அமர்க்களமாக இருக்கும்.

“அந்த ரியூட்டரியிலிருந்து எட்டுப் பேர் போயிட்டாங்களாம்”.

“இந்தப் பள்ளிக்கூடப் பெடியள் ஆறுபேர் கிளம்பிட்டாங்களாம்”.

“அந்த வாசிகசாலையிருந்து அஞ்சுபேர் வெளிக்கிட்டிட்டாங்களாம்.... ” “நாவலடியிலயிருந்து ஏழு பேராம். மாதாகோயிலடியிலயிருந்து நாலுபேர் போட்டாங்களாம்...”

இப்படித் தினமும் போராடப்போகின்றவர்களைப் பற்றி, தங்களைத் தேசத்துக்காகவும், சமூகத்துக்காகவும், இனவிடுதலைக்காகவும் அர்ப்பணித்துப் புறப்படுகின்றவர்களைப் பற்றிய செய்திகளாலேயே அன்றைய நாட்கள் விடிந்தன. அந்தப் பொழுதுகள் நிறைந்திருந்தன.

அவைமட்டுமல்ல, ஊரில் நடக்கும் நல்லது கெட்டதுகள் அத்தனையிலும் முன்னின்று செயற்படுவது பெடியளே. வாசிகசாலைச் சிரமதானமாக இருந்தாலென்ன,கோயிலில் சாமி காவுகிறதாக இருந்தாலென்ன, குளமோ வாய்க்காலோ தூர் வாருகிறதாக இருந்தாலென்ன, எல்லாவற்றுக்கும் ஓடி முன்னுக்கு வந்து நிற்பதும் பெடியளே. இதெல்லாம் ஏதோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நடந்த சங்கதிகளல்ல. எங்களுடைய இந்த மண்ணில், ஒரு பத்துப் பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சங்கதிகள். அதுவும் உங்களுடைய வீடுகளிலும், உங்களுடைய குடும்பத்திலும், உங்களுடைய அயலிலும் நடந்தவை. இன்னும் இந்தச் சம்பவங்கள் உங்களில் பலருடைய மனதில் அழியாத நிழலாக ஆடிக்கொண் டிருக்கும். அல்லது உங்களுடைய பிள்ளைகளுக்கோ இளைய சகோதரர்களுக்கோ இந்தக் கதைகளை நீங்கள் பல தடவை சொல்லியிருக்கவும் கூடும். அந்தளவுக்கு மறக்க முடியாத கதைகள் அவை.

“எப்படித்தான் அந்தக் கதைகளையெல்லாம் மறக்க முடியும்?” என்று இந்தக் கணத்திலும் உங்கள் நெஞ்சு நெடுமூச்செறியலாம்..

அந்த அளவுக்கு அன்றைய இளைய தலைமுறை சமூகப் பற்றோடும் இனப்பற்றோடும் இருந்தது. பொதுப்பணிகளில் ஆர்வம் கொண்டுழைத்தது. அப்படி அவர்களை வழிப்படுத்துவதற்கு அன்று தலைவர்கள் இருந்தனர். இயக்கங்கள் இருந்தன. வழிகாட்டிகள் இருந்தனர். ஊரிலும் வெளியிலும் நல்ல மனிதர்கள் இருந்தார்கள். "ரோல் மொடல்' (Roll Model ) என்று சொல்லக்கூடியதாகவும், இலட்சிய அடையாளங்களாக ஏற்றுக் கொள்ளவும் தக்க பெரியவர்கள் இருந்தனர். பொதுவாழ்வுக்காகத் தங்களைத் தியாகம் செய்து கொண்ட முன்னோடிகள் பலர் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இதெல்லாம் இளைய தலைமுறை தன்னுடைய காலடிகளை முன்னே வைத்து நடப்பதற்கான பாதையைத் தந்தது. துணிவைத் தந்தது. நம்பிக்கையை ஏற்படுத்தியது. எனவேதான் அது ஒரு பொற்காலமாக விரிந்தது. இன்றோ... இவையெல்லாம் தலைகீழாகி விட்டன.

“...... கேணியடியில் இரவு வாள் வெட்டு. ஆவாக் குழுவின் அட்டகாசம்”

“வீடு புகுந்து நள்ளிரவில் இனந்தெரியாத இளைஞர்கள் தாக்குதல்”.

“தனியே இருந்த மூதாட்டியின் நகைகளையும் காசையும் இளைஞர் குழுவொன்று பறித்துச் சென்றது”

“கோயிலடியில் கோஷ்டி மோதல். இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்களுக்கும் கடுமையான காயங்கள். பொலிசார் தேடுதல்”


இப்படியான சேதிகளால்தான் இன்றைய பொழுதை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அல்லது “டிப்பர் மோதி இரண்டுபேர் பலி”

“வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் மோதியது வான். சாரதி உட்பட நான்குபேர் படுகாயம்”

“விரைவைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மின்கம்பத்தில் மோதி இளைஞர் பலி”

“மதுபோதையில் இளைஞர்கள் கைகலப்பு” என்று வரும் சேதிகள் நம்மைச் சுற்றி வளைத்துக் கவலைப்படுத்துகின்றன.

இது ஏன்? இந்த நிலை எப்படி ஏற்பட்டது? இந்த மாற்றத்துக்கான காரணம் என்ன? பின்னணி என்ன? இதற்கும் இனப்பிரச்சினைக்கும் அதன் தொடர்ச்சியாகப் படையினருக்கும் அரசுக்கும் தொடர்புகளிருக்குமா? ஒரு கொஞ்சக் காலம் அப்படியான சேதிகள் ஊர்களில் உலாவியதும் உண்டு. படைத்தரப்பினால் பெடியள் சீரழிக்கப்படு கிறார்கள். அவர்களுக்கு மது வழங்கப்படுகிறது. பணம் கொடுக்கப்படுகிறது. மூளைச் சலவை செய்யப்படுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பாகப் புலனாய்வாளர்களால் என்று சேதிகள் உலாவின.



அப்படியென்றால், இதற்கு யார் பொறுப்பு? எங்களுடைய பிள்ளைகளை எப்படிப் பிறர் சுலபமாகத் தங்களுக்கு இசைவாகக் கையாள முடிகிறது? அதுவும் பிறத்தியார்? எங்களுடைய மாணவர்கள் எப்படி பிறருடைய சொல்லுக்கு எடுபடுகிறார்கள்? எங்களுடைய தலைமைத்துவத்தைக் கடந்து எப்படி பிறர் மனம் நோக்குகிறார்கள்? இவர்களை ஆற்றுப்படுத்தவும் வழிப்படுத்தவும் எம்மிடம் ஆட்களில்லையா? ஆற்றல் இல்லையா? இன்றைய எம்முடைய இளைய தலைமுறையைக் கவரக்கூடிய முன்னோடிகளும் தலைவர்களும் இல்லாமல் போனமையா? அல்லது அரசியல் அடிமைகளைப் போலச் சுய சிந்தனையில்லாமல் காசுக்கும் மதுவுக்கும் அரச உத்தியோகத்துக்குமாக இளைய தலைமுறை அலைகின்ற அளவுக்குத்தான் உள்ளதா?

ஆம், அப்படியானதொரு நிலைதான் இன்றுள்ளது என்பதால்தான் “கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள் நான்கு பேர் போதைப்பொருட்களோடு கைது செய்யப்பட்டுள்ளனர்” என்ற செய்தியை தலைப்பில் எங்களுடைய பத்திரிகைகள் வெளியிடும் நிலை வந்திருக்கிறது. இதைக் கண்டு கடந்த வாரம் கலங்கியவர்கள் பலர். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்துக் கடைசியில் எம்மையே கடிக்கும் நிலை வந்து விட்டதா? என்று. இப்படி மாணவர்களையே பீடித்திருக்கும் இந்தப் பிணிக்கு மருந்தென்ன? இதை எப்படிக் கட்டுப்படுத்துவது? என்று ஆளாளுக்குத் தலையைப் போட்டுப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சேதியைக் கண்டு ஆடிப்போய் விட்டனர் கல்வித் துறையினர். பெற்றோர் பொலிஸ் தரப்பினர். சமூகம் மீதான அக்கறையுடையோர் எல்லோரும்தான். இதை எப்படிக் கட்டுப்படுத்தலாம்? மாணவ சமூகத்தை எப்படிப் பாதுகாக்கலாம்? என்பதே இன்று எழுந்திருக்கும் மிகப் பெரிய கேள்வி.

ஆனால், இந்தப் போதைப் பொருட்பாவனை என்பது ஏற்கனவே சமூகத்தில் பல மட்டத்தினரையும் ஊடுருவித் தாக்குதல் நடத்தி இன்று விரிந்து பரந்துள்ள ஒரு சமூக நோயாகி விட்டது. பல வகையான போதைப் பொருட்கள் சமூகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பழக்கத்துக்குப் பலரும் அடிமைகளாகியுள்ளனர். இளைய தலைமுறை அதிகமாக இருந்தாலும், ஏனைய பிரிவினரும் இதில் அடக்கம். படித்தவர்கள், அதிகாரிகள், முதியோர், குடும்பத்தலைவர்கள்..... என. குறிப்பாகச் சாரதிகள். இரவு நெடுந்தூர வாகனப் பயணத்தில் சாரத்தியம் செய்வோரில் சிலர் ஐஸ் என்றொரு வகையான போதைப்பொருளைப் பயன்படுத்துகின்றனர். டிப்பர் சாரதிகளில் சிலருக்கும் இந்தப் பழக்கம் உண்டென்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஐஸ் ஒரு பொல்லாத சாமான். அடித்தால் மூன்று நாட்களுக்குத் தூக்கமே வராதாம். அண்மையில் கிளிநொச்சி 'சிந்தனைக் களத்தின் 'ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி கலந்து கொண்டு போதைப்பொருட்பாவனை, அதன் விளைவுகள், அதைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகளைப் பற்றி விளக்கமளித்தார். அவருடைய தகவல்களின் படி ஒவ்வொருவரும் தமக்கேற்ற மாதிரி ஒவ்வொரு வகையான போதைப்பொருட்களுக்குப் பழக்கமாகியுள்ளனர். இதற்கு அடிமையாகியவர்கள் முதலில் தன்னிலை இழக்கிறார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

**எங்களுடைய பிள்ளைகளை எப்படிப் பிறர் சுலபமாகத் தங்களுக்கு இசைவாகக் கையாள முடிகிறது? அதுவும் பிறத்தியார்? எங்களுடைய மாணவர்கள் எப்படி பிறருடைய சொல்லுக்கு எடுபடுகிறார்கள்? இன்றைய நம்முடைய இளைய தலைமுறை அரசியல் அடிமைகளைப் போலச் சுய சிந்தனையில்லாமல் காசுக்கும் மதுவுக்கும் அரச உத்தியோகத்துக்குமாக அலைகின்ற அளவுக்குத்தான் உள்ளதா?**



# ஹெரோயின்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் களவு, கொலைவரை இவர்களைக் கொண்டு செல்கிறது.

இவர்களால் குடும்பத்தில் அமைதி இழக்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் இவர்களுடைய உடல் பாதிக்கப்படுகிறது. நரம்புகள் செயலிழந்து விடுகின்றன. இப்போது பலர் சிறைச்சாலைகளில் கூட உள்ளனர். இப்படியானவர்களுக்கு முறையான புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும். இதற்கு நிச்சயமாக வடக்கில் ஒரு புனர்வாழ்வு நிலையைத்தை நாம் உருவாக்க வேண்டும். அப்படி ஒரு புனர்வாழ்வு நிலையத்தை உருவாக்கினால்தான் பாதிக்கப்பட்ட இவர்களை அங்கே தனிமைப்படுத்தி குணப்படுத்த முடியும். இல்லையென்றால் சமூகத்தில் கலந்திருந்து தொடர்ந்தும் இவர்கள் தீய வழிகளிலேயே செயற்படுவர் .இவர்களைக் கட்டுப்படுத்தவே முடியா திருக்கும். அத்துடன், இவர்கள் குணமடைவதற்கு இந்த வலைப்பின்னலில் உள்ளவர்கள் விடவும் மாட்டார்கள். இந்த வலைப்பின்னலை நீங்கள் நினைப்பதைப்போல சுலபமாகப் பிடித்து விட முடியாது. அந்த அளவுக்குப் பாதுகாப்பும் அபாயமும் நிறைந்தது இது. ஆளை ஆள் தெரியாத ஒரு பொறிமுறையில் இதை இவர்கள் செய்கிறார்கள் என்று பொலிஸ் தரப்பு சொல்கிறது. ஆகவே இதைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒவ்வொரு வழியிலும் முயற்சிக்க வேண்டும். இதில் இன்னொரு முக்கியமான விசயம், போதைப்பழக்கத்துக்குள்ளாகிய இவர்களுடைய குடும்பத்தினருடைய உளவியல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும். குடும்பத்தில் உள்ள ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்றால், அதனால் முழுக் குடும்பத்தின் மகிழ்ச்சியும் அமைதியும் கெட்டிருக்கும். ஆகவே அவர்களை அதிலிருந்து மீட்டு இயல்பு நிலைக்குக் கொண்டு வரவேண்டும். இப்படி இது மிகமிகக் கவனமாகக் கையாள வேண்டிய ஒரு அவசியமான பணி....." என அவர் சொன்னார்.

இதைக் கேட்கும்போது நமக்கே தலையைச் சுற்றுகிறது. அவர் மேலும் சொன்ன பல தகவல்கள் மிகக் கவலையளிப்பவையாகும். சிறைச்சாலைகளில் (குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே) பலர் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகிச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருடைய கதைகளும் மிகச் சோகம் ததும்பியவை. ஆனால், பரிதாபகரமானவை. இவர்கள் மீது கோபப்பட்டு ஆகப்போவதொன்றுமில்லை. நமக்கு முன்னுள்ள சவால், இவர்களை இந்தப் பழக்கத்திலிருந்து எப்படி மீட்டெடுப்பது. ஏனையவர்கள் இந்தப் பழக்கத்துக்குட்படாமல் தடுப்பது எப்படி என்பதை.

ஆனால், இவை யாவும் இலேசான விடயங்களல்ல. ஏனென்றால் தினமும் கேரளக் கஞ்சா எங்களுடைய கடற்கரைகளில் வந்து இறங்கிய வண்ணமே உள்ளது. படையினரும் அதைப் பிடிக்கிறார்கள். இருந்தாலும் கடத்தல் செயற்பாடுகள் குறைகிற மாதிரித் தெரியவில்லையே. பொலிஸாராலும் படையினராலும் கைப்பற்றப்படுகின்ற பொருட்களை விட அதிகமான பொருட்கள் எப்படியே உள்ளூருக்குள் போய் விடுகின்றன என்பதே எம்முடைய அனுமானம். இல்லையென்றால் இந்த அளவுக்கு போதைப்பொருட் பாவனையும் அதற்கு அடிமையானோரும் பெருகக் காரணம் என்ன? எப்படி இது நிகழ முடியும்?

இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது வந்திருக்கும் செய்தி தலையையே கலங்கடிக்கிறது. இலங்கை முழுவதிலும் ஏறக்குறைய 25 லட்சம் பேர் போதைப்பொருள் பாவனை, விநியோகம் போன்றவற்றோடு தொடர்புபட்டிருக்கிறார்கள். இதில் கொழும்பில் மட்டும் ஐந்து லட்சம் பேர் வரையில் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால், பாதாள உலகம் ஆழமாக விரிந்து பரவித்தான் உள்ளது. இந்தத் தொகை என்பது நாட்டின் சனத்தொகை விகிதாசாரத்தில் ஏறக்குறைய ஆறோ அல்லது ஏழோ வீதமாகும்.

எனவேதான் இது ஒரு சீரழிந்த காலமாக விரிந்துள்ளது என்கிறேன். இதற்குக் காரணம், நாடும் சமூகமும் இன்று சீரழிவாளர்களின் கைகளில் வீழ்ந்திருப்பதேயாகும். நடந்து முடிந்த தேர்தல் ஒன்றே போதும் இதற்கு சாட்சியமாக. அதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தேர்தலின்போது நடந்த கூத்துகள் அருவருக்கத்தக்கவை. போற்றுதற்குரிய விடுதலைப்போராட்டம் ஒன்று நடந்த மண்ணில்தானா இவையெல்லாம் நடக்கின்றன? இப்படியெல்லாம் சீரழிவுகள் நடக்கின்றன என்ற அளவுக்குப் பெரும் சீரழிவு. எவரையும் ஆட்கொள்ளத்தக்க, மதிக்கத் தக்க தலைமையும் பேராளுமைகளும் இல்லாத வெற்றிடத்தில் நிற்கிறோம், துக்கம் தோய்ந்த தலைகளைத் தொங்கப்போட்டுக்கொண்டு.

ஹெரொயின் ஹீரோக்கள் ஆட்சி நடத்துகிறார்கள். ■

# விண்ணின் அமுதம்




○ ம.பா.மகாலிங்கசிவம்

சில தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பிலேயே பணி புரிந்தனர். குடும்பத்துடன் கொழும்பில் குடியேறச் சம்பளம் போதாத நிலையில் குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் இருக்க விட்டுத் தாம் கொழும்பில் சென்று தங்கியிருந்தனர். ஞாயிறு இரவுப் புகையிரதத்தில் கொழும்பு செல்லும் இவர்கள் வெள்ளி இரவுப் புகையிரதத்தில் யாழ்ப்பாணம் திரும்புவது வழமையாகும். ஒருவாரத்தின் பின்னர் மனைவியின் நினைவோடு வீடு வரும் இவர்கள் புகையிரதம் கொடிகாமத்தில் வரும் போதே எழுந்து நடக்கத் தொடங்கி விடுவார்கள் என எஸ்.பொன்னுத்துரை தனது நாவலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய யாழ்-கொழும்பு அரச ஊழியர்களின் வாழ்க்கை முறைகள், பல நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றுடன் மட்டுமன்றிக் கவிதைகளிலும் பேசப்பட்டுள்ளன. இத்தகைய விடயம் பற்றிய கவிதையாக பண்டிதர் க.சச்சிதானந்தனின் 'விண்ணின்.அமுதம்' என்ற கவிதை உள்ளது.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா – இதில்
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா – இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்ன படி நட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா – இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா – இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே – இழ
பாதி வழி வந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா – இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா

பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆனந்தத்தேன் என்ற கவிதை நூல்-2 யாழ்ப்பாணக் காவியம்-4 மஞ்சு காசினியம் - இயங்கு தமிழியல் (இலக்கணநூல் ) மஞ்சு மலர்க்கொத்து (சிறுவர்பாட்டு)முதலிய பல நூல்களை வெளியிட்டவர்.

அவரது விண்ணின் அமுதம் என்ற கவிதை வீட்டுக்கு வந்து விட்டுப் புகையிரதத்தில் மீண்டும் வேலைக்குப் பயணமாகும் கணவனதும் அவசர அவசரமாக அவனுக்குச் சமைத்துக்கொடுக்கும் மனைவியினதும் அன்பை மையமாகக் கொண்டுள்ளது. கணவனின் பிரிவைத் தாங்க முடியாது கண்ணீர் விடும் மனைவி அவசரத்தில் சமைத்ததால் உணவில் சில குறைபாடுகள் இருந்தாலும் அவற்றை நிறைவுகளாகக் காட்டும் கணவன் ஆகிய இருவரதும் அன்னியோன்யம் மிக்க வாழ்க்கையைச் சித்திரிப்பதன் மூலம் இல்லறத்தின் உயர் இலட்சியங்களை வெளிப்படுத்துகிறது.. புகையிரதத்தில் கவிஞரின் கட்டுப்பாசலைப்பார்த்துக் கேலி செய்த நண்பனுக்கு 'கட்டுப்பொதி' யின் பெருமையைக் கூறும் வகையிற் கவிதை அமைந்திருக்கிறது.

"தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா–இது
அங்க மெலாம்மிகப் பொங்கி வழிந்திடும்.
அன்புங்கலந்ததையா?"

எனும் பாடலில் மனைவியின் அன்பு அங்கலொம் பொங்கி வழியும் அன்பு,
சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது.

"கொட்டிய உப்புக் கசப்பதென்றாலும் உள்
கூடி இனிக்குதையா"
"ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மனக்குதையா -இது
வேக வைக்காத தென்றாலும் எனக்கொரு
விந்தை உருசி ஐயா" முதலிய பகுதிகள்குறைகளையும் நிறைகளாகக் காணும் கணவனது உயர்ந்த அன்பைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

"சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா-இது
சின்னஞ்சிறு கைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுதமையா"

என்ற பாடல் குழந்தை அளைந்த உணவை அசுத்தப்படுத்தப்பட்டதென்று நினைக்காமல் தெய்வ அமுதமாகக் கருதும் தந்தையின் பாசத்தை வெளிப்படுத்துகிறது

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்னும் திருக்குறளை நினைவுபடுத்துகிறது. இப்பொதி சாதாரண கயிற்றினால் கட்டப்பட்டன. ஒன்றல்ல அன்பு என்ற கயிற்றினாலே சுற்றிக்கட்டப்பட்டது. அதனாலே அந்த உணவைத் தொட்டுச் சுவைக்கும் போது உள்ளமெல்லாம் சோதிமிளர்கின்ற தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

தூய்மையான அன்பும்,குறைகளையும் நிறைகளாகக்காணும் பண்பும் இல்லறத்தின் வெற்றிக்கு அவசியமானவை.இதன் பயனாகக் கிடைக்கும் குழந்தை தொட்ட உணவு, விண்ணின் அமுதமாக அமையும்.





பாகம்
12

# யாழ். மாநகர சபையின் வரலாறு

(1906 - 1949)

○ ந.பரமேஸ்வரன்

08.06.1929 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் தலைவர் கனகரத்தினத்தின் சடுதியான மறைவுக்கு அனுதாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் மருத்துவ மாதுவின் சம்பளத்தை 17 ரூபா 50 சதமாக கூட்டுவது என தீர்மானிக்கப்பட்டது.

10.10.1931 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மறைந்த தலைவர் கனகரத்தினத்தின் சேவையைப்பாராட்டி புதிதாக அமைக்கப்பட்ட நாவலர் வீதிசெம்மணி வீதிக்கு கனகரத்தினம் வீதி என பெயர் சூட்டுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21.11.1931 அன்று யாழ்ப்பாண உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முதலாம் வட்டாரம் : நல்லையா

இரண்டாம் வட்டாரம் : மோசஸ்அல்போன்ஸ்.

மூன்றாம் வட்டாரம்: Dr.வெற்றிவேலு (தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த யோகேஸ்வரனின் தந்தை), V.A. துரையப்பா, சட்டத்தரணி சுப்பிரமணியம்.

நான்காம் வட்டாரம் : A.M.புறூடி யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்.

ஐந்தாம் வட்டாரம்: சட்டத்தரணி சோமசுந்தரம், சம்பதரிசியார் கல்லூரி ஆசிரியர் ராமர்பிள்ளை.

ஆறாம் வட்டாரம்: சட்டத்தரணி M.ஆசைப்பிள்ளை, K.V.சின்னத்துரை, K.ஐயாத்துரை

ஏழாம் வட்டாரம்: முன்னாள் தலைவர் R.சிவகுருநாதர், சட்டத்தரணி S.பதஞ்சலி, சட்டத்தரணி K.சிவப்பிரகாசம், சட்டத்தரணி S.இளையதம்பி, Dr.C.கனகரத்தினம், S.A.இராசையா, சட்டத்தரணி V.K.கனகசுந்தரம், M.N.அப்துல் காதர், ஐயாத்துரை, சங்கரப்பிள்ளை.

எட்டாம் வட்டாரம் : சாம் சபாபதி A.M.M.அப்துல் காதர் ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

05.12.1931 அன்று தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் பின்வருமாறு.

முதலாம் வட்டாரத்துக்கு R.R நல்லையா மீண்டும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்

இரண்டாம் வட்டாரத்துக்கு பழைய உறுப்பினரே மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

**மூன்றாம் வட்டாரம்**

R.சுப்பிரமணியம் 224 வாக்குகள்

V.A.துரையப்பா = 176 வாக்குகள்

நான்காம் வட்டாரத்துக் கு ஆசிரியர் புறூடி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

**ஐந்தாம் வட்டாரம்**

இராமசாமிப்பிள்ளை இராசதுரை 259 வாக்குகள்

K.சோமசுந்தரம் 245 வாக்குகள்

**ஆறாம் வட்டாரம்**

K.ஐயாத்துரை 252 வாக்குகள்

M. ஆசைப்பிள்ளை 202 வாக்குகள்

K.V.சின்னத்துரை 134 வாக்குகள்

**ஏழாம் வட்டாரம்**

R.சிவகுருநாதர்= 664 வாக்குகள்

S.பதஞ்சலி 306 வாக்குகள்

**எட்டாம் வட்டாரம்**

சாம் சபாபதி 847 வாக்குகள்

A.Mஅப்துல் காதர் 727 வாக்குகள்

S.இராஜரத்தினம் A.P. தம்பையா ஆகியோர் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். R.Rநல்லையா தலைவராகவும், R.சுப்பிரமணியம் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

11.06.1932 சனி காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற கூட்டத்தில் கச்சேரி மகாநாட்டு மண்டபத்தை (Lady Ridgeway hall) புனரமைக்க வேண்டும் என்ற விவாதம் இடம்பெற்றது. 01.01.1934 R.M.வேலுப்பிள்ளை பெரியகடை குத்தகை ஒப்பந்தம் முடிக்கவில்லை என 10.000 ரூபா நட்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்தார்.

09.11.1935 அன்று சுண்டிக்குளி மஹாஜனசபையில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கு மாநகரசபை தேவை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(தொடரும்)

**யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.**

○ பொக்கிசன்

# போத்தல்களும் ஒரு நாள் பொழுதும்



○ பொக்கிசன்

பதினைஞ்சு நாள் திருவிழா முடிஞ்சுது. கனக்க போத்தல் கிடக்கு. இண்டைக்கு இவ்வளவு போத்தலையும் கொண்டு போய் கைலாசம்பிள்ளை கடையில குடுத்திட்டு படத்துக்குப் போக வேண்டியதுதான். இவ்வளவு நாளும் திருவிழாவோடை மினக்கெட்ட திலை படத்துக்குப்போக நேரமில்லாமல் போச்சு. இண்டைக்கு எப்பிடியும் போகத்தான் வேணும். அங்க கிடந்த பன்னீர் போத்தல், நெய், தேன் போத்தல் எல்லாத்தையும் எடுத்து அப்பான்ரை பிரப்பங்கூடைக்குள் போட்டேன். கூடை நிரம்பி விட்டது. கொஞ்சம் வெக்கமாகத்தான் கிடக்கு போத்திலைக் கொண்டு போக . எண்டாலும் கூடைக்குள்ளை வைச்சு 'டீசண்டா தானே கொண்டு போறன். போறதுக்கு மட்டும்தான் காசு கிடக்கு .தற்சமயம் கைலாசம்பிள்ளை கடைக்காரன் போத்தல் வேண்டாமெண்டு சொன்னால் அதோகதிதான்.

யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டிலை இறங்கி நேரே கைலாசம் பிள்ளை கடைக்குப் போனன்.

"அண்ணை போத்தல் கிடக்கு எடுப்பியளே ?" முதலாளியிடம் கேட்டேன். ஓமெண்டு தலையாட்டி விட்டு,

" தம்பி இஞ்சை வா. இந்தப் போத்தலை எடு" எண்டார். கடையில் நிண்ட ஒருத்தர் வந்து போத்தல்களை எண்ணி எண்ணி எடுத்து வைத்தார்.

ஒரு அவுன்ஸ் போத்தல் ஒரு ரூபா, அரைப்போத்தல் 1 ரூபா 50 சதம், முழுப்போத்தல் இரண்டு ரூபா. அதிலையும் ஏதோ கழிவெண்டு சொல்லி, எல்லாமாக 10 ரூபா 75 சதம் தான் முதலாளி தந்தார். நேராய் மனோகராத் தியேட்டருக்கு போனன். இதயக்கனி ஓடுது; எனக்கு எம்.ஜி.ஆரின் படம் பிடிக்காது எண்டாலும் இதயக்கனி நல்ல படம். இண்டைக்கு பொக்ஸிலை இருந்து படம் பாக்க வேணும். யாழ்ப்பாணத்தலை ஒன்றிரண்டு தியேட்டரிலை தான் பொக்ஸ் வசதி (நான்கு ஆசனங்கள் போட்ட தனி அறை) இருக்குது. ஒன்பது மணிக்கு படம் முடிஞ்சுது. தாமோதர விலாசிலை போய் மசாலை தோசை சாப்பிட்டு விட்டுபஸ் ஸ்ராண்டுக்கு வந்தன்.

**இண்டைக்கு பொக்ஸிலை இருந்து படம் பாக்க வேணும். யாழ்ப்பாணத்தலை ஒன்றி ரண்டு தியேட்டரிலை தான் பொக்ஸ் வசதி [நான்கு ஆசனங்கள் போட்ட தனி அறை] இருக்குது. ஒன்பது மணிக்கு படம் முடிஞ்சுது. தாமோதர விலாசிலை போய் மசாலை தோசை சாப்பிட்டு விட்டு பஸ் ஸ்ராண்டுக்கு வந்தன்.**

9.30 க்கு தான் கடைசி பஸ். எல்லா பஸ்ஸூம் நிக்குது, "கீரிமலை" எண்டு போர்ட் போட்டு கொண்டு. எந்த பஸ்ஸில ஏறினாலும் கீரிமலைக்குப் போகலாம். எல்லா பஸ்ஸூம் கீரிமலையிலை தான் நைற் பார்க். 789 இல் ஏறினேன். இது அராலி, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி எல்லாம் சுத்திகொண்டு போகும். கொண்டக்டர் " தம்பி எவடம்?" எண்டார். நான் "கீரிமலை" எண்டன். "இது வட்டுக்கோட்டை, சித்தன்கேணி எல்லாம் சுத்திகொண்டு தான் போகும்" எண்டார். நான் " பரவாயில்லை" எண்டன். போன கிழமை 764 ல் ஏறிப் போனபோதும் கொண்டக்டர் இப்பிடித்தான் சொன்னவர். வீட்டை போய் என்ன செய்யிறது? ஆறுதலாப் போவம். 764 பலாலி ,மயிலிட்டி எல்லாம் போய்த் தான் கீரிமலைக்குப் போகும்.

769,768,787,788 எல்லாம் நிக்குது . அதுகள் கொஞ்சம் வேளைக்குப் போயிடும். 788 நாப்பது நிமிசத்தில கீரிமலைக்கு போயிடும். அது விளாவெளிக்குள்ளாலை போறது . பஸ் இன்னும் வெளிக்கிடேல்லை. வைரமாளிகை சுவீப் டிக்கட்டை வைத்துக்கொண்டு கத்திக்கொண்டு நிக்கிறார். "போனா 50 சதம்; வந்தா அஞ்சு பொம்பிளைப் பிள்ளையளுக்கு சீதனம்"

# கூட்டமைப்ப
# செய்திருந்த
# இப்படியெல்
# நடந்திருக்க

சுரே

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு கள், எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணையவேண்டியதன் அவசியம் உள்ளிட்ட சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணை ஊடகப் பேச்சாளருமான க.சுரேஷ்பிரேமச்சந்திரன் 'சஞ்சீவிக்கு' வழங்கிய நேர்காணல்.

சந்திப்பு: ஏ.ஏ.

**கேள்வி: 2020 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழர் தாயகத்துக்கு சொல்லும் செய்தி என்ன?**

**பதில் :** போரின் பின்னரான 10 ஆண்டுகளில் இளையோரின் வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. இவற்றைத் தீர்த்து வைக்கக் கூடியவர்கள் என்று அவர்கள் நம்பக் கூடியவர்களை நோக்கி ஒரு தொகுதி இளைஞர்கள் திசை திருப்பப்பட்டிருக்கின் றார்கள். கோடிக் கணக்கான பணத்தை தேர்தலில் சில அரசியல்வாதிகள் கொட்டியிருந்தார்கள். வாக்குகளைச் சுருட்டுவதற்காக அவர்கள் அவ்வாறு செய்தார்கள். நலிவடைந்த மக்களை இதனூடாகத் தங்களின் வாக்காளர்களாக மாற்றினார்கள். அரசு சார்பானவர்கள் தமிழர் தாயகத்திலிருந்து தெரிவு செய்யப்படுவதற்கு இது காரணமாக அமைந்திருக்கின்றது. கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனையும் சாதிக்கவில்லை. இதற்கும் அப்பால் அவர்கள் அரசின் ஊதுகுழலாக இருந்தமை மக்கள் மத்தியில் வெறுப்பையும், விரக்தியையும் உருவாக்கியிருந்தது. தேர்தல் பின்னடைவுக்கு அதுவும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. அவர்களிடமிருந்து பிரிந்த வாக்குகள் தமிழ்த் தேசியம் சார்ந்து, விக்னேஸ்வரனுக்கோ, கஜேந்திரகுமாருக்கோ சென்றன என்பதும் உண்மை.

**கே: வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் இரண்டு விடயங்களும் கடந்த 10 ஆண்டுகளில் கட்டியெழுப்பப்படவில்லை என்று கூறும் உங்களுக்கும் அதில் பொறுப்பு இருக்கத்தானே செய்கின்றது?**

**பதில் :** நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதி, ராஜபக்சக்கள் போர் வெற்றி மமதையில் இருந்த காலம். அப்படியிருந்த காலத்திலும் ராஜபக்சக்களுடன் நாங்கள் 17 சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தோம். அது வெற்றியளிக்கவில்லை. ஆனால் கடந்த 5 ஆண்டுகள் என்பது முற்றிலும் வித்தியாசமானது. அரசின் பங்குதாரர்களாக கூட்டமைப்பினர் இருந்தார்கள். எங்களால் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் சில விடயங்களையாவது சாதித்திருக்கலாம் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு. அது நிறைவேற்றப்படவில்லை.

**கே: கடந்த 5 ஆண்டுகளிலேயே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முன்னெப்போதுமில்லாத அளவுக்கு கூடியளவு நிதி வழங்கப்பட்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டனவே?**

**பதில் :** வீதிகள் போடுவதும், சனசமூக நிலையக் கட்டடங்கள் அமைப்பதும், ஆலயங்களுக்கு உதவி வழங்குவதும்தான் அபிவிருத்தியா? வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள ஒருவர், வறுமைக் கோட்டுக்கு மேல் வந்தால் அங்கு அபிவிருத்தி நடந்திருக்கின்றது என்று சொல்லலாம். வேலையில்லாப் பிரச்சினை குறைவடைந்திருந்தால், அங்கு அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது என்று கூறலாம். கூட்டமைப்பு ஊடாக கம்பரெலியத் திட்டத்தில் வீதிகள் போடப்பட்டனதான். வேலை வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் ஏதாவது இந்தக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டனவா ? இல்லையே.

வேலை வாய்ப்பைக் காட்டி நாடாளுமன்றம் சென்ற அங்கஜன் இராமநாதன்கூட அரச வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பது பற்றியே வாக்குறுதிகளை வழங்கினார். எத்தனை ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும்? எல்லோருக்கும் அதனைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? வேலையை உருவாக்குவது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை.
கூட்டமைப்பு வேலைவாய்ப்புக்களை உருவாக்கி உரிய முறையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்தால் இளைஞர்களின் வாக்குகள் திசைமாறியிருக்க மாட்டாது.
எமது இளைஞர்களின் பாதை இப்போது மாறிவிட்டது. இளைஞர்களை தவறான வழியில் வேண்டுமென்றே திசைதிருப்பும் வேலைகளை பேரினவாத அரசியல் மறைமுகமாகச் செய்கிறது. இதற்கு இளைஞர்களும் பலியாகத்தான் செய்கிறார்கள். இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமானால், இளையோருக்கு உரிய வேலை வாய்ப்புக்களை வழங்கியிருக்கவேண்டும்.
வீதிகளைப் போட்டால், கோயிலுக்குப் பணம் கொடுத்தால் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைத்தார்களே தவிர மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியைச் செய்யவில்லை.

**கே: கடந்த காலங்களிலும் இளையோருக்கு வேலைவாய்ப்பு, வாழ்வாதாரத் தேவைகள் என்பவை இருந்தபோதும் அவற்றை அள்ளிவீசி வாக்குகளைச் சுருட்டும் அரசியல்வாதிகள் இருந்தபோதும் இளையோர் தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து தடம்மாறவில்லையே? இப்போது தடம் மாறியமைக்கு காரணம் என்ன?**

**பதில் :** போர் முடிவுக்கு வரும்போது 9 வயதில் இருந்த சிறுவனுக்கு இன்று 20 வயது. போரின் வலியோ, போரில் எமது உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட வலியோ அவனுக்குத் தெரியாது. அதை உணரும் நிலையிலும் இன்றைய இளைய சமூகம் இல்லை. குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் போன்றோருடன் திரிந்த இளைஞர்களிடம் அது அறவே இல்லை. இந்த வயதினர்தான் இப்போது பெரும் வாக்கு வங்கியினர். வலிகளை உணராத அந்தக் கூட்டம், அங்கஜன் போன்றோருடன் இழுபடுகின்றது.

**கே: போராட்டத்தைப் பற்றியோ அதன் வலியைப் பற்றியோ எதுவுமே தெரியாததொரு சூழலில் அந்த இளைஞர்கள் வளர்ந்தற்கு யார் பொறுப்பு?**

**பதில் :** மக்களை அரசியல் மயப்படுத்த தவறிய நாங்கள், அரசியல்வாதிகள் ஒரு வகையில் பொறுப்பு.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரிய கட்சி. அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை மிகப் பெரிய போராட்டங்களை ஒருங்கமைத்தார்கள்? எத்தனை போராட்டங்களில் பங்கேற்றார்கள்? புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியைக் குழப்பாதீர்கள் என்று சொல்லிச் சொல்லியே, சம்பந்தன் தானும் பங்கேற்கவில்லை. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பங்கேற்க விடவில்லை.

**கே: போராட்டத்தை அறியாத இளையோர்
கத்தால் டக்ளஸ் தேவானந்தா, அங்க
போன்ற தரப்புக்களின் வாக்கு வங்கி
அதிகரித்துள்ளன. தமிழ்த் தேசியம் பேசுகி
அனைத்துக் கட்சிகளுக்குமே இது ஆப
னது. இந்த நிலையில் தமிழ்த் தேசியக்
டமைப்புக்கு மாற்று என்று சொல்கி
அணிகள் கூட இளைஞர்களை அரசி
விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை
னெடுக்கவில்லையே?**


**பதில் :** இது உண்மைதான். தமிழ் மக்கள் தேசி
கூட்டணி உருவாக்கப்பட்டு 6 மாதங்கள்தான் மு
டைந்துள்ளது. அதற்குள் கொரோனா இடர்
10 வருடங்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்
செயற்பட்டு வருகின்றது. அவர்கள் பல போ
டங்கள் நடத்தியிருந்தார்கள். கிராம மட்டத்
ருந்து மக்களை குறிப்பாக இளைய சமுதாய
சரியான வழியில் அரசியல் மயப்படுத்தும்
பாட்டை நாங்கள் எவரும் செய்யவில்லை. இ
குற்றச்சாட்டை நாங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்

**கே: தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் இ
வதுஇதனைஒன்றிணைந்துமுன்னெடுக்**

**பதில் :** தமிழ்த் தேசியத்தில் நம்பிக்கை வைத்
கின்ற தரப்புக்கள் ஒரு பொதுக் கொள்கை
அடிப்படையிலாவது ஒன்றிணையவேண்
ஆனால் அதற்கான உடன்பாடு என்பது இ
இல்லை. ஆகக் குறைந்தது நாடாளுமன்றத்தி
தாவது இதனை ஆரம்பிக்கலாம். விக்னேஸ்வர
கருத்துக்கு எதிராக சிங்கள நாடாளுமன்ற உ
னர்கள் போர்க்கொடி தூக்கியதற்கு, விக்னே
ரனுக்கு ஆதரவாக உடனடியாகப் பதிலடி கொ
பதற்கு கூட்டமைப்பினதோ, மக்கள் முன்
யினதோ நாடாளுமன்ற் உறுப்பினர்கள் தயா
இல்லை. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும்
யேயும் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் ஒன்றி
வேண்டும். அது காலத்தின் தேவை. அங்
போன்ற வியாபாரிகள் தங்களது வியாபாரத்
எங்களது இளைஞர்களுக்கு பிழையான வழி

**எமது இளைஞர்களின் பாதை இப்போது
விட்டது. இளைஞர்களை தவறான வழ
வேண்டுமென்றே திசைதிருப்பும் வேலை
பேரினவாத அரசியல் மறைமுகமாகச்
கிறது. இதற்கு இளைஞர்களும் பலிய
தான் செய்கிறார்கள்.**

# ப்பைப் பதிவு ந்தால் பல்லாம் க்காது!



போர் முடிவுக்கு வரும்போது 9 வயதில் இருந்த சிறுவ னுக்கு இன்று 20 வயது. போரின் வலியோ, போரில் எமது உறவு கள் கொன்றொ ழிக்கப்பட்ட வலியோ தெரியாது. அதை உணரும் நிலையிலும் இன்றைய இளைய சமூகம் இல்லை. குறிப்பாக நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் போன்றோருடன் திரிந்த இளை ஞர்களிடம் அது அறவே இல்லை.

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

இளையோர் சமூ
தா, அங்கஜன்
க்கு வங்கிகள்
சியம் பேசுகின்ற
இது ஆபத்தா
த் தேசியக் கூட்
சொல்கின்ற
ளை அரசியல்
பாடுகளை முன்

க்கள் தேசியக்
ள்தான் முடிவ
இடர்வேறு.
கள் முன்னணி
பல போராட்
மட்டத்திலி
சமுதாயத்தை
த்தும் செயற்
ல்லை. இந்தக்
ஆகவேண்டும்.

ட்சிகள் இனியா
ன்னெடுக்குமா?

கை வைத்திருக்
கொள்கையின்
யவேண்டும்.
பது இதுவரை
மன்றத்திலிருந்
னேஸ்வரனின்
மன்ற உறுப்பி
, விக்னேஸ்வ
திலடி கொடுப்
ள் முன்னணி
ர்கள் தயாராக
ளேயும் வெளி
ஒன்றிணைய
வ. அங்கஜன்
பாரத்துக்காக
ான வழியைக்

போது மாறி
ன வழியில்
வேலைகளை
மாகச் செய்
பலியாகத்

காண்பித்துச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது. நான் அங்கஜன் போன்றவர்களை வியாபாரிகள் என்று கூறியதற்கு காரணம் உண்டு. அவர்கள் பல கோடிகளைச் செலவு செய்து இந்த வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்றால், அதைவிடக் கூடிய கோடிகளை அவர்கள் இதனூடாக உழைத்து எடுக்கப் போகின்றார்கள் என்பதுதான் அர்த்தம்.இதற்கான இடத்தை தமிழ்த் தேசியத்தை பேசும் தரப்புக்கள் விட்டுக் கொடுக்கக் கூடாது. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதைவிட்டு ஒன்றிணையவேண்டும்.

**கே: விக்னேஸ்வரன் தலைமையிலான தங்களின் கூட்டணிக்கு தேர்தல் முடிவுகள் பின்னடைவுதானே?**

**பதில் :** நாம் கூடுதலான ஆசனங்களை இந்தத் தேர்தலில் எதிர்பார்த்தோம் என்பது உண்மை. கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியிலேயே நாம் தேர்தலை எதிர்கொண்டோம். குறுகிய காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் 52 ஆயிரம் வாக்குகளை நாம் பெற்றுக் கொண்டோம் என்பதும், ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளோம் என்பதும் மக்கள் எம் மீது நம்பிக்கை வைத்திருப்பதைக் காட்டுகின்றது. தமிழ்த் தேசியத்தை நேசிக்கக் கூடியவர்கள் கூட்டாகச் செயற்பட்டால் நாம் இதனைவிடப் பெரும் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும். இது கைமீறிப் போன விடயமாக நான் பார்க்கவில்லை.

**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு தங்கள் மாற்று அணியாக விக்னேஸ்வரன் கூட்டணியின் களமிறக்கம் அமையும் என்று கடந்த மார்ச் 'சஞ்சீவிக்கு' வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தீர்கள். சரியான பாதைக்கு கூட்டமைப்பை உங்களால் திருப்ப முடிகின்றதா?**

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது, எங்களது கூட்டணியினாலேயோ அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினாலேயோ மிகப் பெரிய அழுத்தங்களைப் பிரயோகிக்க முடிந்திருக்கின்றது. அந்த அழுத்தங்கள், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினுள்ளும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினுள்ளும் பல கருத்து மோதல்களை உருவாக்கியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை பிழையான பாதையில் கொண்டு சென்றவர்கள் இன்று கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை நோக்கி அவர்களின் கட்சியிலிருந்தே பலர் கேள்வி கேட்கின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது.

மிகப் பெரும் பழமை வாய்ந்த கட்சியான தமிழ் அரசுக் கட்சி சரியான பாதையில் திரும்புவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன. ஆனால் அதற்குள்ளும் இன்னமும் இழுபறிகள் இருக்கின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. தமிழ் அரசுக் கட்சி, தவறிழைத்தவர்கள் மீது எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களைச் செய்யப் போகின்றது, கொள்கை ரீதியாக எப்படிச் செல்லப் போகின்றது உள்ளிட்ட பல்வேறுபட்ட கேள்விகள் இருக்கின்றன. இப்படியே சென்றால் கட்சி அழிந்து விடும் என்ற நிலைமையை அவர்கள் உணரத் தொடங்கியிருப்பது மாற்றத்துக்கான அறிகுறியாகவே தென்படுகின்றது.

**கே: சுமந்திரனுக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புக்களின் அடிப்படையில் இதனைக் கூறுகின்றீர்களா?**

**பதில் :** வெறுமனே சுமந்திரனுக்கு எதிராக மாத்திரமல்ல, சம்பந்தனுக்கு எதிராகவும் கட்சிக்குள்ளே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. அவர்கள் இருவரிடமும் கேள்வி கேட்கும் அளவுக்கு கட்சிக்குள் நிலைமை மாறியிருக்கின்றது என்பது உண்மை.

**கே: தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகளில் உங்கள் கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ். மாத்திரமே 40 ஆண்டுகள் பழமையான கட்சி. நடைபெற்று முடிந்த தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூட உங்கள் கட்சி சார்ந்தவர்களால் பெற்றுக் கொள்ள முடியாமைக்கு என்ன காரணம்?**

**பதில்:** இந்தப் பின்னடைவு என்பது வடக்கு கிழக்கில் ஏற்பட்ட ஒரே விதமான சிந்தனையோட்டம் காரணமாக இருந்திருக்கலாம்.இந்த இடத்தில் பஸில் ராஜபக்ச கூறிய விடயத்தை நினைவுபடுத்துவது நல்லது என்று நினைக்கின்றேன். நாடாளுமன்றத் தேர்தலின்போது தாம் வகுத்த புதிய வியூகம் வடக்கு மற்றும் கிழக்கில் தங்களுக்குப் பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

எங்களைப் பற்றிய சில விமர்சனங்களை நாங்களும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடிப்படையில் முதலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டோம். அங்கிருந்து முரண்பட்டு வெளியேறிய பின்னர் புதிய அணியை நாங்கள் உருவாக்கியிருந்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டிருந்தோம். அதன் பின்னர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை உருவாக்கி மீன் சின்னத்தில் போட்டியிட்டிருந்தோம். நாங்கள் திட்டவட்டமாக ஓரிடத்தில் இல்லாமல் மாற்றி மாற்றி போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதும் எங்கள் பின்னடைவுக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

**கே: தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறுண்டமையால் தேர்தலில் பின்னடைவு வரும் என்று எதிர்வுகூறல் முன்வைக்கப்பட்டிருந்தது. அது நிரூபணமாகியிருக்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு புள்ளியில் இணைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?**

**பதில்** நிச்சயமாக எடுக்கப்படுகின்றன. தேர்தல் முடிந்த கையோடு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கட்சித் தலைவர்கள் எல்லோரும் கூடிப் பேச்சு நடத்தியுள்ளோம். தமிழ்த் தேசியத்தில் நம்பிக்கையுள்ள கட்சிகளை அழைத்துப் பேசுவதாகவும் நாங்கள் ஒரு யோசனையை முன்வைத்துள்ளோம். இன்னமும் இந்த வேலையை ஆரம்பிக்கவில்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியோ, புளொட்டோ, ரெலோவோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அதில் வந்து கலந்து கொள்வார்களாக இருந்தால் பொதுக் கொள்கையின் அடிப்படையில் செயற்படலாம். நாங்கள் மாத்திரம் 'புனிதர்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்காமல் காலத்தில் தேவையை, சூழலை அறிந்து பொது வேலைத் திட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும். அடுத்தடுத்த வாரங்களில் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து வந்தவர்களே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாக உள்ளார்கள். உங்கள் கூட்டணி மீண்டும் கூட்டமைப்புடன் இணைவதற்கு தடையாக இருப்பது என்ன?**

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இதனை நாங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆக அந்தக் கூட்டமைப்புக்குள் இருந்த காலத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றோம்.

**கே: கூட்டமைப்பாக பதிவு செய்வதற்கு யார் தடையாக இருந்தார்கள்?**

**பதில்:** ஆரம்பத்திலிருந்து தமிழ் அரசுக் கட்சி அதற்கு ஒத்துழைக்கவில்லை.

**கே: தமிழ் அரசுக் கட்சியில் யார் ஒத்துழைக்கவில்லை?**

**பதில்:** மாவை. அண்ணை (சேனாதிராசா), சம்பந்தன் ஐயா உள்ளிட்ட எல்லோரும் எதிராகத்தான் செயற்பட்டார்கள்.

ஒரு கட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனையோர், அதாவது ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் பதிவு செய்த பின்னர் அதனுள் தமிழ் அரசுக் கட்சியையும் உள்ளீர்ப்போம் அல்லது அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த முயற்சியை ஆரம்பித்தோம்.

நானும் புளொட் தலைவர் சித்தார்தனும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளரை சந்தித்துக் கலந்துரையாடினோம். நான்கு கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட வேண்டிய நேரத்தில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்தியாவுக்கு போய்விட்டார். அல்லது அனுப்பப்பட்டார். அவர் இரண்டு வாரங்கள் வரவில்லை. அந்த முயற்சி அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருந்தால் இந்த உடைவுகள் வந்திருக்காது.

(23ஆம் பக்கம் பார்க்க)



# பொலித்தீன் தடை!

## யாழ். மாநகர எல்லைக்குள் சாத்தியமா?

கணபதி சர்வானந்தா

பொதுவாகவே உள்ளூராட்சி மன்றங்களினால் கொண்டுவரப்படும் சட்டங்களும், பிரேரணைகளும் முற்று முழுதாக நிறைவேற்றப்படுவதில்லை. அப்படி நிறைவேற்றப்படுபவைகூட "சோடா காஸ்" போல ஆரம்பத்தில் சத்தம் எழுப்பி ஏதோ வெட்டி விழுத்தப் போவதாகப் படம் காட்டிவிட்டு, படிப்படியாக நீர்த்துப் போவதுதான் கடந்தகால அனுபவம். அதற்குச் சான்றாக. உள்ளூராட்சிச் சபைகளை புதிய நிர்வாகங்கள் பொறுப்பேற்ற பின்பு , குறிப்பாக நல்லூர் மற்றும் உடுவில் உள்ளூராட்சிச் சபைகளிலே ''திடீர் திடீர்'' எனத் தோன்றும் நடைபாதைக் கடைகளை அனுமதிப்பதில்லை" என்ற பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றினர். ஆனால் அதற்குப் பின்னர் அந்தப் பிரேரணையை நடை முறைப்படுத்த எந்தவித நடவடிக்கைகளையும் அவர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை. அது பற்றி விசாரித்த போது "பொலிஸில் முறைப்பாடு செய்தோம். அவர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பர்" என்ற சாட்டைச் சொல்லித் தமது தரப்பில் உள்ள குறைபாட்டை மறைக்க முயல்கின்றனர். இன்று பார்த்தால் யாழ்.மாநகரத்தில் இருந்து வடக்கு மற்றும் மேற்கை நோக்கி விரியும் பெருந்தெருக்களின் முடிவு வரை, அதன் கரையோரங்களில் பல கடைகள் அவ்வப்போது இப்படி மின்னலாகத் தோன்றி மறைகின்றன. அதுவும் சனி,ஞாயிறு போன்ற விடுமுறை நாள்களில்தான் அதிக கடைகள். 56 மீற்றர் நீளத்துக்கு பெரிய அளவில் திறந்து அமோக வியாபாரம் வேறு.பெருமளவில் தென்னிலங்கையில் இருந்து வருபவர்களே அதிகம் இது போன்ற தற்காலிகக் கடைகளை போட்டுச் சம்பாதிப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் சபைகளின் அனுமதியோடுதான் இவ்வாறான கடைகள் போடப்படுகின்றனவா? சபை அனுமதி கொடுக்காத பட்சத்தில் அவர்களுக்கு அனுமதி கொடுத்தவர்கள் யாராக இருப்பர்? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

தற்போது இதேபாணியில் யாழ்.மாநகரசபை ஒரு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது. செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல்,யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கின்ற உணவகங்கள் மற்றும் வர்த்தகநிலையங்களில் பொலித்தீன் ( நெகிழி) பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.இந்தப் பொலித்தீன் தடை என்ற விடயம் எமக்குப் புதியதொன்றல்ல. பல காலமாகப் பேசப்பட்டு வரும் ஒரு விடயமே. முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் பதவிக் காலத்தில் பொலித்தீன் தடை பற்றி அதிகம் பேசப்பட்டு, அதனை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டதே ஒழிய , அது நடைமுறைப்படுத்தப்படவேயில்லை.

இலங்கைச் சுற்றுச் சூழல் அதிகாரசபையினால் பொலித்தீன் தடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டபோது, அப்போது வட மாகாண சபையில் சுகாதார அமைச்சராக இருந்தவரிடம் "மக்களின் சுகாதார மேம்பாட்டை முன்னிறுத்தி இந்தச்சட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டிருந்தது. அதற்கு " இது எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத விடயம். சுற்றுச் சுழல் அமைச்சே அதனைக் கவனிக்க வேண்டும்" என்று அவரால் பதிலளிக்கப்பட்டது. பின்பு சுற்றுச் சூழல் அதிகாரிகளைத் தொடர்பு கொண்ட போது அது மத்திய அமைச்சுக்குரிய பணி என்று பந்து மத்திய அரசை நோக்கி எறியப்பட்டது. இது போன்ற சட்டங்களைக் கொண்டு வரும் போது அதனை யார் அமுல்படுத்துவது என்ற அலுப்புக் காரணமாக, ஆளுக்காள் ஒவ்வொரு அமைச்சையும், திணைக்களத்தையும் நோக்கி மாறி மாறி கைகாட்டுகிறார்களே தவிர உருப்படியாக எதுவும் செய்வதில்லை. இது போன்ற சட்டங்கள் நடைமுறையில் வரும்போது அதனை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுவது தவிர்க்கமுடியாததே. மாதிரிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீது பொலிஸ் தரப்பால் தாக்குதல் செய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட சமூக இடைவெளி தொடர்பான வழக்கைச் சொல்லலாம். அது "பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குரிய கடமையே அன்றிப் பொலிஸாருக்குரியதல்ல." என்று தீர்ப்பளித்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே சட்டத்தின் பார்வையில் இதன் அமுலாக்கம் எப்படி இருக்கும் என்ற முன்னெச்சரிக்கையும் அவசியம்.

இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகப் புழக்கத்தில் உள்ள பொலித்தீனை ஒழிப்பதன் முதற்படியாக, விழிப்புணர்வை ஏற்படுத்தி பொலித்தீனை மக்கள் மனங்களில் இருந்து முதலில் அகற்ற நடவடிக்கை

**தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளால் வெளியிலிருந்து கொண்டுவரப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களால் நிரம்பி வழிகிறது ஆரியகுளம். அதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.**

எடுக்க வேண்டுமேயொழிய, கடைகளிலும், உணவுச் சாலைகளிலும் இருந்து அல்ல. அதற்கு விழிப்புணர்வாக யாழ். மாநகர சபை முன்னெடுத்த விழிப்பு ணர்வுச் செயற்திட்டம் என்ன? சரி, பொலித்தீன் பாவனையை தடை செய்வதாக இருந்தால், உணவுச் சாலைகளில் பாவனையில் உள்ள பொலித் தீனுக்கு மாற்றீடாக மாநகர சபை முன்வைக்கும் பொருள்களான வாழை இலை,தாமரை இலை,தேக்கம் இலை, வாழைமடல் போன்ற பொருள்கள் வியாபார ரீதியாகப் தேவையான அளவில் கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதா? மாநகர சபை சார்பில் எந்தத் துறை இதனைக் கண்காணிக்கப் போகிறது? இந்தச் சட்டம் யாழ். மாநகர எல்லைக்குள் தான் பொருந்தும். அப்படியானால் மாநகர எல்லைக்கு வெளியே, எல் லையை அண்மித்து இருக்கும் உணவுச்சாலைகளையோ அல்லது வியாபார நிறுவனங்களையோ இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது. ஆகவே அந்தக் கடைகளில் இருந்து காற்றோடு காற்றாக பறந்து ஊடுருவப்போகும் பொலித்தீன் கழிவுகளை மாநகரசபை எப்படி முகாமைத்துவப் படுத்தப்போகிறது? அது மட்டுமல்ல, உணவுச்சாலை தவிர்ந்த ஏனைய வியாபார நிறுவ னங்களில் உபயோகப்படுத்தப்படும் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக எதனைச் சிபார்சு செய்கிறார்கள்? தற்போது சந்தையில் இருக்கும் உக்கக்கூடிய , சூழலை மாசு படுத்தாத, "எகோ ஃபிரண்ட்லி" பொலித்தீன் பைகளை சாதாரண விலைகொடுத்து வாங்க முடியாது. வர்த்தகர்கள் அதனை உபயோகிப்பார்களானால், அதன் பெறுமதியை நுகர்வோரிடமிருந்தே அறவிட வேண்டும். அதுவும் நடைமுறையில் சாத்தியமா? என்றெல்லாம் பல கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல மாநகர எல்லைக்கு வெளியேயிருந்து கொண்டுவரப்படும் பொலித்தீன் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. குறிப் பாகத் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணி களால் வெளியிலிருந்து கொண்டுவரப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களால் நிரம்பி வழிகிறது ஆரியகுளம். அதற்கு எதுவித நட வடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே இது போன்ற சட்டத்தை அமுல்படுத்த முன்னர், மக்கள் பக்கத்திலேற்படக் கூடிய சிரமங்களையும் சற்று ஆராய்ந்து அறிவது மிக மிக முக்கியம்.அது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் பொலித்தீன் பாவனைத் தடை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே எமது நாட்டிலும் அதனை அமுலாக்குவது சிரமமானதொன்றல்ல தான். ஆனால்,இலங்கையில் பொலித்தீன் வர்த்தகம் என்பது ஒரு அரசியல் பின்னணியைக்கொண்டு இயங்குவதோடு, மூலப் பொருளின் உயர்வான வர்த்தகப் பெறுமதியுள்ள பொருள் என்பதன் அடிப்படையில் , அதன் இறக்குமதி வர்த்தகம் என்பது மிகச்சில வியாபாரப் புள்ளிகளாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

அதுமட்டுமல்ல, பல பேர் பொலித்தீனை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தில் பெருமளவு முதலீட்டைச் செய்திருக்கின்றனர் . எனவே பொலித்தீன் பாவனைத் தடையை நாடு முழுதும் இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் மாநகரசபைக்குள்ளாவது நடைமுறைப்படுத்துவது என்பது மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் வேலை தான். பார்ப்போம், மாநகரசபை இந்தச் சவாலை எப்படி முறியடித்து, பொலித்தீன் பாவனையை ஒழிக்கப் போகின்றதென்பதை?



# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 -1995




○ தில்லைநாதன் கோபிநாத்

3

மிசனரிமார் வெளியிட்ட சமயப் பரப்புரை நூல்கள் மற்றும் சமய பாடநூல்களை எதிர்கொள்ளும் வகையில் பல நூல்களை ஆறுமுக நாவலர் வெளியிட்டார். முதலாம் பால பாடம், இரண்டாம் பால பாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலய தரிசன விதி, சைவ சமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப்படை உரை, பெரிய புராண வசனம் என நாவலரின் பதிப்புப் பணிகள் விரிவடைந்தன. கிறித்தவ நூல்களுக்கு எதிரான கண்டன நூல்களையும் நாவலர் பதிப்பித்தார்.

யாழ்ப்பாணத்தின் பதிப்புத்துறை சமயப் பிரசுரங்களில் ஆரம்பித்தபோதிலும், விரைவிலேயே பாடநூல்கள், அகராதிகள் போன்ற உசாத்துணை நூல்கள், இலக்கண நூல்கள், ஏட்டுச் சுவடிகளில் இருந்த நூல்களை அச்சுவாகனம் ஏற்றுதல், பழந்தமிழ் நூல்களுக்கான உரைகள் என விரிவடையத் தொடங்கியது.

1847இல் சிதம்பரப்பிள்ளையின் முயற்சியில் பெரிய புராணம், கந்தபுராணம் போன்றவற்றின் பகுதிகளைக் கொண்ட இலக்கிய சங்கிரகத்தின் வருகை ஏட்டுச் சுவடிகளை அச்சுவாகனமேற்றும் முன்னோடி முயற்சியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து சி. வை. தாமோதரம்பிள்ளையும் ஆறுமுகநாவலரும் சுவடிப்பதிப்புப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்தனர். “குமரகுருபரசுவாமிகளருளிய நீதி நெறி விளக்க மூலமும் யாழ்ப்பாணம் சேர்ச் மிஷன் வித்தியாசாலை உபாத்தியாராகிய தாமோதரம் பிள்ளை இயற்றிய உரையும்” (1854) என்ற நூலில் தொடங்கிய தாமோதரம்பிள்ளையின் சுவடிப் பதிப்புப் பணிகள், யாழ்ப்பாணத்தைத் தாண்டி ஒட்டுமொத்த தமிழுக்கான பங்களிப்பாக அமைந்தன என்றால் அது மிகையாகாது.

தமிழின் முன்னோடி அகராதிச் செயற்றிட்டங்கள் மிசனரிமாரின் முயற்சியில் யாழ்ப்பாணத்திலேயே தொடங்கின. 1842இல் வெளியான The Manual Dictionary of the Tamil Language என்ற நூல் தமிழ் அகராதி வரலாற்றில் ஒரு மைற்கல் என்றால் மிகையாகாது. இந்த அகராதி யாழ்ப்பாண அகராதி, மானிப்பாய் அகராதி போன்ற பல பெயர்களில் பின்னர் அழைக்கப்பட்டது. அமெரிக்க மிசனைச் சார்ந்த பல அறிஞர்கள் இந்த அகராதிக்குப் பங்களித்திருந்தனர்.

அகராதிகளின் வருகை, மொழி பெயர்ப்பு நூல்களையும் இலகுவாக்கியது. பைபிள் மொழிபெயர்ப்பு போன்றவையும் யாழ்ப்பாணத்தில் தொடங்கின. நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை யின் அளவையியல் தொடர்பான நியாய இலக்கணம் (1850), கரோல் விசுவாநாதபிள்ளையின் கணிதம் தொடர்பான வீச கணிதம் (1855) போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் அவர்கள் கற்றறிந்த துறைசார் அறிவைத் தமிழுக்குக் கொண்டு வருவதாக அமைந்தன. 1850களில் மிசனரி வைத்தியர் சாமுவேல் கிறீனின் மொழிபெயர்ப்பில் மருத்துவ நூல்களும் வெளியாகத் தொடங்கின.

ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம் (1881) இலக்கிய வரலாற்று நூலாக்கத்தின் முன்னோடி முயற்சி எனப்படுகிறது. மிக நீண்டகாலம் உதயதாரகையின் ஆசிரியராக இருந்த சதாசிவம்பிள்ளை வேறு பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். ஆறுமுக நாவலர், தாமோதரம்பிள்ளை வரிசையில் சதாசிவம்பிள்ளையும் யாழ்ப்பாணப் பதிப்புத்துறை முன்னோடிச் செயற்பாட்டாளர்களுள் ஒருவராவார்.

பிரசுரங்கள், நூல்களைத் தொடர்ந்து பத்திரிகைத் துறையும் யாழ்ப்பாணத்தில் விரிவு பெற்றது. மாதமிருமுறை இதழாக 1841இல் உதய தாரகை ஆரம்பமானபோதிலும், சுமார் 20 ஆண்டுகளுக்குப் பெரிய அளவில் வேறு பத்திரிகைச் செயற்பாடுகள் நடைபெறவில்லை.

1853 இல் வைமன் கதிரவேற்பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு லிற்றறி மிரர் (Literary Mirror) எனும் பத்திரிகை தொடங்கப்பட்டது. வித்தியா தர்ப் பணம் என்றும் அழைக்கப்பட்ட இவ்விதழ், இரண்டு ஆண்டுகள் அளவில் வெளிவந்தது. ஆயினும் பத்திரிகைப் பதிப்பில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

1860களில் இந்த நிலைமை மாறத் தொடங்கியது. 1862இல் நிக்கொலஸ் சூல்ட் தொடங்கிய ‘யாப்னா பிறிமனும்’ 1863இல் வைமன் கதிரவேற்பிள்ளை தொடங்கிய இலங்காபிமானியும் போட்டிப் பத்திரிகைகளாக உருவெடுத்தன. இவையிரண்டும் வாரப் பத்திரிகைகள். ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் செய்திகள் அவற்றில் பிரசுரமாயின. ஆயினும் சில ஆண்டுகளின் பின்னர் இரு பத்திரிகைகளும் சொலமன் யோன்பிள்ளையின் நிர்வாகத்தில் வந்ததைத் தொடர்ந்து ‘யாப்னா பிறிமன்’ கைவிடப்பட்டு ‘இலங்காபிமானி’யுடன் சேர்க்கப்பட்டது.

உதயதாரகை ஆரம்ப காலத்திலிருந்தே வாசகர் கடிதம் கட்டுரைகளையும் அதற்கான பதில்களையும் பிரசுரித்து வந்தது. அவை அக்கால சமய, புலமைத்துவ விவாதங்களாக அமைந்தன. சமய நூல்களும் அவற்றுக்கு மறுப்பான கண்டன நூல்களும் ஏற்கனவே கிறித்தவ, சைவ சமயங்களுக்கிடையிலான கருத்து மோதல்களாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ‘யப்னா பிறிமன்’, ‘இலங்காபிமானி’ போன்றவற்றின் வருகை இந்த விவாதங்களை இன்னொரு தளத்துக்கு நகர்த்தியது. 1864இல் சிறுவர் பத்திரிகையான ‘பாலியர் நேசனும் 1876இல் கத்தோலிக்கத் திருச்சபையின் கத்தோலிக்கப் பாதுகாவலனும் 1877இல் சைவ சமய சார்புடைய முதற் பத்திரிகையான இலங்கை நேசனும், 1880இல் சைவ உதயபானுவும் தொடங்கப்பட்டன. இந்தப் பத்திரிகைகளுக்கிடையில் சமய, செய்திகள், இலக்கியம், இலக்கணம் எனப் பல துறைகளில் விவாதங்கள் நிகழ்ந்தன. இந்த வாதங்கள் தொடர்பாக “புதினக் கடதாசிகள் யுத்தம்” என்ற தலைப்பில் இலங்கை நேசனில் ஒரு செய்தியும் வெளியாகியது.

**தமிழின் முன்னோடி அகராதிச் செயற்றிட்டங்கள் மிசனரிமாரின் முயற்சியில் யாழ்ப்பாணத்திலேயே தொடங்கின. 1842இல் வெளியான The Manual Dictionary of the Tamil Language என்ற நூல் தமிழ் அகராதி வரலாற்றில் ஒரு மைற்கல் என்றால் மிகையாகாது.**


நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை


ஆறுமுக நாவலர்


சி. வை. தாமோதரம்பிள்ளை


வைமன் கதிரவேற்பிள்ளை

இவற்றில் ‘பாலியர் நேசன்’ சிறுவர்களுக்கான இதழ் என்பது குறிப்பிடத்தக்கது. மாத இதழான ‘பாலியர் நேசன்’ அமைப்பில் பத்திரிகையாக இருந்தாலும் ஒரு சஞ்சிகைக்குரிய இயல்புகளையே பெரிதும் கொண்டிருந்தது. பெருமளவு சிறுவர் கதைகளையும் அது வெளியிட்டது. அடிப்படையில் சிறுவருக்கு கிறித்தவ மதத்தை பரப்புரை செய்யும் நோக்கத்தை அது கொண்டிருந்தது.

1880களில் மேலும் பல பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் வெளியாகத் தொடங்கின. யாழ்ப்பாணச் செய்திகள் (1881), விஞ்ஞானவர்த்தினி (1882), சைவாபிமானி (1883), சன்மார்க்க போதினி (1885), இந்து சாதனம் (1889) என்பவையே அவையாகும்.


இவற்றில் உதயதாரகை, இந்து சாதனம், பாதுகாவலன் ஆகியவை நூற்றாண்டு தாண்டி வெளிவந்தன. இலங்காபிமானி 70 ஆண்டுகள் (1863-1933) வெளியானது. மாத இதழான ‘சன்மார்க்க போதினி’ சுமார் 45 ஆண்டுகள் வரை வெளியானது.

பத்திரிகைகள் அதிகரிக்க, அவற்றுக்கான அச்சகங்களும் அதிகரித்தன. யப்னா பிறிமன், இலங்கை நேசன், இந்து சாதனம் போன்ற பத்திரிகைகள் அவற்றுக்கான தனியான அச்சகங்களைக் கொண்டிருந்தன. இந்த அச்சகங்களில் குறித்த பத்திரிகைகள் தவிர பல்வேறு பிரசுரங்களும், நூல்களும் பிரசுரமாகி வந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க மிசன், வெஸ்லியன் மிசன், சேர்ச் மிசன், அங்கிலிக்கன் மிசன் எனப் பல மிசனரிகள் பெருமளவு பாடசாலைகளை நிறுவிக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தன. மிசனரிச் செயற்பாடுகளுக்கு எதிராக சைவசமயக் கல்வி முயற்சிகளும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றன. இந்தச் சமயப்போட்டி காரணமாக யாழ்ப்பாணத்தில் எழுத வாசிக்கத் தெரிந்த பெரிய தலைமுறை ஒன்று உருவாகி வந்தது. அவர்களது கல்வி, வாசிப்புத் தேவைக்கான நூல்களும் பத்திரிகைகளுமாக யாழ்ப்பாணப் பதிப்புத்துறை தொடர்ந்து விரிவடைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல அச்சகங்கள், சில பதிப்பகங்கள், தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருந்த பத்திரிகைகள், பெருமளவு நூல்கள் என யாழ்ப்பாணப் பதிப்புத்துறை விரிவான வளர்ச்சியை எட்டியிருந்தது.

# சொற்சிலம்பம் போட்டி 11




அனுப்புபவர் பெயர்:.......................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..................................................................
கையொப்பம்:...................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. ஐயப்பன் உறையும் இடம் 5. நெருப்புக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்புண்டு. 6. நெருப்பில் எரிந்த பின் இது எஞ்சும். 7. ஒரு பட்டம். 9. வாசிப்புப் பழக்கம் கைவரப்பெற்றவன். 11. ஈகை. 12. சிறிய கற்களை இப்படி அழைப்பர். 13. பாத்திரம். 14. இரத்தல் 17. தீவிரவாதிகள் பலரை இப்படியும் வைத்திருப்பார்கள். 18. விழி 19. ரூபாவில் நூறு. 20. பக்குவம் செய். 22. நெஞ்சு 23. தேசியமற்றது.

### மேலிருந்து கீழ்

1. நெருக்கமான தொடர்பு 2. சிறிய மிதவை 3. புத்திரன் 4. உலகப் புகழ்பெற்ற காதலி. 5. செய்தி. 8. தளம்பாத உறுதித்தன்மை 10. திருமணம் 13. காஞ்சிபுர ஈசன். 15. கழித்தல் குறி. 16. கடக்கும். 17. அரிசி இல்லாத நெல். 18. பழுக்க 19. தவிலிசைப் போட்டி. 21. ஒற்றையைச் சுட்டுவது

**சொற்சிலம்பம் போட்டி 09 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**
1.கோமேதகம் 5. உதி 7. பல்வலி 08. சயன 09. உகரம் 10. பாதகமலம் 12. அகல்தல் 13.பாதை 15.கல் 16.உய்ய 17.தாபரித்தல் 18.தியாகம் 19.தில்

**மேலிருந்து கீழ்**
1.கோபம் 2.மேல் 3.தவழ்தல் 4.கலி 5.உயரம் பாய்தல் 6.தினம் 8.சகல 9.உமல் 10.பாகல் 11.கதம்பம் 12.அகத்தி 14.தையல் 16.உத்தி 17.தாக

**சொற்சிலம்பம் போட்டி இல.11**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**11.09.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 09 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**சி. பாலசுந்தரம்**
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்

**2 ஆம் பரிசு**
**செல்லத்தம்பி உதயன்**
சமூக சேவை திணைக்களம்,
முல்லைத்தீவு

**3 ஆம் பரிசு**
**க.சாந்தலிங்கம்**
கீர்த்தி பல்பொருள் வாணிபம்,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

**4 ஆம் பரிசு**
**த. சிவநேசம்**
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி

**5 ஆம் பரிசு**
**நா. சிவதாசன்**
இல. 114, கிராம விஸ்தரிப்பு திட்டம்,
திருநெல்வேலி, கோப்பாய்.

இதுவரை பரிசு பெற்றோருக்கு பரிசில்கள் விரைவில்...
உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு 0773165555 தொடர்பு கொள்ளவும்.



# புல்லாங்குழல்

வீணா, வேணு, மிருதங்கம் எனக் கூறப்படும் வாத்தியத்தில் இரண்டாம் இடத்தை புல்லாங்குழல் வகிக்கின்றது. இவ்வாத்தியம் முரளி, வேணு என்ற வடமொழிப் பெயர்களாலும் குழல் என்னும் தமிழ்ச்சொல்லாலும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாத்தியம் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. கிருஷ்ண பரமாத்மா இவ்வாத்தியத்தை வாசித்ததாகக் கூறப்படுகின்றது. இது மிகப் பழங்காலத்திலிருந்தே மனிதனின் பாவனைக்கு வந்த வாத்தியமாகும். மூங்கிற் காடுகளிலே வண்டுகளால் துளை செய்யப்பட்ட மூங்கிற் கம்புகளினூடே காற்று நுழைந்து அத்துவாரங்களினின்றும் நாதஒலி வெளிப்படுவதை மனிதன் கேட்டான். இவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு புல்லாங்குழல் என்னும் வாத்தியத்தை உருவாக்கினான்.

புல்லாங்குழலானது, ஒரே அளவான உருளை வடிவமான ஒரு குழாயாகும். இது சுமார் 15 அங்குல நீளமும் முக்கால் அங்குல விட்டமுடைய குழாயாகும். இதன் ஒரு முனை மூடப்பட்டும் மற்றொரு முனை திறந்தும் இருக்கும் மூடப்பட்ட முனையிலிருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் அமைந்துள்ளது. இதற்கு ஊதுதுவாரம், முகரந்திரம் எனப் பெயர். துவாரத்திற்கு நேர்கோட்டில் ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஊதும் துவாரத்தைக் காட்டிலும் சற்றுச் சிறியனவாக இருக்கும். ஊதும் துவாரத்திற்கு நெருங்கியுள்ள துவாரம் தான் மிக உயர்ந்த ஸ்ருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்குவதாகும். இது தாராந்தரம் என வழங்குவதாகும். புல்லாங்குழல் செய்வதற்கு தந்தம், சந்தனமரம், ஏக்தசந்தனம், எபொனி, கதிரமரம், கருங்காலி போன்றவைகள் உபயோகப்படுகின்றன. ஆயினும் மூங்கில் மரத்தால் செய்யப்பட்ட குழலே மிகச் சிறந்தது.

**தர்சினி ஞானேந்திரன்,**
கம்ஷபிரியா இசைக்கல்லூரி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.


# பிஞ்சு தூரிகைகள்



**கேதீசன் அக்ஷிதா**
யா/ சுண்டுக்குளி,
மகளிர் கல்லூரி.
தரம்– 2A



**நி. ரதீசன்**
யா/ கொ.இ.ஆ.பாடசாலை,
தரம்– 2
அங்கத்துவ இல.43



**நி.ஹரிசாலன்**
யா/ கொ.இ.ஆ.பாடசாலை,
தரம்– 4
அங்கத்துவ இல.40

# வித்துவான் பதில்கள்



**1**

**என் காதலி தொட்டதற்கெல்லாம் அடிக்க வருகிறாள். என்ன செய்யலாம்**

த.பிரணவரூபன், கொல்லங்கலட்டி

நீங்கள் எங்கே தொட்டீர்கள்?



**2**

**அழகு என்றால் என்ன?**

சி.துளசி, மல்லாகம்

அழகு என்பதற்குப் பலவிதமான வரைவிலக்கணங்கள் உள்ளன. எது இரண்டாம் தரம் திரும்பிப்பார்க்க வைக்கிறதோ அது அழகு என்பது ஒருசாரார் கருத்து. உரையாசிரியரான பேராசிரியர்... "கண்டலும் கற்பனை அனுபவமும்தான் அழகு" என்றார். புரியவில்லையா? அமலாபால் நல்ல அழகி என்று சொல்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அமலாபாலை முழுமையாகப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையே! பார்த்த பகுதிகளை வைத்துக் கொண்டு பார்க்காத பகுதிகளும் இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை செய்கிறீர்கள் அல்லவா? அதுதான் பேராசிரியர் கருத்து



**3**

**மாதர், மதர் வேறு வேறு மொழிச்சொற்கள் ஆனாலும் ஏறத்தாழ ஒரே கருத்தைத் தருகின்றனவே?**

தா.கிஷாந்(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

மாதரிற்குக் காலை(ா) விட்டால் மதர்



**4**

**முதியவர்கள் சிலர் செய்யும் பாலியல்ரீதியான செயற்பாடுகள் எல்லோருக்கும் இழிவை அல்லவா ஏற்படுத்துகின்றன?**

க.வல்லிபுரநாதன், மிருசுவில்

நீங்கள் சொல்லும் அந்தச் சிலரைத் "தள்ளாத வயதினர்"என்று சொல்ல முடியாது போலுள்ளதே!

**5**

**ஐ.தே.கவுக்குள் என்ன பிரச்சினை? பெரிய பிரச்சினையாக இழுபடுகிறதே?**

க.பூரணி நிலாவரை.

பெரிய பிரச்சினை இல்லை, 'சின்னப்'பிரச்சினை.

**6**

**பெரியவர்கள் மனம் வருந்திச் சாபம் போட்டால் அது பலிக்குமா?**

க.சாரங்கா, மட்டுவில்.

வண்ண்ததுப்பூச்சி விளைவு(Butterfly effect)என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?எட்வேட் லோறன்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்ட கோட்பாடு இது. எந்த ஒரு சிறிய செயற்பாடும் காலம் இடம் என்பவற்றைக் கடந்து செல்லும்போது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அவர் கருத்து "பிரேசில் நாட்டில் பறந்து கொண்டிருக்கும் ஓர் வண்ணத்துப் பூச்சியின் சிறகின் படபடப்பினால் ஏற்படும் சலசலப்பிற்கும், டெக்ஸாஸில் ஏற்படும் சூறாவளிக்கும் தொடர்பு உண்டு என அவர் கூறினார்.

வண்ணத்துப்பூச்சியின் சிறகசைப்பே பாதிப்புக்களை உண்டாக்கும்போது பெரியவர்களின் வார்த்தைகள் சும்மாவிட்டுவிடுமா?

**7**

**என்னதான் மோட்டார் சைக்கிள், கார் என்று ஆடம்பரமாகத் திரிந்தாலும் சின்ன வயதில் சைக்கிள் ஓடிய சந்தோசம் கிடைக்க வில்லையே?**

த.கோபிசங்கர், தாவடி

நீங்கள் மட்டுமா? திருமணம் செய்த சிலரும் கூடச் சின்னவயதில் சைக்கிள் ஓடிய சந்தோசம் பெரிதாகத் தெரிவதாகச் சொல்கிறார்கள்.

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...

எழுதி அனுப்புங்கள்

**வித்துவான் பதில்கள்**

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# வசீகரத் தோற்றத்துடன் கை, கால்கள் மிளிர...

- கை, கால் முட்டிகளில் காணப்படும் கருமையை நீக்க தொடர்ந்து இந்தப் பகுதிகளில் எலுமிச்சப்பழச் சாற்றைத் தேய்த்து வர நாளடைவில் கருப்பு நிறம் மறைந்து விடும்.
- கைகள் மற்றும் கால்கள் மென்மையுடன் காணப்பட ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளிலும் கால்களிலும் தேய்த்துக் கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், உள்ளங்கைகள் மற்றும் கால்களின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.
- வாரத்திற்கு இரண்டு முறை அல்லது தினமும் இளநீரை கை, கால்களில் தடவி ஊற விட்டுக்கழுவி வர, விரைவில் கை, கால்களில் உள்ள கருமை நிறம் நீங்கும்.
- தயிரை கை, கால்களுக்கு தினமும் தடவி வர, கருமை நீங்குவதுடன் சரும வறட்சியும் நீங்கும்.
- தக்காளியை அரைத்து அதனை கை, கால்களில் தடவி ஊற விட்டு, பின்னர் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வருவதன் மூலம், சரும நிறத்தை மேம்படுத்தலாம்.
- பாதங்களில் வெடிப்பிருந்தால் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பெடிக்யூர் செய்து கொள்ளலாம். சொரசொரப்பான கற்களைக் கொண்டு பாதங்களைத் தேய்த்துக் குளித்து வந்தாலோ அல்லது ஸ்கிரப் பயன்படுத்தினாலோ உங்களது பாதங்களில் உள்ள இறந்த செல்கள் புதுப்பிக்கப்படும். பாதமும் மென்மையாக இருக்கும். அத்துடன் பாதத்தில் உள்ள வெடிப்பு நீங்க விளக்கெண்ணை ஒரு ஸ்பூன், பன்னீர் இரண்டு ஸ்பூன், எலுமிச்சம் சாறு ஒரு ஸ்பூன் ஆகிய மூன்றையும் கலந்து வெந்நீரில் பத்து நிமிடம் கால்களை ஊறவிட்டு, பின்பு இக்கலவையைப் பூசிவர வெடிப்புகள் நீங்கும்.
- பாதங்களுக்கு உப்பு, ஷாம்பூ, எலுமிச்சம் பழச்சாறு கலந்த வெந்நீரில் கால்களை ஊற வைத்துக் கழுவலாம். இதனால் பாதங்கள் சுத்தமாக இருக்கும். பாதங்களில் உள்ள அழுக்குகள் மற்றும் நகங்கள் சுத்தமாகும். கால்களுக்கு இதமாகவும் இருக்கும்.



# இறால் புரியாணி

சுத்தமாக்கிய இறால் : 1 கிலோகிராம்
பிரியாணி அரிசி : 1 கிலோகிராம்
தக்காளி : 8
பெரிய வெங்காயம் : 4
உருளைக்கிழங்கு : 4
தயிர் : 2 கோப்பை
றம்பை இலை : 4
நெய் : 400 கிராம்
கரம் மசாலா தூள் : 2 மேசைக் கரண்டி.
கொத்துமல்லித் தழை : சிறிதளவு
புதினா : சிறிதளவு
கேசரி பவுடர் :அரைத் தேக்கரண்டி.
குங்குமப்பூ : கால் தேக்கரண்டி.
மசாலா பொருள்கள்
பூண்டு12 பல், இஞ்சி1 துண்டு, தனியா2 மேசைக் கரண்டி, மிளகாய் வற்றல்15, சீரகம்1 தேக்கரண்டி, மஞ்சள் தூள்அரைத் தேக்கரண்டி, உப்புதேவையான அளவு.


தயாரிக்கும் முறை

முதலில் மசாலாப் பொருள்கள் அனைத்தையும் சேர்த்து நீர் தெளித்து விழுதாக அரைத்துக் கொள்ள வேண்டும். பிரியாணி அரிசியை அரைப்பதமாக வேகவைத்துக் கொள்ளுங்கள். கேசரி பவுடரை நான்கு மேசைக்கரண்டி அளவு தண்ணீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். வெங்காயம் மற்றும் தக்காளி என்பனவற்றை சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ள வேண்டும். உருளைக்கிழங்கைத் தோல் சீவித் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளுங்கள்.

அடுப்பில் இருப்புச் சட்டியை வைத்து பாதி நெய்யை ஊற்றி அது உருகிக் காய்ந்ததும் வெங்காயம், றம்பை இலை ஆகியவற்றைப் போட்டு வதக்கிக்கொண்டு அரைத்த மசாலாவைச் சேர்த்து நன்கு வதக்க வேண்டும். பிறகு உருளைக்கிழங்குத் துண்டுகளைப் போட்டு நன்றாகக் கிளறிவிட்டு வேகவிடுங்கள். பின்னர் தக்காளியையும் போட்டுக் கிளறி விடுங்கள். உருளைக்கிழங்குத் துண்டுகள் நன்கு வெந்ததும் இருப்புச் சட்டியை அடுப்பிலிருந்து இறக்குங்கள்.

ஒரு பாத்திரத்தில் தயிரை ஊற்றி நன்றாக அடித்துக்கொண்டு கொத்தமல்லி இலையையும், புதினாவையும் நறுக்கிப் போடுங்கள். குங்குமப்பூ, உப்பு, கரம் மசாலாத் தூள் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கலக்கி இறக்கி வைத்திருக்கும் இருப்புச் சட்டியில் அப்படியே கொட்டுங்கள். பின்னர் இறாலைப் போடுங்கள். அவற்றின் மீது பாதி அவிந்த புரியாணி அரிசியைப் போடுங்கள்.

மீதமிருக்கும் நெய்யையும் சூடாக்கி மேலே ஊற்றி, கேசரிப் பவுடர் கரைசலைத் தெளித்து இருப்புச் சட்டியை மீண்டும் அடுப்பில் வைத்து வேகவிடுங்கள். ஒரு தட்டால் மூடி வையுங்கள். எல்லாம் நன்கு வெந்ததும் அடுப்பிலிருந்து இறக்கிப் பரிமாறுங்கள்.




அறிவியல் தொடர் 4

# கடவுளும் சாத்தானும்...

ராஜ் சிவா

இதைப் படிக்கப்போகும் உங்களை நினைக்கும்போது, எனக்கே பரிதாபமாகத்தான் இருக்கிறது. எழுதிக் கொண்டிருக்கும்போது, நானே ஒரு இயற்பியல் வகுப்பில் அமர்ந்துகொண்டு குறிப்பெடுப்பதுபோலத் தோன்றியது. படிக்கப்போகும் உங்களின் நிலை இன்னும் மோசமாகவே இருக்கும். ஆனாலும், இந்தப் பகுதியில் சொல்லியிருப்பவற்றைப் பேசியே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. அதனால், மிகவும் நிதானமாகப் படித்துத் தெளிவு பெறுங்கள். புரியாவிட்டால் மீண்டும் மீண்டும்...!

தரப்பட்டிருக்கும் படங்கள் மிகமுக்கியமானவை. அவற்றைப் பார்த்தும் தெளிந்து கொள்ளுங்கள். நக்கலும், நையாண்டியுமாக ஏதோ மர்மக் கதை சொல்வதுபோல வாராவாரம் சஸ்பென்ஸ் வைத்து, இந்தக் கட்டுரை எழுதப்படுகிறதாக நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள். ஆனால், நவீன இயற்பியலின் மிகமுக்கியமான, சிக்கலான, புரியக் கடினமானதொரு அறிவியலைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தொடருங்கள். தொடர்வதற்கு முன்னால், எதிர்த்துகள்கள், நேர்த்துகள்கள் என்றதும், எதிரேற்றம் (negative charge) கொண்ட துகள்களையும், நேரேற்றம் (positive charge) கொண்ட துகள்களையும் குறிப்பிடுவதாகச் சிலர் புரிந்து கொள்கிறார்கள். அதாவது, எலெக்ட்ரோன் போன்றவற்றை எதிர்த்துகள்களெனவும், புரோட்டோன் போன்றவற்றை நேர்த்துகள்கள் எனவும் சொல்வதாக நினைத்துக் கொள்கிறார்கள். அது அப்படியல்ல. நான் பயன்படுத்தும் வார்த்தைகளின் அர்த்தங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளுங்கள்.

**துகள்கள் உருவாக்கிய உலகம்**

இந்தக் கட்டுரையில் எதிர்த்துகள் என்று சொல்லப்படுபவை, 'அன்டி' (anti) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கானவை. நம்முன்னே முடிவிலியாக விரிந்திருக்கும் பேரண்டம் முழுவதும் காணப்படும் உடுக்கள் (நட்சத்திரங்கள்), உடுதிரள்கள் (காலக்சிகள்) போன்ற அனைத்துப் பொருட்களும், இந்தத் துகள்களாலேயே உருவானவை. அதனால், பேரண்டத்தை உருவாக்கிய துகள்கள் அனைத்தையும், நேர்த்துகள்கள் என்று எடுத்துக் கொள்கிறோம். நேர்த்துகள்கள் மூன்று வகையாக இருக்கின்றன.

1. நேரேற்றம் கொண்ட நேர்த்துகள்கள்.
2. எதிரேற்றம் கொண்ட நேர்த்துகள்.
3. ஏற்றமற்றுப் பூச்சிய ஏற்றம் கொண்ட நேர்த்துகள்கள்.

இந்த மூன்று வகையான துகள்களுக்கும் எதிரான துகள்களையே, எதிர்த்துகள்கள் (anti particles) என்கிறோம். என்ன குழப்பமாக இருக்கிறதா? சரி சின்ன உதாரணத்தைப் பாருங்கள். இங்கு நான் சொல்லப்போவது எல்லாம் நீங்கள் சின்ன வயதில் படித்தவைதான். அதனால், மனதைத் தளரவிடாமல் படியுங்கள். ஒரு புரோட்டோனைப் பாருங்கள். ஒரு புரோட்டோனின் எடையை 1 எனவும், அதன் ஏற்றத்தை (charge) +1 எனவும், ஒரு அளவீட்டுக்காக எடுத்துக் கொள்கிறார்கள். இந்தப் புரோட்டோனைச் சார்பாக வைத்துக்கொண்டே, அனைத்துத் துகள்களின் எடையையும், ஏற்றத்தையும் அளவிடுகிறார்கள். புரோட்டோனின் சார்பாக ஒரு எலெக்ட்ரோனின் எடை 0.0005 ஆகவும், ஏற்றம் 1 ஆகவும் இருக்கிறது. இதிலிருந்து எலெக்ட்ரோனும், புரோட்டோனும் எதிர் எதிர் ஏற்றங்களைக் கொண்டிருந்தாலும், எடையில் சமமற்றவை எனத் தெரிகிறது. அதுபோல, ஒரு நியூட்ரோனை எடுத்தால், அதன் எடை 1 ஆகவும், ஏற்றம் 0 ஆகவும் இருக்கும். இப்போதும், எடைக்கு எடை சமமாகப் புரோட்டோனும், நியூட்ரோனும் இருந்தாலும், ஏற்றத்தால் அவை சமமானவை அல்ல என்று புரிகிறது. இந்த மூன்று துகள்களுமே நேர்த்துகள் என்றே வகுத்துக் கொள்கிறோம். காரணம் இவற்றினாலேயே அண்டத்திலுள்ள அணுக்களும், பொருட்களும் உருவாகியிருக்கின்றன. எலெக்ட்ரோன், புரோட்டோன், நியூட்ரோன் ஆகிய மூன்று துகள்களுக்கும் எதிர்த்துகள்கள் (anti particle) உண்டு. ஒரு புரோட்டோனின் எதிர்த்துகளான எதிர்ப்புரோட்டோன் (anti proton), எடை, தன்மை போன்ற அனைத்து வகைகளிலும் புரோட்டோன்போலவே இருக்கும். ஆனால், அதன் ஏற்றம் (charge) மட்டும் புரோட்டோனின் ஏற்றத்துக்கு எதிராக இருக்கும். அதாவது, 1 என்னும் ஏற்றத்தைக் கொண்டிருக்கும். சரியாகக் கவனியுங்கள், 1 என்பதால் இது எலெக்ட்ரோன் கிடையாது. இது வேறு. தனித்துவமானது. இந்த எதிர்ப் புரோட்டோனையே, டான் பிரவுன் எழுதித் திரைப்படமாக வெளிவந்த 'Angel and Demon' படத்தில், 'அன்டி மாட்டர்' (anti matter) எனக்குறிப்பிட்டு அழிவுக்கான பொருளாகக் காட்டுகிறார்கள். புரோட்டோனுக்கு எதிராக எதிர்ப்புரோட்டோன் இருப்பதுபோல எலெக்ட்ரோனுக்கும், எதிர் எலெக்ட்ரோன் உண்டு. அதைப் பொசிட்ரோன் (Positron) என்னும் சிறப்புப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்தப் பொசிட்ரோனுக்கு ஏற்றம் மட்டும் +1 ஆக இருக்கும். ஏற்றத்தில் மட்டும் இது எலெக்ட்ரோனுக்கு எதிரானதாக இருக்கும். இதுபோலவே, நியூட்ரோன்களுக்கும் எதிர் நியூட்ரோன்கள் (anti neutron) உண்டு.

**புரியாத புதிர்**

இங்குதான் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. இதைத்தான் பலர் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுகிறார்கள். நியூட்ரோனுக்குத்தான் ஏற்றமே கிடையாதே! பூச்சிய ஏற்றமுடைய ஒரு துகளுக்கு எப்படி எதிரான ஏற்றமுள்ள இன்னுமொரு துகள் இருக்க முடியும்? 0 என்பதே இல்லையே! அப்படியென்றால், எதிர் நியூட்ரோன் என்பது என்ன? அதுபோல ஒன்று கிடையாதா? இந்தத் தொடரின் ஆரம்பப் பகுதியில் நான் சொல்லியிருக்கும் ஒரு கருத்தை நீங்கள் நிச்சயம் மறந்திருப்பீர்கள். "எலெக்ட்ரோன் என்பது ஒரு அடிப்படைத் துகள். ஆனால், நியூட்ரோனும், புரோட்டோனும் அடிப்படைத் துகள்களல்ல" என்று முதலாவது பகுதியில் அல்லது இரண்டாவது பகுதியில் சொல்லியிருப்பேன். துகள்களுக்கும், அடிப்படைத் துகள்களுக்கும் சிறிய வித்தியாசமுண்டு. ஒரு அணுவைப் பிரித்துப் பார்த்தால், அதனுள் நியூட்ரோன், எலெக்ட்ரோன், புரோட்டோன் என்னும் மூன்று துகள்கள் இருப்பது தெரிய வரும். இதில் எலெக்ட்ரோனை எடுத்து, அதை மேலும் பிரிக்க முயன்றால் முடியவே முடியாது. பிரிக்கப்பட முடியாத கடைசி நிலையுள்ள நுண்துகள் எலக்ட்ரோன். அதனால், எலெக்ட்ரோனை அடிப்படைத் துகள் (elementary particle) என்கிறார்கள். மேலும் பிரிக்க முடியாத நுண்துகள்களை அடிப்படைத் துகள்கள் என்கிறார்கள். ஆனால், புரோட்டோனை யும், நியூட்ரோனையும் பிரிக்க முடிந்தது. அவை இரண்டும் இருவேறு நுண்துகள்களால் உருவாக்கப்பட்டிருந்தன. ஆம்! புரோட்டோனும், நியூட்ரோனும், குவார்க் (quarks) என்னும் நுண் துகள்களால் உருவாக்கப்பட்டிருந்தன. இந்தக் குவார்க்குகளை மேலும் பிரிக்க முடியவில்லை. எனவே, குவார்க்குகளும் அடிப்படைத் துகள்களாகின்றன. குவார்க்குகளில் ஆறு வகைகள் உள்ளன. அவற்றில் மேல்க்குவார் (up quark), கீழ்க்குவார்க் (down quark) என்னும் இரண்டு வகைகளினால் நியூட்ரோனும், புரோட்டோனும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு புரோட்டோனில், இரண்டு மேல்க்குவார்க்குகளும், ஒரு கீழ்க்குவார்க்கும் இருக்கும். ஒரு நியூட்ரோனில், இரண்டு கீழ்க்குவார்க்குகளும், ஒரு மேல்க்குவார்க்கும் இருக்கும். இதுவே புரோட்டானுக்கும், நியூட்ரோனுக்குமான வேறுபாடு.



**பிரிக்கலாமா? பிரிக்க முடியாதா?**

எலெக்ட்ரோன் என்னும் அடிப்படைத் துகளுக்கு எதிர்த் துகள்கள் இருப்பதுபோல, குவார்க் என்னும் அடிப்படைத் துகள்களுக்கும் எதிர்த்துகள்கள் இருக்கின்றன. மேல்க்குவார்க்குக்கு, எதிர் மேல்க் குவார்க் (anti up quark) என்னும் எதிர்த்துகள் உண்டு. அதுபோலக் கீழ்க்குவார்க்குக்கு, எதிர் கீழ்க்குவார்க் (anti down quark) என்னும் எதிர்த்துகளும் உண்டு. நியூட்ரோனின் ஏற்றம் பூச்சியமாக இருந்தாலும், 2 எதிர் கீழ்க்கு வார்க்கினாலும், 1 எதிர் மேல்க்குவார்க்கினாலும் உருவாவது, எதிர் நியூட்ரோன் ஆகிறது. புரிந்திருக்கு மென்று நம்புகிறேன். புரியாவிட்டால் சொல்லுங்கள், இத்துடன் நிறுத்திவிடலாம். நம் பாட்டுக்குத் திரிஷா, திவ்யா என்று வேறு பார்த்துக் கொள்ளலாம். எலெக்ட்ரோன்கள், குவார்க்குகள் போல, நியூட்ரீனோக்கள், ஹிக்ஸ் போஸான்கள், குளூவான்கள், போட்டோன்கள், மியூவான்கள் என்னும் பல அடிப்படைத் துகள்கள் இருக்கின்றன. நாம் இன்னும் அறிந்துகொள்ளவே முடியாத கரும் ஆற்றல், கருந்துகள்கள், கிராவிட்டான்கள் போன்ற துகள்களும் அடிப்படைத் துகள்களே! இந்த அடிப்படைத் துகள்களை வைத்து, ஒரு அட்டவணை தயார் செய்திருக்கிறார்கள். இன்னும் கண்டுபிடிக்கப்படாத எத்தனையோ அடிப்படைத் துகள்களும் இருக்கின்றன. "அடிப்படைத் துகள்களை மேலும் பிரிக்க முடியாதா?" என்னும் கேள்வி உங்களுக்கு வரலாம். 'ஆம்! பிரிக்க முடியும்'. அவற்றைப் பிரித்துப் பார்த்தால், ஆர்ப்பரிக்கும் அலைகள் கொண்ட கடல் மேற்பரப்புப்போல, மேலும் கீழுமாய் இயங்கும் புலத்தைக் (field) காணலாம் என்கிறார்கள். இதையே, 'குவாண்டம் புலக்கோட்பாடு' (quantum field theory) விவரிக்கிறது. அலையாகப் பொங்கும் புலத்தைக் 'குவாண்ட ஏற்றவிறக்கம்' (quantum fluctuation) என்பார்கள்.

**எப்படி நிகழ்ந்திருக்கும்?**

புரோட்டோனுக்கும், நியூட்ரோனுக்கும் உள்ளேயிருந்த மேல்க்குவார்க்கும், அதன் எதிர்க்குவார்க்குமே அண்டத்தின் முதல் அடிப்படைத்துகள்கள். இந்த இரண்டு துகள்களும் இணைந்து உருவான ஒருவகைப் பிளாஸ்மாக் கூழ்தான், இன்று நாம் பார்க்கும் அண்டத்தைப் பிறப்பித்த பிண்டம். அண்டம் முழுவதையும் நிரப்பியிருந்த இந்த இரண்டுவகைக் குவார்க்குகளும் ஒன்றுக்கு ஒன்று சமமான எண்ணிக்கையிலேயே இருந்தன. பின்னர், அவை ஒன்றுடன் ஒன்று மோதி, ஒன்றையொன்று அழித்துக் கொண்டன. சரியாகப் பார்த்தால் அவை அனைத்துமே அழிந்து போயிருக்க வேண்டும். ஆனால், நேர் மேல்க்குவார்க்குகளில் 4 சதவீதம் ஏதோவொரு காரணத்தினால் எஞ்சியிருந்தன. அவை எப்படி எஞ்சின என்பதற்கான பதிலை இயற்பியலாளர் ஒருவர் இப்படி விளக்குகிறார்.

"அண்டம் உருவாக்கத்தின்போது, இரண்டு துகள்களும் சம எண்ணிக்கையில் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அண்டத்தின் பிரதான விதியே, விதிவிலக்கு என்ற ஒன்று இருக்கும் என்பதுதான். அங்கிருந்த குவார்க்குகளில், பில்லியனுக்கு ஒன்றென, ஒரு நேர்க் குவார்க் அதிகமாக இருந்திருக்க வேண்டும். அதாவது, பில்லியன் எதிர்க் குவார்க்குகளும், பில்லியன் ஒன்று நேர்க் குவார்க்குகளும் உருவாகியிருக்கின்றன. இப்படி உருவானது ஒரு விதிவிலக்குத்தான். அதன்படி, பில்லியன் நேர்க்குவார்க்குகளும், பில்லியன் எதிர்க்குவார்க்குகளை அழித்துவிட, ஒரேயொரு நேர்க்குவார்க் எஞ்சியிருக்கும். இப்படி அண்டம் முழுவதும் நிறைந்திருக்கும் ட்ரில்லியன் கணக்கான குவார்க்குகளில் ஒவ்வொரு பில்லியனுக்கும் ஒரு நேர்க்குவார்க் எஞ்சியதால், உருவானதே இப்போதிருக்கும் நான்குசதவீத அண்டம்" என்று அந்த இயற்பியலாளர் விளக்கம் கொடுத்தார். இந்த விளக்கத்தையே பெரும்பான்மையான அறிஞர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், மூன்றாவதாகச் சொல்லப்படும் விளக்கம்தான் உங்களை ஆச்சரியப்படுத்தப் போகிறது. அது என்ன?

(தொடரும்)

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.






○ இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி 12

கடந்த வாரம், உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைக் கற்க விருப்பிருந்தும் வாய்ப்பற்ற மாணவர்கள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் பேச ஆரம்பித்திருந்தோம். அதில் குறிப்பாக தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. இன்றைய நாள் வேறு சில விடயங்கள் குறிப்பாக, குடும்பச் சூழ்நிலை விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்வதில் கொண்டுள்ள வகிபாகம் குறித்து ஆராய்வோம்.

**குடும்பப் பின்னணி விஞ்ஞான கல்விக்கு உடன்பாடத்தன்மை**

ஒரு மாணவனின் உயர்தரப் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் குடும்பப் பின்னணி மிக முக்கியமானது. குடும்பப் பின்னணியானது பல்வேறு வழிகளில் பாடத்தெரிவில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. பெற்றோரின்

## வடக்கின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவோம்

விழிப்புணர்வு அல்லது விழிப்புணர்வின்மை முக்கியமாகத் தாக்கம் செலுத்தும் காரணியாகும். பெற்றோர்களில் சிலர் விஞ்ஞானக் கல்வி குறித்து தவறான விளக்கங்களையும் அச்சங்களையும் கொண்டுள்ளனர். தமது பிள்ளையின் திறமையின் மட்டம் விஞ்ஞானக் கல்விக்கு ஈடுகொடுக்க இயன்றது அல்ல எனத் தாமாகவே முடிவெடுக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு முடிவெடுப்பதற்கு தமது வாழ்க்கைச் சூழலில் தாம் சந்தித்த விஞ்ஞானக் கல்வியில் தோற்றுப்போன சிலரை உதாரணமாகக் கொள்கின்றார்கள். அலுவலக நண்பரின் பிள்ளை, அயல்வீட்டுப் பிள்ளை, உறவுக்காரப் பிள்ளை என பெற்றோர்கள் தேடும் அல்லது சந்திக்கும் தோற்றுப்போனவர்கள் அவர்களுக்கு நெருக்கமான வட்டங்களில் உள்ளனர். இது பெற்றோருக்கு பெரும் அச்சவுணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த அச்சவுணர்வின் பாதிப்பு, தமது பிள்ளையின் எதிர்காலம் குறித்த ஏக்கம் என இரண்டும் சேர்ந்து பெற்றோர்களுக்கு விஞ்ஞானக் கல்வி குறித்த அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

எப்போதும் தமது பிள்ளைகளை வேறு பிள்ளைகளுடன் ஒப்பிட்டே பழகிப்போன எமது பெற்றோரின் மனநிலையை மாற்றுவது கடினமானது. அதிலும் ஏனைய விடயங்களில் தமது பிள்ளையை திறமையான இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிடும் பெற்றோர்கள் உயர்தரப் பாடத்தெரிவின்போதுமட்டும் தமது பிள்ளையைத் தோற்றுப்போன பிள்ளைகளு டன் ஒப்பிடுகின்றார்கள். இந்த முரண்நிலை மிக ஆபத்தானது. எமது சமூகத்தில் இத்தகைய முரண்நிலையை நீக்கத்தக்க பொறிமுறைகளை வகுக்கவேண்டும். அத்துடன் வடக்கு மைய சமூகச் சிந்தனை மட்டத்தில் விஞ்ஞானக் கல்வி என்பது மேல்தட்டு வர்க்கத்தினருக்கானது அல்லது மத்திய தர வர்க்கத்தினருக்கானது எனும் எண்ணம் வலுவாகவுள்ளது. இது எவ்வாறு உருவானது என்பது குறித்து ஆராய்வதெனில் அது இலங்கையின் கல்வி வரலாற்றுடன் நெருக்கியதாகவுள்ளது. விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்யும் பிள்ளைகளின் பெற்றோரின் பின்னணி குறித்து ஆராய்ந்தால் அவர்கள் ஓர் அரச உத்தியோகத்தராகவோ அல்லது நிரந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்தவராகவோ இருக்கின்றார்கள்.

நாளாந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் விஞ்ஞானக் கல்வியை தமக்கு உவப்பற்ற ஒன்றாகவே கருதுகின்றார்கள். கல்வியில் சமத்துவம் எனச் சிந்திக்கும் காலத்தில் சமூகத்தில் கல்வி தொடர்பாகவுள்ள இவ்வாறான பிற்போக்குத்தனமான சிந்தனைகளைச் செயலிழக்கச் செய்யவேண்டும். குடும்பத்தின் சூழ்நிலையை சமூக ஏற்றத்தாழ்வுகளை மாற்றும் வல்லமைமிக்க கருவி கல்வி.

அதிலும் விஞ்ஞானக் கல்விக்குள் தம்மை உட்புகுத்திக் கொள்வதன் ஊடாக சமூக அநீதிக்கட்டமைப்புக்களால் திணிக்கப் பட்ட ஒப்புரவு அற்ற விடயங்களில் இருந்து வெளியே வரமுடியும். இந்த விடயம் சமூகத்தில் அழுத்தமாக உள்வாங்கப்படவேண்டும். வடக்கின் விஞ்ஞானக் கல்வி முன்னேற்றத்துக்கு ஒரு சமூக மாற்றம் அவசியமாகத் தேவைப்படுகின் றது.

**குடும்பத்தின் மூத்த சோதரர்களின் விஞ்ஞானக் கல்வி தொடர்பான தோல்விகள்**

சில சந்தர்ப்பங்களில் குடும்பத்தின் மூத்த பிள்ளையின் விஞ்ஞானக் கல்வி தொடர்பான தோல்விகள் அல்லது பின்னடைவுகள் அவருக்கு இளைய சகோதரர்கள் விஞ்ஞானக் கல்வியைத் தெரிவுசெய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. பெற்றோர்களைப் பொறுத்தவரை மூத்த பிள்ளை விஞ்ஞானக் கல்வியில் சிறப்பெய்துவதற்காக பல அர்ப்பணிப்புக்களை செய்திருப்பார்கள்.

குறிப்பாக பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்குபடுத்துவது தொடக்கம் தனியார் கல்வி நிலையங்களுக்கு பிள்ளைகளை ஏற்றி இறக்குவது வரை என அவர்கள் தம்மை தமது பிள்ளையின் கற்றலில் முற்றாக ஈடுபடுத்தியிருப்பார்கள். கருதத்தக்க பொருளாதாரத்தையும் அதற்காக முதலிட்டிருப்பார்கள் அல்லது செலவழித்திருப்பார்கள். இந் நிலையில் மூத்த பிள்ளை பெற்றோர்கள் எதிர்பார்த்த அடைவைப் பரீட்சைப் பெறுபெறுகளில் குறிப்பாக, பொதுப் பரீட்சை அல்லது பல்கலைக்கழக அனுமதிக்கான பரீட்சையாகிய க.பொ. த உயர்தரப் பரீட்சையில் காண்பிக்காத நிலையில், பெற்றோர்கள் மிகுந்த மனச் சோர்வையும் மன உழைச்சலையும் அடைகின்றார்கள். இது தமது அடுத்த பிள்ளையை விஞ்ஞானக் கல்விக்கு அனுப்புவது தொடர்பில் தயக்கத்தைக் கொடுக்கின்றது. அதிலும் வடக்கு தமிழர் மனநிலை, விஞ்ஞானக் கல்வியைக் கற்கும் பிள்ளைகள் நிச்சயம் மருத்துவராகவோ அல்லது பொறியியலாளராகவோ வரவேண்டும் எனும் நிலைப்பட்ட மையால் அந்தக் கனவை மூத்த பிள்ளை அடையத் தவறும் பட்சத்தில் அடுத்த பிள்ளைகளில் அக் கனவுகளை ஏற்ற அவர்கள் தயங்குகின்றார்கள். மூத்த பிள்ளை மீது அதீத நம்பிக்கை கொண்டிருக்கும் உளவியல் மற்றும் மரபியல் பண்பின் காரணமாகவும் அவர்கள் இத்தகைய சோர்வு நிலையை அடைகின்றார்கள். இது தவறானது.

ஆனால் அதேவேளை மூத்த பிள்ளை மருத்துவராகவோ பொறியிலாளராகவோ தனது பயணத்தை ஆரம்பித்து விட்டால் அது நேர்த்தன்மையான உந்து விசையாகி ஏனைய பிள்ளைக ளும் விஞ்ஞானக் கல்வியில் சாதிக்க வாய்ப்பாகிவிடுகின்றது. பல குடும்பங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும். இதற்கு உரிய வழிகாட்டல் கற்றலுக்கான துணை வீட்டி னுள்ளே கிடைப்பதும் ஒரு காரணமாகலாம்.

ஒரு விடயத்தில் மாணவர்களும் பெற் றோர்களும் தெளிவாக இருக்க வேண்டும். யாரும் யாருக்கும் எந்த விதத்திலும் சமனானவர்களும் அல்லர். சளைத்தவர்களும் அல்லர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. இன்னொருவரின் தோல்வியை எமது தோல்விக்கான அறிகுறியாக நினைப்பது மிகவும் ஆபத்தானது. அண்ணனோ அக்காவோ விஞ்ஞானக் கல்வியில் சோபிக்கமுடியாது போய்விட்டது என்பதற்காக நீங்கள் சோபிக்க முடியாது எனும் எண்ணத்தை தூரவீசிவிட வேண்டும். வளமான எதிர்காலத்துக்கு வழிசெய்யும் விஞ்ஞானக் கல்வியில் குடும்பத்தின் தவறான முன்னுதாரணங்களை உதாரணங்களாக்கும் அல்லது விதி விலக்குகளை விதிகளாக்கும் பொய்மை நிலையில் இருந்து வெளிவருதல் மிகவும் அவசியமானது. இது குறித்து அனைவரும் ஆழமாகச் சிந்திப்போம். ■

> ஒரு விடயத்தில் மாணவர்களும் பெற்றோர்களும் தெளிவாக இருக்க வேண்டும். யாரும் யாருக்கும் எந்த விதத்திலும் சமனாணவர்களும் அல்லர். சளைத்தவர்களும் அல்லர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. இன்னொருவரின் தோல்வியை எமது தோல்விக்கான அறிகுறியாக நினைப்பது மிகவும் ஆபத்தானது. அண்ணனோ அக்காவோ விஞ்ஞாணக் கல்வியில் சோபிக்கமுடியாது போய்விட்டது என்பதற்காக நீங்கள் சோபிக்க முடியாது எனும் எண்ணத்தை தூரவீசிவிட வேண்டும்.





# யாரைத்தான் நம்புவதோ..?

\- மின்னல்

## திரை அரங்கு



கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளராக , தான் பார்த்த உத்தியோகத்தை விட்டு வந்தவரைப் பற்றித்தான் இப்போது எல்லாப் பக்கமும் கதை. ஒரு கட்சி அலுவலத்தில் இருந்துதான் இந்தக் கதை புறப்பட்டு, பின்னர் திணைக்களங்கள் ஊடாகவும் வெளிப்பட்டு, வேட்பாளரைச் சந்தி சிரிக்க வைத்திருக்கிறது.

அந்த வேட்பாளர் கூட்டமைப்பில் போட்டியிட, தன்னுடைய பணியில் இருந்து இடையிலேயே ஓய்வு பெற்றிருந்தார். ஆனால் அவரா தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. இதனால் பணியில் மீண்டும் இணைய நினைத்தார். ஆனால் அது அவ்வளவு சுலபமல்ல, அதனால் முன்னைய பழக்கத்தின் அடிப்படையில் யாழில் அமைச்சராக இருப்பவரிடம், தனது உறவினரான சுவிஸில் இருக்கும் ஒரு நபர் மூலம், தன்னை மீண்டும் பணியில் அமர்த்த உதவும்படி வேண்டியிருக்கிறார். அமைச்சரும் பார்க்கலாம் என்றிருக்கிறார்.

இதனையடுத்து அந்த வேட்பாளர் திணைக்கள மேலதிகாரிகளி சிலரிடம் " நான் அமைச்சரிடம் கதைத்துவிட்டேன். அவரும் சம்மதித்து விட்டார். அதனால் என்னைப் பணியில் இணைக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துங்கள்" என்று கோரிக்கை விடுத்திருப்பதாக , அந்தத் திணைக்கள வட்டாரங்கள் சத்தியம் பண்ணிச் சொல்கின்றன. இதுதான் கதை.

ஆனால் இப்படி ஒரு சம்பவம் நடக்கவேயில்லை என்று அடித்துக் கூறுகிறார் அந்த வேட்பாளர்.

" எனக்கு அந்த அமைச்சர் நல்ல பழக்கம்தான். முன்னர் அவரது அமைச்சின் கீழிருந்த திணைக்களத்தில் பணிபுரிந்ததாலேயே அந்தப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஆனால் எனது பணியில் மீண்டும் இணைய நான் திணைக்களத்திடம் தான் மீள விண்ணப்பித்திருக்கிறேனே தவிர அந்த அமைச்சரிடம் உதவி கேட்கவேயில்லை. நான் ஒரு தமிழ்த் தேசியக் கட்சியில் தேர்தலில் நின்றுவிட்டு, எனது வேலைக்காக எமக்கு எதிரணியில் இருக்கும் அந்த அமைச்சரிடம் உதவி கேட்டுப் போவேனா? அமைச்சரின் கட்சியில் இருக்கும் சிலர் எனது நண்பர்கள். அவர்களோடு நான் ஏதும் உரையாடியதை இப்படி திரிபுபடுத்தியிருக்கலாம்" என்று ஒரே போடாகப் போடுகிறார்.

யார் சொல்வதை நம்புவது?

# கட்டுப்படுத்துவது யார்?

அண்மைக்காலமாக அப்பாவிகளைப் போட்டு பொலிஸார் மிதிப்பது வடக்கில் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக கோத்தாபய ஆட்சிக்கு வந்த பின்னர் பொலிஸார் சட்ட திட்டங்களை மதிக்காமல் தம்மிஷ்டப்படி நடப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தமகு எதிராகக் கதைப்போரை பொய்க்குற்றம் சாட்டி, பொறுக்கிகள் போல பொலிஸார் மாறி அடித்து சித்திரவதை செய்யும் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறத் தொடங்கிவிட்டன. அதேபோல பொதுமக்கள் கொடுக்கும் முறைப்பாடுகள் தொடர்பிலும் பொலிஸார் கண்டும் காணாமலும் இருக்கும் போக்கும் தொடர்கின்றது. அண்மையில் வடமராட்சியில் ஒருவர் பிரதேச சபையின் அனுமதி பெற்று தனது காணி எல்லையில் மதில் ஒன்றைக் கட்டியுள்ளார். ஆனால் அன்றிரவே அது சிலரால் இடித்து வீழ்த்தப்பட்டது.

பதைத்துப் போன உரிமையாளர் உடனேயே வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். ஆனால் முறைப்பாடு செய்து ஒருவாரமாகியும் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் போகவே இல்லை. பொறுத்துப் பார்த்த உரிமையாளர் மீண்டும் பொலிஸ் நிலையம் சென்று சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு, விசாரணை செய்யும்படி வேண்டியுள்ளார்.

"நீங்கள் போங்க, பின்னால் வாறம்" என்று சொன்ன பொலிஸ் அப்போதும் வரவில்லை. எவ்வளவு காலம் தான் பொறுமை காக்க முடியும்? அதனால் மீண்டும் மதிலைக் கட்டி, அது காயும் மட்டும் காவல் இருந்து , அதன் பின்னரும் எவராவது அதனை ஊறு செய்கிறார்களா என்று கண்காணிக்க , 'சி.சி.ரீ.வி கமெராவையும்' பூட்டிவிட்டார் அந்தக் காணி உரிமையாளர். பொலிஸை நம்புவதை விட கமெராவை நம்பலாம் என்பது அவரது எண்ணம்.

இப்படி மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கச் செல்லாமல் இருப்பவர்கள், அப்பாவிகளைப் போட்டு அடித்து துவைப்பதை மட்டும் தவறாத பொழுதுபோக்காகக் கொண்டிருப்பதை தடுக்க யாருமில்லையா? என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

உரியவர்கள் காதில் அந்தக் குரல்கள் விழுமா?



# பேரனுக்கு வேலை கிடைக்குமோ?

## ஒரு கடுதாசி

*எல்லாருக்கும் வணக்கம்*

*நான் நல்ல சுகம். உங்கடை சுகம் எப்பிடி எண்டு கேக்க ஒரு மாதிரியாக் கிடக்கு. ஏனெண்டால், சூழ்நிலை அப்பிடியாய்க் கிடக்கு. எங்கும் அடிதடியும், ஒரே குழப்பமுமாக் கிடக்கு. அதை விடுங்கோ. ஒரு முக்கியமான விசயத்தை, விசேசமாப் பெடி, பெட்டையளுக்குச் சொல்ல வேணும் எண்டது என்ரை கடமை எண்டு நினைச்சுத்தான் இந்தக் கடுதாசியை எழுதிறன். ஆனால் அதை வாசிச்சிட்டு நீங்களும் அவருக்குப் பயந்து இதைப் போடாமல் விட்டுவிடாதையுங்கோ. அவர் வைச்சிருக்கிற கொம்பு பொய்க்கொம்பு எண்டது வடிவாத் தெரிஞ்சு போச்சுது. அதை அறியாமல் பொது சனம் ஏமாறப்படாது எண்டதுதான் என்ரை கரிசனை.*

*அது கிடக்கட்டும், இப்ப மூண்டு, நாலு நாளுக்குள்ளை எண்டு நினைக்கிறன். பேப்பரைப் பாத்தனான். ஒரு பக்கம் சிரிப்பு. மற்றப் பக்கம் வேதனை. ஒரு விசயத்தைச் செய்ய முன்னம் அதின்ரை தாற்பரியத்தை வடிவா விளங்கிக் கொண்டு, அதின்ரை அடி ஆழத்தை வடிவாத் தெரிஞ்சு கொண்டு செய்ய வேணும் எண்டதுக்கு ஒரு நல்ல விளக்கம், போன கிழமை ஜனாதிபதி தலைமையில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர்மாற்றை கூட்டம். அதிலை ஜனாதிபதி வடிவா எல்லாத்தையும் விளங்கப் படுத்தி ஆக்களை அனுப்பி இருக்கிறார். அவர் சுருக்கமாச் சொன்னது "தந்த வேலையை மட்டும் பாருங்கோ. தேவை இல்லாத வேலையெது வும் பாக்க வேண்டாம்." எண்ட விசயத்தைத்தான். மாட்டுக்குக் கொம்பு குடுத்திருக்கிறியள். ஏன் எனக்குத் தரேல்லை எண்டு குதிரை போய் கடவுளைக் கேக்கேலாது. கடவுளுக்கு வடிவாத் தெரியும் குதிரைக்குக் கொம்பு குடுக்கப்படாதெண்டு. அந்தக் கொம்பை வைச்சுக் கொண்டு தேவை இல்லா வேலை எல்லாம் குதிரை பாக்கும் எண்டும் அவருக்குத் தெரியும். ஆனால் குதிரை வாடகைக்கு ஒரு பொய்க் கொம்பொண்டை எடுத்துத் தலையிலை மாட்டிக் கொண்டு துள்ளிக் குதிச்சால் அதுக்கு கடவுள் பொறுப்புக் கிடையாது. துள்ளிக் குதிக்கிறவை எல்லாம் ஒரு நாளைக்கு அடங்கி ஆக வேணும் எண்டது விதி.*

*உண்மையா ஏன் இதை எல்லாம் எழுதிறன் எண்டால், முதலிலை எலக்சன் நேரத்திலை அவர் ஆடின ஆட்டம். அதைப் பாக்க, கோத்தபாய யாழ்ப்பாணத்தை அவருக்கு எழுதிக் குடுத்திட்டாரோ எண்டு நினைச்சன். பிறகு, தான் கூடின வோட்டை எடுத்திட்டன் எண்டவுடனை காய் நிலனச்சிட்டுதுபோலை , அதைப் பாத்திட்டு ஜனாதிபதி கூப்பிட்டு "குட் போய்" எண்டு சொல்லி, முதுகிலை தட்டி " நீ என்ன வேணும் எண்டாலும் யாழ்ப்பாணத்திலை செய்" எண்டு சொல்லுவார் எண்டு.*

*ஆனால், நான்நினைக்கிறன் போனமுறைக்கு முதல் நடந்த ஜனாதிபதி எலக்சனுக்குப் பிறகு இவர் அப்பக்காரருக்குப் பின்னாலை போனதை அவை ஞாபகம் வைச்சிருக்கினைபோலை கிடக்கு. அதாலை தான் அண்டைக்கு நடந்த கூட்டத்திலை பசில் " மூண்டு அறை கூடிப்போச்சுது. ஒருங்கிணைப்புக் குழுவுக்கு ஒரு அறை காணும்" எண்டு ஒரு பெருஞ் சூடு வைச்சவர் எண்டு நினைக்கிறன். எலக்சன் நேரத்திலை, வேலை வெட்டி கிடைக்கும் எண்டு நம்பி அவருக்குப் பின்னாலை முன்னாலை திரிஞ்ச பெடி, பெட்டையளைப் பாக்கப் பாவமாக்கிடக்கு.*

*என்ரை பேரன் பின்னாலை போகேக்கையே சொன்னனான் "போகாதையெடா. ஏமாறுவியள்" எண்டு. இப்ப அண்டைக்கு நடந்த கூட்டத்துக்குப் பிறகு அவர் எலக்சன் நேரத்திலை சொன்னதிலை அரைவாசி தன்னும் நடக்குமோ? எண்டது ஐமிச்சந்தான். மூண்டு அறை கேட்டதை ஒரு அறை ஆக்கினவங்கள். அவர் சொன்னதிலையும் மூண்டில் ஒரு பங்கைத்தானே செய்ய விடுவங்கள் போலை கிடக்கு. நடக்குமோ ? நடக்காதோ? எண்டு ஒருக்காக் கேட்டு மறுமொழி தருவியளே?*

**தாங்கள் மேல் அதி பட்சமுள்ள**
**அப்பாவி அன்னமுத்து.**

# மாமாவுக்காக மௌனவிரதம்




ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வகிக்கும் நவீன் திஸாநாயக்க எந்தவொரு விடயத்தையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவர்.அதுமட்டுமல்ல அரசியல் களத்தில் சமரென வந்துவிட்டால் வெற்றிக்காக இறுதிக்கட்டம் வரை தளராத துணிவோடு களமாடுவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் சபாநாயகருமான கருஜயசூரியவின் மகளையே நவீன் திஸாநாயக்க கரம்பிடித்துள்ளார்.அரசியலிலும் உறவுக்கு மதிப்பு - முன்னுரிமை வழங்கும் விதத்திலேயே அவர்களின் அரசியல் பயணம் அமைந்துள்ளது. குறிப்பாக 2018 ஒக்ரோபர் ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சியின்போது அப்போதைய எதிரணி உறுப்பினர்கள் சபாபீடத்தை முற்றுகையிட்டு கருஜயசூரியவை தாக்கமுற்பட்டபோது - முஷ்டியை முறுக்கிக் கொண்டு - முன்பாய்ந்து மாமாவை பாதுகாக்கும் முயற்சியில் மருமகனான நவீன் ஈடுபட்டமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது.

ஏழரைச் சனி பிடித்ததுபோல ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்னமும் தலைமைத்துவப்பிரச்சினை தலைவிரித்தாடிக்கொண்டுதான் இருக்கின்றது. புதிய தலைவர் யார் என்ற வினா எழும் நிலையில் அந்தப்பதவியைப் பெறுவதற்கு பலரும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

புதிய தலைவருக்கான பட்டியலில் நவீன் திஸாநாயக்கவின் பெயரும் இடம்பிடித்திருந்தது.தலைமைப்பதவியில் மாற்றம் வேண்டும் என ஆரம்பத்தில் பகிரங்கமாக அறிவிப்புகளை அவர் விடுத்து வந்தார். ஆனாலும் தற்போது அவர் மௌனம் காத்துவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் ஆட்சியை பிடிப்பதற்கான சாத்தியம் இருக்கும் என்பதை உணர்ந்துள்ள நவீன், ரணில் இருக்கும்வரை இது சாத்தியப்படாது என்பதால் கருவை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக்கி, சஜித் அணியுடன் இணைந்து பயணிப்பதற்கு திட்டம் வகுத்துள்ளார்.இதன்காரணமாகவே தலைமைப் பதவிக்கான போட்டியில் இருந்து அவர் தற்போது ஒதுங்கியுள்ளார்.

# தாவத் தயார்!



பொதுத்தேர்தலில் மண்கவ்விய அரசியல் பிரமுகர்கள் சிலர், மாகாணசபைத் தேர்தல் ஊடாக கரைசேர்வதற்கு திட்டம் வகுத்துவருகின்றனர்.இதன்படி மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளர் பதவியை அவர்கள் குறிவைத்துள்ளனர்.இதனை பெறுவதற்கான காய்நகர்த்தல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு முதல்வர் வேட்பாளர் பதவி வழங்கப்படாது என இரு பிரதான கட்சிகளும் உத்தியோகப்பூர்வமற்ற ரீதியில் அறிவித்துவிட்டால், அடுத்து என்ன செய்வதென தெரியாமல் குறித்த அரசியல் பிரமுகர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனராம்.



## அறிந்தும் அறியாமலும்

சுழியன்



# அடுத்த தலைவர் யார்?

இலங்கை அரசியல் வரலாற்றில் மக்கள் மத்தியில தேசிய உணர்வை விதைத்து, ஆட்சியைக்கைப்பற்றி அரியணையேறி வெற்றிநடைபோட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தற்போது வரலாறுகாணாத பின்னடைவைச் சந்தித்துள்ளது.

தேசிய மட்டத்தில் உதயமான பிரதான அரசியல் கூட்டணிகளுக்கு தலைமைத்துவம் வழங்கி 'தலைமை'க் கட்சியாக வலம்வந்த சுதந்திரக்கட்சி, இன்று மொட்டு கட்சியிடம் சரணடைந்து, பலம் இழந்துள்ள நிலையிலேயே 70ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் கொள்கை ரீதியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அந்தக்கட்சியிலிருந்து வெளியேறி 1951 செப்டம்பர் 2 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க உருவாக்கினார்.

56 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்தார்.அதன் பின்னர் 2018 ஆம் ஆண்டுவரையில் ஒன்று ஆளுங்கட்சி அல்லது பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலேயே அக்கட்சி இருந்துவந்தது. ஆனால் தற்போது நான்காம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவியில் விரைவில் மாற்றம் வரவுள்ளது எனவும், இளைஞர் ஒருவருக்கு வாய்ப்பளித்துவிட்டு மைத்திரிபால சிறிசேன ஆலோசகராகச் செயற்படுவார் எனவும் அறியமுடிகின்றது. ராஜபக்ச அணியில் இருந்து வெளியேறி தனித்து இயங்கினால் அதன்மூலம் சாதிக்க முடியும் என மைத்திரி எண்ணுகிறார். சஜித் தரப்புடன் கூட்டணிக்குகூட செல்லும் வாய்ப்பும் பிரகாசமாக உள்ளது.எது எப்படியோ இதில் எது நடக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# புரட்சிக்குத் தயாராகும் புதுமைப்பெண்



மலையக மக்கள் முன்னணியிலிருந்து அனுஷா சந்திரசேகரனை வெளியேற்றுவதற்கு அந்தக்கட்சியின் தேசிய சபை கடந்த வாரம் அனுமதி வழங்கியுள்ளது.கட்சி யாப்பைமீறும் வகையில் செயற்பட்டதாலேயே அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனவும் விளக்கமளிக்கப்பட்டது. தேசிய சபையின் இந்த தீர்மானத்தை நிராகரித்துள்ள அனுஷா சந்திரசேகரன், மக்கள் சக்தி தன் பக்கமே இருப்பதாகவும், கட்சியை கைப்பற்றுவது உறுதியெனவும் சூளுரைத்துள்ளார்.ஆனால் அதற்கான கால எல்லையை அவர் இன்னமும் விவரிக்கவில்லை.

பொதுத்தேர்தலில் தனித்து களமிறங்கி சுமார் 17 ஆயிரம் வாக்குகளைப்பெற்று தனித்துவத்தை உறுதிப்படுத்தியுள்ள அனுஷா சந்திரசேகரன்,வருகின்ற மாகாணசபைத் தேர்தலிலும் களமிறங்கும் அறிவிப்பை விடுத்துள்ளார்.இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவருக்கு மலையக மக்கள் முன்னணி 'கதவடைப்பு' செய்துள்ளது.

அனுஷாவுக்கும் முதல் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் வாய்ப்பு கிடைக்கவில்லை.எனினும், மாகாணசபைக்கான பிரதிநிதித்துவத்தை அவர் ஏறத்தாழ உறுதிப்படுத்திவிட்டார். மாகாணசபைத் தேர்தலில் இளைஞர்களை அணிதிரட்டி ஜனநாயகப் புரட்சியில் ஈடுபடுவதற்கு அனுசா சந்திரசேகரன் தற்போது தயாராகிவருகிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெஞ்சை பதறவைக்கும் அதிர்ச்சி ரிப்போர்ட் !



# ஹெரொய்ன் பிடிக்குள் கிளிநொச்சி!

உளவாளி

"பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த கிளிநொச்சி போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு இரகசியத் தகவலொன்று கிடைத்தது. போதைப்பொருள் குற்றங்கள் மலிந்து வழக்கமாகிவிட்டாலும், வந்த செய்தி பொலிஸாரை கொஞ்சம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கிடைத்த செய்தி இதுதான். "நான்கு மாணவர்கள் ஹெரோயினுடன் நிற்கிறார்கள்" நாட்டின் நாளைய எதிர்காலம் கண்முன்னே அழிவதை வேடிக்கை பார்க்க முடியுமா...? உடனடியாகவே களத்தில் இறங்கியது பொலிஸ் குழு . பாடசாலை ஒன்றின் வளாகத்துக்குள்ளேஅந்த நான்கு மாணவர்களும் போதை நுகர்வதற்கு தயாராகி நின்ற சமயம், பொலிஸ் குழு அவர்களைச் சுற்றிவளைத்துக் கைதுசெய்தது. அண்மைக்காலமாக, இந்தப் பாடசாலையின் மலசலகூடப்பகுதியில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாகச் சில தகவல்கள் பொலிஸாருக்கு ஏற்கனவே கிடைத்தி ருந்ததும், விரைந்து அவர்களை கைதுசெய்வதற்கு துணையாகவி ருந்தது. கைது செய்து விசாரித்த போது கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியொன்றைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்து 5000 ரூபா கொடுத்து நான்கு பக்கற்றுகளை அவர்கள் வாங்கியதும் தெரியவந்துள்ளது.

அண்மையில் ஊடகங்களில் வெளியான '4 மாணவர்கள் ஹெரோய்னுடன் கைது என்ற செய்தி தொடர்பாக பொலிஸ் தரப்பின் தகவலே மேலே தரப்பட்டுள்ளது. உண்மையாகவே கிளிநொச்சியில் என்னதான் நடக்கிறது என்று பலமுனைகளில் நாம் திரட்டிய தகவல்கள் கொஞ்சம் மிரள வைப்பதாகவே இருந்தன. நாம் தகவல் திரட்டியவர்களின் இரகசியத்தன்மையைப் பேணும் கடப்பாடு எமக்குண்டு. அதனால் இங்கு அவர்களை அடையாளப்படுத்தும் பெயர் உள்ளிட்ட விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

## "எல்லாம் தெரிந்தும் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம்"

### ஓர் ஆசிரியரின் வேதனை

மூன்று தசாப்தங்களைத் தாண்டிய ஆயுதப் போர் தமிழர் வாழ்வியலை புரட்டிப் போட்டிருக்கின்றது. எங்கும் வறுமை தாண்டவமாடுகின்றது. மீண்டும் தமிழர் வாழ்வு மெல்லத் தலைதூக்க முற்படும் சமயத்தில் அனைத்தையுமே தவிடுபொடியாக்கும் வண்ணம் தமிழர் வாழ்விடங்களில் போதைப்பொருள் பாவனை மெல்ல மெல்ல அதிகரித்து கபளீகரம் செய்ய நினைக்கின்றது. கண்ணுக்குத் தெரியாமல் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனை இன்று பாடசாலை மாணவர்கள் பலரையும் அடிமையாக்கி, அவர்களின் வாழ்வையும், குடும்பங்களை யும் அழிவின் விளிம்புக்குக் கொண்டு சென்றுள்ளது. போதைப் பொருள் பாவனையால் குற்றங்கள் பெருகுவது மட்டுமல்ல மாணவ சமுதாயத்தின் கல்வியும் வீழ்ச்சிய டைந்து வருகின்றது .

இதுபோன்ற சில விடயங்களை ஆசிரியர்கள் அறிந்தாலும் மாணவர்களை கண்டிக்க முடியாது. அப்படித் கண்டித்தால் மறு நாளே மாணவர்கள் பெற்றோருடன் பாடசாலைக்கு சண்டை பிடிக்க வருவார்கள். தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாமல் பெற்றோர்கள் ஆசிரியர்களோடு முரண்பட்டு குற்றம் சுமத்தி சட்டநடவடிக்கை வரை செல்வதால், சில ஆசிரியர்கள் , எல்லாவற்றையும் கண்டும் காணாதது போல ஒதுங்கிவிடுகிறார்கள். போதைப்பொருள் எனும் அழிவுப்பாதையில் விரைந்து செல்லும் இளைய தலைமுறையைத் தடுத்து நிறுத்தாது விட்டால், நம்மினம் யுத்தத்தால் சந்தித்த அழிவைவிட பெரும் அழிவைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.




## நாங்கள் ஹெரொய்ன் பாவிக்கவேயில்லை!

### கைதுசெய்து விடுவிக்கப்பட்ட மாணவனொருவன்

அன்று ஞாயிற்றுக்கிழமை . எங்கள் ரியூசனில் கட்டுப்பாடுகள் அதிகம். வகுப்புக்குள் செல்போனை கொண்டுசெல்ல முடியாது. அதனால் வெளியில் நின்ற வேறு வகுப்பு மாணவன் ஒருவனிடம் செல்போனைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றேன். வகுப்பு முடிந்து வெளியில் வந்தபோது ,செல்போனைக் கொடுத்துவிட்டு சென்றவனைக் காணவில்லை. அவன் இன்னொருவனிடம் என் செல்போனைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான்.

அதனால் என் செல்போனுக்கு , அழைப்பெடுத்தேன். போனை வைத்திருந்தவன், தான் பாடசாலை வளாகத்தில் நிற்பதாகச் சொன்னான். நானும் நண்பர்களும் அங்கே சென்றபோது, திடீரென வந்த பொலிஸார் எம்மைக் கைது செய்தனர். பின்னர் அவர்கள் மலசல கூடக் கட்டடத்துக்குள் நுழைந்தனர். வெளியே வரும்போது அங்கிருந்ததாக நான்கு பைக்கற்றுகளை எடுத்து வந்தனர். அந்தப் பைக்கற்றுகளுக்குள் என்ன இருந்தது? அது எப்படி அங்கு வந்தது? என்பதெல்லாம் எமக்குத் தெரியவே தெரியாது. ஆனால் அதற்குள் ஹெரோய்ன் இருந்ததாகவும், நாங்கள்தான் அதை வைத்திருந்ததாகவும் சொல்லி பொலிஸார் எங்களை அடித்தார்கள். அடி வேதனை தாங்க முடியாமல், வேறு வழியில்லாததால் நாங்கள் தான் வைத்திருந்தோம் என்று சொன்னோம், பின்னர் சிங்களத்தில் எழுதப்பட்ட படிவங்களில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எங்களுக்கு இதுவரை தெரியாது.

## கிளிநொச்சியில் மட்டும் 40 ஹெரோய்ன் வியாபாரிகள்

### பொலிஸ் அதிகாரி தரும் அதிர்ச்சித் தகவல்கள்



முன்னர் கட்டுப்பாடுகளோடு இருந்தவர்களுக்கு யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் எந்த கட்டுப்பாடுகளும் இல்லாமல் போனதால், என்ன செய்கிறோம் என்று தெரியாமலே இவ்வாறான அழிவுப் பாதைக்கு போகின்றார்கள். பிள்ளைகளில் அக்கறையின்மை, கூடிய அன்பு போன்றவற்றால் தம் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், யாரோடு சேர்ந்து திரிகின்றார்கள்? எங்கே,எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் ? என்று பெற்றோர் கண்காணிப்பதில்லை. பெற்றோருக்கு இருக்கக்கூடிய வேலைப்பளு, அக்கறையின்மை, அதீத நம்பிக்கை தூர இடங்களில் தந்தையார்வேலை இவ்வாறு பல காரணங்களால் வீட்டில் பிள்ளைகள், கண்காணிக்கப்படுவதில்லை. அதனால் போதைப்பொருள் வியாபாரிகள், அல்லது முகவர்கள் இலகுவாக இவ்வாறானவர்களை இனங்கண்டு தங்கள் வியாபாரத்தை செய்கிறார்கள். கிளிநொச்சியின் பிரபல கல்விநிலையம் ஒன்றின் க.பொ.த. சாதாரண தர, உயர்தர மாணவர்களில் 90 வீதமான மாணவர்கள் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் நுகர்வதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது . இங்கே வந்து வேறு யாரும் விற்பனையில் ஈடுபடவில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தான் விற்பனையும் செய்கிறார்கள். வறுமையை இனங்கண்டு அவர்களை விற்பனையாளர்களாகச் சிலர் மாற்றுகிறார்கள். இவ்வாறு கிளிநொச்சியில் 40 வரையான போதைப்பொருள் வியாபாரிகள் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஒரு தீக்குச்சியின் மருந்து அளவிலான ஹெரோயினை "முள்ளு" என்று சொல்வர். அந்த ஒரு முள்ளு இப்போது ஆயிரம் ரூபா தொடக்கம் 1500 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. கொரோனா காலத்துக்கு முதல் இந்த 'முள்ளின்' விலை மிக அதிகம். இப்போது அதிகளவானோர் ஹெரோய்ன் விற்பனையில் இறங்கி விட்டனர். அதனால் அது குறைந்த விலைக்கு விற்கப்படுவதோடு, சாதாரணமாகப் பெறக்கூடிய அளவுக்கும் மாறிவிட்டது. . இப்படியான ஆபத்தான நிலையிலேயே கிளிநொச்சி இருக்கிறது.

அப்படியானால் , இவ்வளவு போதைப்பொருள் வியாபாரிகள் இருப்பதாகத் தெரிந்திருந்தும், பொலிஸ் தரப்பினர் ஏன் அவர்களைக் கைதுசெய்யவில்லை என்று கேட்பீர்கள்.

ஹெரோய்னை ஒளித்து வைப்பது சுலபம் என்பதால் இலகுவாக மறைத்து விடுகின்றனர். ஹெரோய்ன் வைத்திருக்கின்றார் என்று சந்தேகத்தில் எவரையும் உடனடியாகக் கைது செய்ய முடியாது... உடமையில் வைத்திருந்தாலோ... நுகர்ந்திருந்தாலோ மட்டுமே கைதுசெய்ய முடியும். அதனால் இந்த வியாபாரிகள் இலகுவாகத் தப்பிவிடுகின்றனர்.

வெறுமனே எதற்கெடுத்தாலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டிக்கொண்டிருக்காமல் பொதுமக்கள் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே அதை ஒழிப்பது சாத்தியம்.

போதைப்பொருள் தொடர்பிலான குற்றத்தில் நாளொன்றுக்கு சராசரியாக இருவராவது கைது செய்யப்படுகின்றனர். வேலைவாய்ப்பு மற்றும் வறுமையை கவனத்தில் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காதுவிட்டால் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது கடினமான காரியம், என அந்தப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# அம்மாளாச்சியே! என்ரை பிள்ளையை திருத்தித் தா....

## கண்ணீரில் கரையும் தாய்

எங்களுக்கு இத்தனை வயதான போதிலும் இதுவரை கஞ்சா ..ஹெரோயின் என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலேயே நாம் இருந்தோம். இந்தக் கிளிநொச்சி மண்ணில் இப்போது நடப்பதை பார்க்க ஏன் சண்டையில் இருந்து தப்பிப்பிழைச்சோம் எண்டு வெறுப்பாக இருக்கிறது. என்னுடைய மகன் நாளாந்த வேலைக்கு போய் வருவான். சம்பளம் முழுவதும் என்னிடம் தந்துவிட்டு தேவைக்கு அளவாகவே வாங்குவான். இவ்வாறு இருந்தவன் ,ஒரு அடிதடி குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். முன்பு வெற்றிலை கூட போடாதவன், சிறைச்சாலையிலிருந்து வரும் போது ஹெரோயின் பாவனையாளனாக வந்தான். முன்பு நல்ல உடல் வாகுடன் இருந்த அவன், இப்ப பஞ்சம் பட்டினியால் பாதிக்கப்பட்ட, கசவருத்தக்காரன் மாதிரி இருக்கிறான் . (இதைக் கூறும்போது அந்தத் தாயின் இரண்டு கண்களிலும் கண்ணீர் வெள்ளம்)


பிள்ளை நாளுக்கு நாள் உருகிக்கொண்டு போறான். சிறையில 'மாத்தையாமார்' வித்து தரச்சொல்லி குடுப்பாங்களாம் அப்பிடியே இவனும் உந்த ஹெரோய்ன் பாவிக்க பழகிட்டான்.

சில நேரங்களில வெறிச்சுப் பாத்தபடி எதையோ பறிகொடுத்தவன் மாதிரி இருப்பான். சாப்பிடுறது குறைவு . எப்படி இருந்த குடும்பம்.. கஷ்ரம் இருந்தாலும் சந்தோஷம் மட்டும் குறைவில்லை... இப்ப எல்லாம் போச்சு... ஒரு பொம்பிளப் பிள்ளையும் இருக்கு. கட்டிக்குடுக்கிற வயசு அதுக்கு. இவன்ரை உந்தப் பழக்கத்தாலை அந்தப் பிள்ளையிட வாழ்க்கை பாதிக்கப் பட்டிடுமோ எண்ட பயம் வேறை...

எனக்கு இப்ப ஐம்பது வயசு கடந்திட்டுது. என்ரை வாழ்க்கையில பொலிஸ் ஸ்ரேசன் வாசலே அறியம். ஆனால் இப்ப உந்த பொடியன்ரை ஹெரோய்ன் பழக்கத்தாலை மூன்றுதரம் போய் வந்தாச்சு .நான் போய் பொலிஸ் பெரியவரிட்ட எல்லாம் கதைச்சிட்டு வந்தனான். திருத்துறதுக்கு தாங்கள் என்ன உதவியும் செய்யத் தயார் எண்டு சொன்னவர். அவனோடையும் கதைச்சன். இனிப் பாவிக்காமல் விடுறன் எண்டு சொல்லுவான். அதுக்குப் பிறகு ஏலாமல் இருக்கெண்டு சொல்லி பாவிச்சிட்டான். அவன்ரை சேர்க்கைகளும் பிரச்சினை . இப்ப ஒரு மாதமா ஒருத்தரையும் வீட்டு வளவுக்க வர நான் விடுறேல்ல.


இந்த ஒரு மாதமா அவனும் வெளியால எங்கையும் போறேல.

என்ர பிள்ளையைத் திருத்தி தாம்மா என்று அம்மாளாச்சிக்கு ஒரு நேர்த்தி வச்சிருக்கிறன் . திருந்தினான் எண்டால் தான், எங்கட குடும்பத்தில சந்தோஷம். இல்லையோ குடும்பம் அழிய வேண்டியதுதான் என அந்தத் தாய் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.



# கூட்டமைப்பைப் பதிவு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)



**கே: தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டு மட்டுமே, அது கொள்கை ரீதியான கூட்டு அல்ல என்று உங்கள் பங்காளிக் கட்சிகளில் ஒன்றின் தலைவியான திருமதி அனந்தி சசிதரன் ஊடக நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். அது உண்மையா?**

**பதில் :** இல்லை. அது அவரின் தனிப்பட்ட கருத்து. சில வேளைகளில் அவர் அந்த நோக்கத்துடன் அதில் வந்து இணைந்திருக்கலாம்.

**கே: உங்களை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்க உங்களின் கூட்டணி முடிவெடுத்தால் நீங்கள் களமிறங்குவதற்குத் தயாராக உள்ளீர்களா?**

**பதில் :** எல்லோரும் ஏற்றுக் கொண்டால் அதனைப் பற்றி யோசிப்பேன். மற்றும்படி அதுபற்றிய திட்டங்கள் என்னிடமில்லை.

**கே: சர்ச்சையை உருவாக்குவதற்காகவாக விக்னேஸ்வரன் நாடாளுமன்றில் தனது கன்னியுரையை 'தமிழர்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள்' என்ற சாரப்பட ஆற்றினார்?**

**பதில் :** விக்னேஸ்வரன் மிக நீண்டகாலமாக ஊடகங்களுக்கு கேள்வி ,பதில் எழுதி வந்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய விடயங்களை அவர் அதில் ஏற்கனவே கூறியிருக்கின்றார். இங்கு சர்ச்சையை உருவாக்கியது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களே தவிர விக்னேஸ்வரன் அல்ல.

இந்தச் சர்ச்சைக்கு பிள்ளையார் சுழி போட்ட மனுஷ நாணயக்கார, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர். தெற்கில் ராஜபக்சக்கள் அதி உச்ச இனவாதத்தை தூண்டி வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்துள்ளார்கள். இப்போது ராஜபக்சக்களின் வாக்கு வங்கியை உடைத்து தமது வாக்கு வங்கியை சஜித் தரப்பு அதிகரிக்க வேண்டுமானால், ராஜபக்சக்களை விட இனவாதத்தை தூண்ட வேண்டும். இந்தக் குறுகிய அரசியல் நோக்கத்துக்காகத்தான் அவர்கள் இதனைச் சர்ச்சையாக்கினார்கள்.

**விக்னேஸ்வரன் மிக நீண்ட காலமாக ஊடகங்களுக்கு கேள்வி ,பதில் எழுதி வந்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய விடயங்களை அவர் அதில் ஏற்கனவே கூறியிருக்கின்றார். இங்கு சர்ச்சையை உருவாக்கியது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களே தவிர விக்னேஸ்வரன் அல்ல. இந்தச் சர்ச்சைக்கு பிள்ளையார் சுழி போட்ட மனுஷ நாணயக்கார, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்.**

**கே: நீங்கள் கூறிய படி கேள்வி பதில் ஊடாக ஏற்கனவே வெளிப்படுத்திய விடயங்களை நாடாளுமன்றத்தில் கூற வேண்டிய அவசியம் விக் னேஸ்வரனுக்கு ஏன் ஏற்பட்டது?**

**பதில் :** வீதியில் செல்பவர்கள் கூறுவதை எவரும் கேட்கமாட்டார்கள். நாடாளுமன்றத்தில் சொல்லும் போதுதான் அதற்குரிய கனதி இருக்கும். தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்ற உண்மையை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டால் பல பிரச்சினைகள் தீரும்.

**கே: தமிழர்களுக்கு சுயநிர்ணய உரித்துண்டு என்று விக்னேஸ்வரன் இப்போது நாடாளுமன்றில் உரையாற்றித்தான் தெரியவேண்டுமா?**

**பதில் :** சுயநிர்ணய உரிமை எங்களுக்கு உண்டு என்பதைச் சொல்லி சொல்லி நாங்கள் போராடாத வரையில் அது எங்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

**கே: விக்னேஸ்வரனின் உரை தொடர்பில் சிங்கள சமூகம் இவ்வளவு தூரம் எதிர்வினையாற்றியும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இராஜதந்திர மொழியில் கூட எந்தப் பிரதிபலிப்பும் காட்டவில்லை. தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் திரும்பத் திரும்பக் கூறும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இப்போது தமிழர்களை நட்டாற்றில்தானே கைவிட்டுள்ளது?**

**பதில் :** நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரம்தான் முடிந்துள்ளது. அதற்குள் எல்லாம் நடந்து விடும் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது. என்னைப் பொறுத்த வரையில் தமிழர்களை இந்தியா கைவிட்டதாக சொல்ல மாட்டேன். எங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**கே: ராஜபக்சக்கள் அரசுடன் இப்படி வாய்ச்சவால்களை விட்டு உங்கள் கட்சி தமிழ் மக்களுக்காக எதைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றது?**

**பதில் :**விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் பேசும் போது வாய்ச்சவாலாக எதையும் பேசவில்லை. இப்படியொரு சலசலப்பை ஏற்படுத்தக் கூடியளவுக்கு நான் எதுவும் பேசவில்லை என்று விக்னேஸ்வரனே கூறியிருந்தார்.

ராஜபக்ச அரசிடமிருந்து நேரடியாக நீங்கள் எதுவும் பெறமுடியாது. 13ஆவது திருத்தமே இருக்குமோ இல்லையோ என்ற நிலையில்தான் இருக்கின்றோம்.

13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்று கூறிய மிலிந்த மொறகொடதான் அமைச்சரவை அந்தஸ்துடன் இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இலங்கை அரசு பல விடயங்களை திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றது. அப்படியானதொரு அரசு தமிழ் மக்களுக்கு தீர்வு தரும், அவர்களுடன் பேச்சு நடத்தி தீர்வைப் பெறலாம் என்று கொஞ்சம் கூட நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தமிழ் மக்களின் இருப்பாவது ஆகக் குறைந்தது பாதுகாக்கப்பட வேண்டும்.




# துரியோதனர்களின் நீதி

○ ஆரதி

மகாபாரதம் தொலைக்காட்சித் தொடரைப் பல கோடிக்கணக்கானோர் பார்த்திருக்கிறார்கள். இன்னும் அந்தத் தொடர் பல 'சனல்களில்' ஒளிபரப்பாகிக் கொண்டேயிருக்கிறது. இப்பொழுதும் அதற்குப் பார்வையாளர்கள் அதிகமே. தமிழ் உள்படப் பல மொழிகளில் அதைப் பார்க்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டிருப்பதும் இதற்குக் காரணம். இன்னும் பல தலைமுறைகளுக்கு அதற்கான பார்வையாளர்கள் - ரசிகர்கள் இருப்பர். இதைத் தயாரிப்பதற்கு 100 கோடி ரூபா செலவிடப்பட்டது. இந்தக் கணக்கு 2013 க்கு முன்னையதாகும்.

ஏற்கனவே எமக்கு நன்றாகத் தெரிந்த பாரதக் கதைதான். ஆனால் அதைத் திரையில் காட்சிரூபமாக, அதற்கான களம், பாத்திரங்கள் என்று காணும்போது எமக்கு உண்டாகும் ஈர்ப்பும் அனுபவமும் வேறாகிறது. அந்தக் கதை நிகழ்வதை நேரில் பார்க்கிற மாதிரியான ஓர் உணர்வு. அந்தப் பாத்திரங்களை நேரிலே தரிசிப்பதைப் போன்ற ஒரு அனுபவம். இதனால்தான் அந்தத் தொடருக்கு அப்படியொரு மவுசு. பாரதக்கதையை வெவ்வேறு வடிவங்களில் சினிமாவிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பார்த்திருக்கிறோம். கர்ணன் என்ற படம் கூட மகாபாரதக் கதையின் கூறுகளில் ஒன்றே. ஆனால், அது தனித்துத் தெரிகிறது. தனித்துவமாகவும் உள்ளது. இப்படிப் பலவுண்டு.

இதிகாசம், புராணம், காப்பியம் போன்றவற்றை மையமாகவோ, தழுவியோ எடுக்கப்படும் சினிமாவுக்கு அல்லது தொலைக்காட்சித் தொடர்களுக்கு எப்போதும் உள்ள மதிப்பு அவை 'கிளாஸிக்' தன்மை வாய்ந்தவை என்பதாகும். அந்தக் கிளாஸிக் எங்களுடைய மனதில் பல விதமான கற்பிதங்களை (Images) உருவாக்கும் தன்மையுடையது. அதனால்தான் உலகமெங்கும் இதிகாசம், புராணம், காப்பியம் போன்றவற்றை பிரமாண்டமாகச் செலவழித்துத் திரைக்காக உருவாக்குகிறார்கள். அந்த அளவுக்கு இந்தக் 'கிளாஸி'க்குக்கு மதிப்புண்டு. அதனால்தான் அது 'கிளாஸிக்'காக உள்ளது. இப்போது இதில் ஒரு வேறுபாட்டை நிகழ்த்துவதற்கு முயற்சிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுவரையான மகாபாரதம் நாமறிந்த விதமான பாண்டவர், கிருஸ்ணன் நோக்கு நிலையிலானது. இனி வரப்போகிற மகாபாரதத்தை, துரியோ தனா தியர்களின் நோக்கிலிருந்து - கௌரவர்களின் நோக்கு நிலையிலிருந்து படமாக்கலாமா என்று சிந்திப்ப தாகத் தகவல். இதுவும் ஒருவகையில் சுவா ரஸ்யமாகத்தா னிருக்கும். கௌரவர்களுடைய நியாயம், அவர்களுடைய தரப்பு என்பது இங்கே கவனம் (Focusing) பெறும். ஜனநாயகப் பண்பின் அடிப்படையில் ஒரு தரப்பு நியாயங்கள் மட்டுமே பேசப்படுவது தப்பாகும். மறுதரப்பின் நியாயங்களும் பேசப்பட வேண்டும். அதற்கான களமும் சந்தர்ப்பமும் அளிக்கப்பட வேண்டும். அப்படியென்றால், இன்றைய ஜனநாயக நிலவரப்படி கௌரவர்களுடைய நியாயம் - தரப்பு பேசப்படப்போகிறது.



அவர்களுக்கு எப்படி நியாயம் இருக்க முடியும்? என்று இதற்கு எதிராகப் பல கலகக் குரல்கள் எழலாம். எழட்டுமே. இன்று சர்ச்சைகள்தானே வியாபாரத்துக்கும் விளம்பரத்துக் கும் நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்றன. அதைப்போல ஒரு பென்னாம் பெரிய அறிமுகத்தை இந்தச் சர்ச்சைகள் புதிய - மாற்று மகாபாரத்துக்கு கிடைக்கச் செய்தால் நாமும் அந்த மறுபக்கத்தைப் பார்த்து விடலாம். எப்போதும் மனித மனத்துக்கு ஒரு பெருவிருப்பமுண்டு, அது எதிலும் மறுபக்கத்தைப் பார்க்க விரும்பும். இந்த உளவியலைச் சரியாகப் பயன்படுத்த விளைகிறார்கள் போலும். இதற்கு கௌரவர்களை வைத்துப் பயன்படுத்த முயற்சிக்கி றார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஒரு வகையில் இதுவும் சரிதான். ஆனால், இதற்கப்பால் வரலாறு முழுவதிலும் கௌரவர்களே பழியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பழியைப் போக்கிடப் புதிய வடிவம் அவர்களுக்கு உதவக்கூடும். அப்படியென்றால் நாமும் ஒரு புதிய அனுபவ, அறிதற் பிராந்தியத்துள் நுழையலாம்.

ஏற்கனவே மகாபாரதத்தைக் கட்டுடைத்துப் பல வடிவங்களில் கலைப் பெறுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கதைகளாக, காவியங்களாக, திரைப்படங்களாக, தொலைக்காட்சித் தொடர்களாக, நாவல்களாக, கவிதைகளாக, ஓவியங்கள், சிற்பங்கள் வழியாக.

ஆனால், ஒட்டு மொத்தமாக இப்படி கௌரவர் நோக்கு நிலையிலிருந்து முழு மொத்தப் படைப்புகள் எதுவும் வரவில்லை. இப்பொழுது கௌரவர் நிலையிலிருந்து உருவாக்கப்படவுள்ள மகாபாரதத் தொடர் புதிய தரிசனங்கள் பலவற்றைத் தரலாம் என்பது ஒரு புறமிருக்க, இதற்குரிய அனுமதியை - ஏற்பை மக்கள் வழங்குவார்களா என்பது கேள்விக்குரியதே. ஏனென்றால் சரியோ தவறோ அது ஒரு மதிப்பார்ந்த வடிவமாக மக்களின் மனதில் பதிந்திருக்கிறது. இந்த மனப்பதிவுக்கு - கலாசார அடையாளத்துக்கு மாறாக ஏதும் நிகழ்ந்தால் அதை ஏற்பதற்கு மக்கள் தயங்குவர். மகாபாரதத்தின் ரசிக கோடிகள் இதை ஏற்க மாட்டார்கள். அவர்கள் நிச்சயமாக இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

மகாபாரதமே ஒரு போரின் கதைதான். அதுவே இன்னொரு போரைத் தொடங்கி விடுமோ என்றே இப்போது நாம் சிந்திக்க வேண்டியுள்ளது; அச்சப்பட வேண்டியுள்ளது.

ஜனநாயக யுகத்திலும் இது அறிவின் யுகம் என்று சொல்லப்படும் காலத்திலும் நாம் மரபுகளை மீறுவதென்பது கடினமாகத்தானுள்ளது. யார் சொன்னது காலம் மாறி விட்டதென்று? காலம் மாறினாலும் எம்முடைய மனதில் அந்த மாற்றங்கள் நிகழவில்லை. அல்லது அதற்கு எம்மவர்கள் இன்னும் தயாரில்லை என்பதே யதார்த்தம். பார்ப்போம்; திட்டமிட்டிருக்கின்றவாறு இன்னொரு கோணத்தில் - கௌரவர் நோக்கு நிலையிலிருந்து அந்த மகாபாரதம் எப்போது நம்முடைய கண்களுக்கு கிடைக்கும் என்று; அது எப்படியானதாக இருக்கும் என்று.

நீங்களும் எழுதலாம்

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

தொடர்புகளுக்கு
0773165555

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

## மாணவர் கழகம்

78



பெயர்: பி.ஹரசோஜினி
முகவரி: குப்பிளான் தெற்கு, ஏழாலை.
பி. திகதி: 2015.08.13
பாடசாலை: உரும்பிராய் கிட்ஸ் பார்க்

79



பெயர்: பகீதரன் தாரிகன்
முகவரி: 958/26 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
பி. திகதி: 2014.11.30
பாடசாலை: யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

80



பெயர்: ஜெ.நிதுசனன்
முகவரி: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம்
பி. திகதி: 2020.03.07
பாடசாலை: யாழ்/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.